Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ் : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



தெளிவான வானிலை
சிறு மழைக்கான
சாத்தியம் உண்டு.
34°C 27°C

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 180 | வள்ளுவர் ஆண்டு: 2044 | வைகாசி 11, சனி 25.05.2013

உலகம்



பக். 06
தாக்குதல்கள் தொடரும்: அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா திட்டவட்டம்

இந்தியா



பக். 07
இந்திய பெருங்கடல் பிராந்திய பாதுகாப்புக்கு உத்தரவாதம் மன்மோகன் சிங் தெரிவிப்பு

விளையாட்டு



பக். 21
சிக்குவார்களா சென்னை வீரர்கள்?

# புதுடில்லியில் விரைவில் ஈழத்தவர் ஆதரவு ஆட்சி

## இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலர் பாண்டியன் உறுதி

சென்னை, மே 25
புதுடில்லியில் விரைவில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான ஆட்சி நிச்சயம் அமையும். எதிர்வரும் இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் அது வெளிப்படும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் தா.பாண்டியன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சென்னையில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவுதின நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரை நிகழ்த்து கையிலேயே பாண்டியன் இதனைத் தெரிவித்தார்.



ஈழத் தமிழர்களுக்கு ஆதரவுமிக்க ஆட்சியொன்று புதுடில்லியில் வெகுவிரைவில் அமையும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. அதன் மூலம் ஈழத் தமிழர் பிரச்சினைக்கு நியாயமான தீர்வினை விரைவாக எட்டுவதற்கான அழுத்தத்தை இலங்கை அரசுக்கு கொடுக்க முடியும் என்றும் பாண்டியன் தனது உரையில் குறிப்பிட்டார்.

முள்ளிவாய்க்காலில் காவு கொள்ளப்பட்ட எமது உறவுகளின் நினைவு நிகழ்வில் கலந்துகொண்டிருக்கும் இந்த வேளையில் அவர்கள் எந்த இலட்சியத்துக்காக மடிந்தார்களோ அந்த இலட்சியம் விரைவில் நிறைவேறும் என்றும் அவர் கூறினார்.

தமிழகத்தைப் பொறுத்தவரை முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு ஈழத் தமிழர் ஆதரவும் விழிப்புணர்வும் ஏற்பட்டுள்ளது. தமிழக மாணவர்களின் போராட்டங்கள் ஈழத் தமிழர்களின் துன்பங்களையும் வேதனைகளையும் வெளி உலகுக்கும் இந்திய மத்திய அரசுக்கும் இடித்துரைத்துள்ளன என்றும் பாண்டியன் குறிப்பிட்டார்.

அடுத்த ஆண்டு நடைபெறும் இந்திய நாடாளுமன்ற தேர்தலின் போது ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான ஆட்சி புதுடில்லியில் அமைக்கப்படும் என்றும் அதன் மூலம் ஈழத் தமிழர் பிரச்சினைக்கு நியாயமான தீர்வை எட்டுவதற்கு வாய்ப்புக் கிட்டும் என்றும் பாண்டியன் தனது உரையில் மேலும் கூறினார். (த)

## 90 க்கு முந்திய பட்டியலை கோரும் படையினர்

முல்லைத்தீவு, மே 25
1990 ஆம் ஆண்டுக்கு முந்திய வாக்காளர் பெயர்ப் பட்டியலை முல்லைத்தீவு மாவட்ட பிரதேச செயலாளர்களிடம் புலனாய்வாளர்கள் கோரி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தம்மைப் புலனாய்வாளர்கள் என்று கூறிக் கொண்டு இராணுவ முகாமிலிருந்து வருவோர் இந்தப் பழைய வாக்காளர் பெயர்ப் பட்டியலைக் கோரியுள்ளனர் என்று அதிகாரிகள் கூறினர்.

1983 ஆம் ஆண்டுக்கும் 2009 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் வட மாகாணத்திலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டவர்களை வாக்காளர்களாகப் பதிவு செய்யும் சட்ட வரைவு நாடாளுமன்றில் விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இவ்வாறானதொரு நிலையிலேயே புலனாய்வாளர்கள் 1990 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலைக் கோரியுள்ளனர். (த-5)

## வேம்பில் பெருகும் பால்: வற்றாப்பளையில் அதிசயம்



(மேலதிக செய்தியும் படங்களும் 4 ஆம் பக்கத்தில்)

## ஆள்களைக் கடத்திய 4 தமிழர்கள் டொமினிக்கன் குடியரசில் கைது

சன்ரோ டொமிங்கோ,மே 25
இந்தியா மற்றும் மத்திய கிழக்கில் இருந்து போலிக் கடவுச்சீட்டுகளைப் பயன்படுத்தி சுமார் 60 குடியேற்ற வாசிகளைக் கனடா, அமெரிக்காவுக்குள் கடத்திய குற்றச்சாட்டின் பேரில் இலங்கையைச் சேர்ந்த நான்கு தமிழரை டொமினிக்கன் குடியரசு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்கள் குடியேற்ற வாசிகளை ஐரோப்பாவில் இருந்து ஹெய்ட்டிக்கும், அங்கிருந்து டொமினிக்கன் குடியரசுக்கும் கடத்த விருந்ததாக தேசிய புல

தொடர்ச்சி: பக்கம் 24

## வெசாக் தினத்தில் பிக்கு தீக்குளிப்பு

### மாடு வெட்டுவதை எதிர்த்து



கொழும்பு, மே 25
கண்டி புனித பிரதேசத்தில் மாடு அறுப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து புனித வெசாக் தினமான நேற்று தலதா மாளிகைக்கு முன்னால் பிக்கு ஒருவர் தீக்குளித்த சம்பவமானது பௌத்தர்களுக்கிடையே கடும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் குறித்த பிக்குவின் நிலை கவலைக்


தொடர்ச்சி: பக்கம் 24

## 21 இலங்கையர்கள் கேரளாவில் கைது

### ஆஸி.செல்ல முயன்றவேளை

புதுடில்லி,மே 25
சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்குத் தப்பிச் செல்ல முயன்ற 21 இலங்கை அகதிகள் இந்தியாவின் கேரளா மாநிலத்தின் ஏர்ணாகுளம் பிரதேசத்தில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழக கியூ பிரிவு பொலிஸார் மற்றும் கேரளப் பொலிஸார் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்



பில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின்படி இந்தச் சுற்றி வளைப்பு மேற்

தொடர்ச்சி: பக்கம் 24

## தடம் புரண்டது 'ஹைஏஸ்' கொடிகாமத்தில் பெண் சாவு

தென்மராட்சி, மே 25
வேகமாக வந்த ஹைஏஸ் வாகன முன் சில்லு திடீரென வெடித்ததில் ஏ-9 வீதியில் மதகு அமைப்பதற்கு போடப்பட்டிருந்த தடைக் கம்பத்துடன் அது மோதித் தடம் புரண்டது. இதில் பெண் ஒருவர் உயிரிழந்தார். அதில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மேலும் ஆறு பேர் படுகாயமடைந்தனர்.

நேற்று முன்தினம் காலை மல்லாகத்திலிருந்து வவுனியா சென்று திரும்பும் வழியில் இரவு 10 மணியளவில் கொடிகாமம் இராமாவில் ஆலயத்துக்கு அருகில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

மல்லாகம் காலகண்டர் நீராவியடியைச் சேர்ந்த மகேந்திரம் செந்தூர்ச் செல்வி (வயது-47) என்பவரே உயிரிழந்தவராவார். இவரது சடலம் சாவகச்சேரி வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

வாகனத்தில் பயணித்த மல்லாகம் காலகண்டர் ஆலய பூசகர் வைரமுத்து

தொடர்ச்சி: பக்கம் 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச மன்னிப்புச் சபை மீது இலங்கை இராணுவம் சீற்றம்

## புலம்பெயர் தமிழரின் கைப்பாவை எனவும் தாக்கு

கொழும்பு, மே 25

போர்க்குற்றவாளிகள் இலங்கையில் சுதந்திரப் பறவைகளாக உலாவுகின்றனர் என்று சர்வதேச மன்னிப்புச்சபை சுமத்தியுள்ள குற்றச்சாட்டை அடியோடு நிராகரித்த இராணுவம், புலம்பெயர் தமிழர்களின் கைப்பாவையாக மன்னிப்புச்சபை செயற்பட்டு இலங்கைக்கு எதிராக இது போன்ற ஆதாரமற்ற பொய்க் குற்றச்சாட்டுகளை முன்வைத்து சர்வதேச ரீதியில் தமக்குள்ள நற்பெயரை இழக்கின்றது என்றும் தெரிவித்தது.

இலங்கையில் போர்க்குற்றம் இடம்பெற்றதற்குத் தகுந்த ஆதாரங்கள் இருப்பின் அவற்றைச் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கவேண்டும் என்று இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய, மன்னிப்புச்சபையிடம் கோரிக்கை விடுத்தார்.

அதேவேளை, தீவிரவாதிகளிடமிருந்து 2 இலட்சத்து 95 ஆயிரம் மக்களை மீட்ட, 11 ஆயிரம் முன்னாள் போராளிகளுக்குப் புனர்வாழ்வளித்து அவர்களை சமூகமயப்படுத்திய இராணுவமா போர்க்குற்றம் புரிந்தது என்றும் அவர் கேள்வி எழுப்பினார். 2012ஆம் ஆண்டு உலகளாவிய ரீதியில் மனித உரிமைகளின் நிலைப்பாடு குறித்து ஆய்வு நடத்தி 2013ஆம் ஆண்டுக்கான அறிக்கையை சர்வதேச மன்னிப்புச் சபை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வெளியிட்டது.

போர் முடிவடைந்துள்ள நிலையிலும் போர்க்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் ஆகியவை குறித்து விசாரணைக்குட்படுத்தப்படவில்லை. போர்க்குற்றவாளிகள் இலங்கையில் சுதந்திரமாக உலா வருகின்றனர் என்று அந்த அறிக்கையில் சர்வதேச மன்னிப்புச் சபை குற்றஞ்சாட்டியிருந்தது.

இது குறித்து வினவியபோதே இராணுவ ஊடகப் பேச்சாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''இலங்கையில் போர்க்குற்றவாளிகள் சுதந்திரமாக உலா வருகின்றனர் என சர்வதேச மன்னிப்புச் சபை முன்வைத்துள்ள குற்றச்சாட்டை நாம் அடியோடு நிராகரிக்கிறோம். இராணுவத்தால் திட்டமிட்ட முறையில் போர்க்குற்றங்கள் நிகழ்த்தப்படவில்லை.

இதுபோன்ற குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் மன்னிப்புச்சபை போர்க்குற்றங்கள் எப்போது, எங்கு, எந்த நேரத்தில் இடம்பெற்றன என்று தம்மிடமிருக்கும் ஆதாரங்களை சட்டமா அதிபர் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கவேண்டும்.

போர்க்குற்றம் என்பது யுத்த காலத்தில் தான்தோன்றித்தனமாகச் செய்யப்படும் குற்றச்செயல்களாகும். ஆனால், போரின்போது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இராணுவத்தினர் அவ்வாறான குற்றச்செயலில் ஈடுபடவில்லை.

தீவிரவாதிகளிடமிருந்து 2 இலட்சத்து 95 ஆயிரம் மக்களைப் பாதுகாப்பாக மீட்டெடுத்தோம். இவர்களை நாம் மீட்டெடுத்தபோதும் தீவிரவாதிகள் அவர்களைத் தாக்கினர்.

இவ்வாறாக பாதுகாப்பாக மீட்கப்பட்டவர்களுக்கு வீடுகளை அமைத்துக்கொடுத்து மீள்குடியேற்றம் செய்துள்ளோம். அதுமட்டுமல்லாது, தற்போதும் இந்த மக்களின் அபிவிருத்திக்கு இராணுவத்தினர் பெரும் பங்காற்றிவருகின்றனர். அத்துடன், 11 ஆயிரம் முன்னாள் போராளிகளுக்குப் புனர்வாழ்வளித்து அவர்களை சமூகத்துடன் இணைத்துள்ளோம். அவர்களுக்கு நிம்மதியான வாழ்வை ஏற்படுத்திக்கொடுத்துள்ளோம்.

இப்படியாக சமூகநல நோக்குடன் செயற்பட்ட – செயற்படுகின்ற இராணுவமா போர்க்குற்றம் புரிந்தது? போர்க்குற்றம் புரிந்திருந்தால் 11 ஆயிரம் முன்னாள் போராளிகளுக்குப் புனர்வாழ்வளித்து அவர்களை எப்படி இராணுவம் சமூகமயப்படுத்தும்? எம் மீது பொய்க்குற்றச்சாட்டுகளைச் சுமத்தும் சர்வதேசத்தினர் இவற்றை நன்றாகப் புரிந்துகொள்ளவேண்டும்.

இதைவிடுத்து, புலம்பெயர் தமிழர்களின் கைப்பாவையாகச் செயற்பட்டு சர்வதேச மன்னிப்புச்சபை எம்மீது போர்க்குற்றம் சுமத்தி சர்வதேச ரீதியில் தமக்குள்ள நற்பெயரை இழக்கின்றது'' – என்றார் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய.

# திருமலை நகரசபையுடன் அமெரிக்கா உடன்படிக்கை

## இலங்கை அரசு கொதிப்பு

இலங்கை அரசின் அனுமதியைப் பெறாமல், திருகோணமலையில் அமெரிக்கன் நிலையத்தை அமைப்பதற்கு திருகோணமலை நகரசபையுடன் அமெரிக்கத் தூதரகம் புரிந்துணர்வு உடன்பாடு செய்துகொண்ட விவகாரம், இலங்கை அரசுக்கு கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

திருகோணமலை நகரசபையுடன் இணைந்து பொது தகவல் மற்றும் செயற்பாட்டு நிலையத்தை அமைப்பதற்கு கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் புரிந்துணர்வு உடன்பாட்டை செய்து கொண்டுள்ளது.

இந்த உடன்பாட்டில் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரக கலாசார, கல்வி, ஊடக விவகாரங்களுக்கான பணிப்பாளர் கிறிஸ்தொபர் டீலும், திருகோணமலை நகரசபை முதல்வர் கே.செல்வராசாவும் கையெழுத்திட்டனர்.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரக பொதுசன விவகார பிரிவுக்கும் திருகோணமலை நகரசபைக்கும் இடையிலான இந்த உடன்பாடு கடந்த புதனன்று திருகோணமலை பொது நூலகத்தில் வைத்து கையெழுத்திடப்பட்டுள்ளது.

இதுகுறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு அறிவிக்கப்படவோ அல்லது, அதன் அனுமதி பெறப்படவோ இல்லை.

அனைத்துலக நடைமுறைகளுக்கு அமைய, கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள் உள்ளூர் அதிகாரிகளுடன் ஏதாவது இணக்கப்பாட்டை ஏற்படுத்த முன்னர், அது குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சுக்குத் தெரியப்படுத்தவோ அல்லது அதன் அனுமதியைப் பெறவோ வேண்டும் என்று இலங்கை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

எனினும் எந்த அனுமதியும் பெறப்படாமல் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் திருகோணமலை நகரசபையுடன் செய்து கொண்டுள்ள புரிந்துணர்வு உடன்பாடு அரசுக்கு விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

திருகோணமலை நகரசபை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிர்வாகத்தின் கீழ் இருந்து வருகின்றது.

அமெரிக்கன் கோணர் எனப்படும் பொது தகவல் மற்றும் செயற்பாட்டு நிலையங்களை அமெரிக்கா ஏற்கனவே யாழ்ப்பாணத்திலும் கண்டியிலும் நிறுவியிருப்பது குறிப்பிடத்தக்கது.

# தொடர்ந்தும் அநியாயங்களை வேடிக்கை பார்க்க முடியாது

## அரசு அலட்சியம்; அமைச்சர் ஹக்கீம் காட்டம்

கொழும்பு, மே 25

அரசு எங்களை அலட்சியப் போக்குடன் நடத்துகின்றது. உண்மையான நண்பர்கள் யார் என்பதை இந்த அரசு பிரித்தறிந்து கொள்ள வேண்டும். தொடர்ந்தும் எங்களுக்கு எதிராக அநியாயங்கள் இடம்பெறும் போது அவற்றை நாம் பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

- இவ்வாறு நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

சாய்ந்தமருதில் நேற்று மாலை இடம்பெற்ற நூலகத்திறப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

கிழக்கு மாகாணத்தில் இன்று ஐந்து உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சியை முஸ்லிம் காங்கிரஸ் கையில் வைத்துக்கொண்டிருக்கின்றது. ஆனால், அரசு எங்களை அலட்சியப் போக்குடன் நடத்துகின்றது.

முஸ்லிம் காங்கிரஸை அரசிற்குள்ளே எதிரியாக வைத்துக்கொண்டு தங்களுடைய அரசியல் முன்னெடுப்புக்களை மேற்கொள்ள அரசிற்கு உள்ளே உள்ளவர்களும், வெளியே உள்ளவர்களும் முயற்சி செய்துகொண்டிருக்கின்றனர். இது தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸின் உண்மையான போராளிகள் அவதானமாக இருக்க வேண்டும். அதேபோன்று முஸ்லிம் காங்கிரஸை அரசில் இருந்துவெளியேற்றி ஆட்சியை கவிழ்க்கவும் சிலர் முயற்சி செய்து கொண்டிருக்கின்றனர். இந்த அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் ஜனாதிபதியிடம் கூறி வைத்துள்ளேன் – என்றார்.

# தந்தையின் கவனயீனத்தால் குழந்தை உயிரைக் குடித்தது ஜீப்

தங்காலை, பன்சல பொக்குன வீதியில் உள்ள வீடொன்றில் ஜீப் வாகனத்தின் சக்கரத்தில் நசுங்குண்டு ஒரு வயதுக் குழந்தை ஒன்று பரிதாபமாக உயிரிழந்தது.

வீட்டின் முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஜீப் ஒன்றை பின்னால் செலுத்த முயன்றபோது குறித்த குழந்தை ஜீப் சக்கரத்தில் நசுங்குண்டு உயிரிழந்துள்ளது.

நேற்று மு.ப. 10.45 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் காயமடைந்த குழந்தை தங்காலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டது.

அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த குழந்தை பகல் 12 மணியளவில் உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தையின் தந்தையே ஜீப்பை பின்னால் செலுத்தினார் என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

# சிறுவனின் உயிர் பறித்த தென்னைமரம்

தென்னைமரம் ஒன்று விளையாடிக்கொண்டிருந்த 6 வயதுச் சிறுவனின் உயிரைப் பறித்த சம்பவம் சிலாபம், நாத்தாண்டியா பகுதியில் இடம்பெற்றுள்ளது.

தும்மலசூரிய, சியம்பலாகஸ்ருப்ப பிரதேசத்திலேயே நேற்றுக்காலை இந்தப் பரிதாப சம்பவம் நிகழ்ந்துள்ளது.

தனது வீட்டின் முன்னால் விளையாடிக்கொண்டிருந்த இச்சிறுவனின் மீது தென்னைமரம் திடீரெனச் சரிந்து வீழ்ந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து இச்சிறுவனை உடனடியாக கல்முருவ வைத்தியசாலையில் சேர்த்த போதிலும், அவன் உயிரிழந்துள்ளான்.

# மரண அறிவித்தல்கள்

## சபாரத்தினம் நாககுமார்



காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் தற்போது ஆஸ்திரேலியாவில் வசித்து வந்தவருமாகிய சபாரத்தினம் நாககுமார் நேற்று (24.05.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் - மகேஸ்வரி தம்பதியரின் இளைய புதல்வனும் நவராணியின் (ஆஸ்திரேலியா) அன்புக் கணவரும் நவரமணன் (ஆஸ்திரேலியா), நவரஞ்சன் (ஆஸ்திரேலியா), நவறஞ்சினி (ஆஸ்திரேலியா), நவரூபி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆறுமுகம்- செல்லம்மா தம்பதியரின் மருமகனும் கந்தசாமி, சிவமணி, இந்திராணி, விமலராணி ஆகியோரின் சகோதரனும் நவநீதகிருஷ்ணன் (யாழ்ப்பாண இந்துக் கல்லூரி ஆசிரியர்), நவநீலயோகராசா (பிரான்ஸ்), சந்திரராணி (ஆஸ்திரேலியா), ரோகினி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஸ்ரீ (ஆஸ்திரேலியா), பிந்து (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஆஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

214/5, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.

தகவல்:
ஆ.நவநீதகிருஷ்ணன்
(மைத்துனர்) 0774598261
(37415)

## தம்பையா சிவபாலசிங்கம்



உடுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா சிவபாலசிங்கம் நேற்று (24.05.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், சந்திராவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தையா- சிவபாக்கியம் தம்பதியரின் மருமகனும், கெங்காதேவி (பிரான்ஸ்), கெங்காதரன், பத்மா தேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், குணரட் ணம் (பிரான்ஸ்), ரஜனிமாலா (ஆசிரி யை, யா/இராமநாதன் கல்லூரி), சிவலிங்கம், சுந்தரலிங்கம், ஸ்ரீதரன் (சுவிஸ்), மனோகரன்(சுவிஸ்), சந்திரலீலா (லண்டன்), லீலாவதி, சிவ பாலன் ஆகியோரின் மைத்துனரும், அரவிந்தன், பார்த்தீபன், பிரதீபன், பிரியா, லக்ஷீன், நிலக்ஷன், கவிஷ்னன் ஆகியோரின் மாமனும், மாரு திகா, கஜப்பிரியா ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.05.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக் கொள்ளவும்.

உடுவில் மேற்கு,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்

## துரையப்பா நடராஜா



தோற்றம்
20.09.1933

மறைவு
25.04.2013

*நீங்கள் காட்டிய வழியில்*
*நாம் செல்கின்றோம்*
*காணும் இடமெங்கும் உம் நினைவுகள்*
*எம் கண் முன்னே தோன்றுகின்றது*
*என்றும் உம் ஆத்மா சாந்திக்காக*
*இறைவனை வேண்டுகின்றோம்.*

நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.

நடராஜா மோட்டர் கறாச்
உரிமையாளர், (ந.பிரபாகரன்),
மற்றும் ஊழியர்கள்,
எஸ்.ஜெயா, கே. சௌந்தர், கே. சுந்தரலிங்கம், றொக்சன்


## வீடு வாடகைக்கு உண்டு

யாழ் நகர மத்தியில் அலுவலக மற்றும் வீட்டுத் தேவைக்கு பாவிக்கக்கூடிய சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:- 078 9484194

## தவறிவிட்டது

அ.ஆனந்தகௌரி என்பவருடைய பென்ரன் தெல்லிப்பளைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் பஸ்சில் தவறிவிட்டது.
தொடர்பு: 0779177277

## வீடு வாடகைக்கு

நிறுவனங்களுக்கும் உகந்தது

கஸ்தூரியார் வீதியும் அரசடி வீதியும் இணையும் வீதியில் 4 அறைகளுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு
(37410) தொடர்பு: 0771440829

## மணல் விற்பனைக்கு

கண்டபாவளை ஆற்றுமண் டிப்பர் மூலம் உங்கள் இடத்துக்கு கொண்டுவந்து தரப்படும்.
(37412) தொடர்பு: 0774735228


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## தர்மத்தைச் சூது கவ்வாமல் நிச்சயப்படுத்தும் நிலை எப்போது?

அதிகார துஷ்பிரயோகங்கள், மனித உரிமைகள் தொடர்பான பொறுப்புக் கூறும் கடப்பாடுகளைப் பொருட்படுத்தாமை என்பன தொடர்பாகக் குரல் கொடுப்போர், அரசாங்க அதிகாரிகளாலும், அரச ஆதரவாளர்களாலும் மிரட்டப்படுகிறார்கள், வேண்டாத தொல்லைகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள்.

இவ்வாறு சுட்டிக்காட்டி உள்ளது சர்வதேச மன்னிப்புச் சபை.

அரச அதிகாரிகளால் தொல்லைகளுக்கு ஆளாக்கப்படுவோரில், நீதித்துறை சார்ந்தோர், மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் ஈடுபடுவோர், மற்றும் ஊடகவியலாளர்கள் அடங்குவர் என்றும் மன்னிப்புச் சபையின் பிந்திய-கடந்த வியாழக்கிழமை- வெளியிடப்பட்ட அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

★ சந்தேக நபர்கள் என்று குறியிடப்படுவோர், எத்தகைய குற்றச்சாட்டுக்களும் இன்றி, பயங்கரவாதத் தடைச் சட்டத்தினைப் பயன்படுத்தி நீண்ட காலத்துக்குத் தடுத்து வைக்கப்படுகிறார்கள்.

★ போர் முடிவடைந்து விட்டாலும், போர்க் குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் என்பன குறித்து விசாரிக்கப்படவில்லை.

★ குற்றங்களில் சம்பந்தப்பட்டோர் சுதந்திரப் பறவைகளாக நடமாடுகிறார்கள்.

★ கட்டாயத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களில் அரசியல் வாதிகள், வர்த்தகப் பிரமுகர்கள், சந்தேகத்தக்கு உரிய குற்றவாளிகள் ஆகியோர் உள்ளடங்கி உள்ளனர்.

மேற்கண்ட குற்றச்சாட்டுக்கள், தகவல்களுக்கு மேலதிகமாக, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கம் பெரும் அசமந்தம் காட்டுவது குறித்தும் அனைத்துலக மன்னிப்புச் சபையின் பிந்திய அறிக்கை புட்டுக் காட்டுகிறது.

போரினால் இடம்பெயர்ந்த மக்களில் மிகப் பெரும் எண்ணிக்கையானோர் இன்னமும் அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்படவில்லை என்பதனையும் அறிக்கை கண்டிக்கும் தொனியில் தொட்டுக்காட்டி உள்ளது.

நீண்ட காலமாக நடைமுறையில் இருந்த அவசரகாலச் சட்டம், அனைத்துலகம் கொடுத்த ''அரிகண்ட''த்தால், இடையறா அழுத்தத்தால், அரசால் நீக்கப்பட்டது. ஆனால் அதில் அடங்கியிருந்த கொடும் சரத்துக்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் இணைக்கப்பட்டன என்பது தெரிந்ததே.

மொத்தத்தில், அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதனால் , மக்களின் வாழ்க்கையில், ஜனநாயக பீதியான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு கட்டுப்பாடோ அல்லது அதீத வடிவிலான அதிகார இறுக்கமோ தளர்ந்து போய்விடும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் ஆலயங்களில் நடைபெறும் சூரன் போர் திருவிழாவின் போது, எருமைக் கடாவின் முகத்தை மாற்றிச் சிங்க முகம் அல்லது சூரன் முகம் பொருத்துவது போன்று, அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டாலும் பயங்கரவாதத் தடைச் சட்டம் அரசுக்குத் தேவையான முறையில் வெகு வேகத்தில் பயன்படுத்தப்படுகிறது என்பதனையே சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

தானே நியமித்த நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதில் சுணக்கம் காட்டும் அரசு, நல்லாட்சிக்குத் தேவையான, பிரதானமான கூறுகளை நடைமுறைப்படுத்தப் பின்நிற்பது, தனக்கு மட்டுமன்றி நாட்டுக்கும் , நாட்டு மக்களுக்கும் சேர வேண்டிய மதிப்புக்கும் தடைக்கல்லாக அமைகிறது.

போதாக்குறைக்கு, இஸ்லாமிய, கிறிஸ்தவ சிறுபான்மைச் சமூகங்களின் பாதுகாப்புக் குறித்து , அவற்றுக்கு எதிரான வன்முறைகள் தரக்கூடிய பாதகங்கள் குறித்து , உணர்ந்து அரசு உரிய தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாது இருப்பதும் அனைத்துலக சமூகத்தை எரிச்சலடையச் செய்துள்ளது.

போர் நடைபெற்ற வேளையில் மனித உரிமைகளும், மனிதாபிமானமும் காலால் மிதிக்கப்பட்டன என்ற குற்றச்சாட்டுகளும் கண்டனங்களும் குவிந்து கிடக்கும் இவ்வேளையில், நல்லிணக்கத்தின் மூலம் நாட்டுக்கு உண்டான மாசுகளை நீக்க அரசு மனங்கொள்ள வேண்டும்.

இனப்பிரச்சினைக்கு மக்கள் ஏற்றுக் கொள்ளத்தக்க தீர்வு ஒன்றைக் காண்பதில் காட்டப்படும் வேண்டாத தாமதமும், தான் நினைப்பதனையே சிறுபான்மையினர் மீது திணிக்கும் நோக்கும், போக்கும் தேசிய- இன-மத நல்லிணக்கத்துக்குக் கவ்வைக்கும் உதவாது.

அதற்குப் பதிலாக , அனைத்துலக சமூகமும், மனித உரிமைகள், மனித நேய அமைப்புகளும் குற்றச்சாட்டுக்களை அடுத்துத் தொகுத்துச் சுட்டிக்காட்டாமல் தடுப்பதற்கான வழிமுறைகளை வகுத்துச் செயற்படுவதும்-

நாட்டின் நலன் கருதி நேர்வழி நின்று, தர்மத்தைச் சூது கவ்வாமல் பார்த்துக் கொள்வதும், கண்காணிப்பதும் அரசின் விருப்பத்துக்குரிய (Preferential) நடவடிக்கையாக, ஆட்சியாக அமைவதற்கான செயல்களை வகுத்து நிறைவேற்றுவதும்-

நாட்டு மக்கள் சமாதான சக வாழ்வை வெகு இலகுவாகவும் , விரைவாகவும் எட்டுவதற்கு வழி செய்யும்.

இந்தப் பேருண்மையை அரசு உணர்வதும் அதன் வழிநின்று செயற்படுவதும் எப்போதோ...?

# ஆலயத்தில் கடலை சாப்பிட்ட 33 பேர் வைத்தியசாலையில்

## திருக்கோவில் பொலிஸார் விசாரணையில்

அம்பாறை.மே 25



திருக்கோவில் பிரதேசத்தைச் சேர்ந்த இந்து ஆலயமொன்றில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற விசேட பூசையின் பின்னர் பிரசாதத்தில் வழங்கப்பட்ட கடலையைச் சாப்பிட்டவர்கள் திடீர் உபாதைக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

திருக்கோவில் மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என் 33 பேர் உபாதைக்குள்ளாகி திருக்கோவில் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

குறித்த ஆலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற விசேட பூசையின் பின்னர் பிரசாதத்தில் வழங்கப் பட்ட அவித்த கடலையைச் சாப்பிட்ட பக்தர்கள் திடீரென மயக்கம், வாந்தி உபாதைக்குள்ளாகி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

12 பெண்களும், 12 சிறுவர்களும், 9 ஆண்களும் இவ்வாறு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

மூன்று வயதுச் சிறுமி ஒருத்தியை அவசர மேலதிகச் சிகிச்சைக்காக கல்முனை அஷ்ரப் ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளதாக திருக்கோவில் மாவட்ட வைத்திய அதிகாரி எம்.தமிழ்த்தாஸன் தெரிவித்தார்.

கடலை சாப்பிட்டதால் ஏற்பட்ட ஒவ்வாமை சம்பவம் தொடர்பில் திருக்கோவில் பொலிஸ் பொலிஸ் பொறுப்பதிகாரி கே.எம்.இப்றாகிம் தலைமையிலான பொலிஸ் குழுவினர் வைத்தியசாலைக்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதேவேளை சம்பவம் தொடர்பில் தகவலறிந்ததும் திருக்கோவில் பிரதேச சபைத் தவிசாளர் வீ.புவிதராஜன், காரைதீவு பிரதேசசபைத் தவிசாளர் செல்லையா இராசையா உட்பட முக்கிய பிரமுகர்கள் பலர் வைத்தியசாலைக்கு விரைந்து பாதிக்கப்பட்டவர்களைப் பார்வையிட்டு ஆறுதல் கூறினர். (ச-30)

# ஆசிரியர் சம்பள நிலுவை வலய மட்டத்தில் வழங்கல்

வடமராட்சி, மே 25

வடமாகாணப் பாடசாலை ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவைப்பணம் தற்போது வலய மட்டத்தில் வழங்கப்பட்டு வருகின்றது.

ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவைப் பணம் வழங்கவென வடமாகாணத்தைச் சேர்ந்த 12 கல்வி வலயங்களுக்குமென 130 மில்லியன் ரூபாவை வடமாகாண ஆளுநர் ஜி. ஏ.சந்திரசிறி ஒதுக்கீடு செய்திருந்தார்.

நீண்ட காலமாக சம்பள நிலுவையைப் பெற்றுக்கொள்ளாத ஆசிரியர்களுக்கு இக்கொடுப்பனவு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியை ஒருவர் 6 இலட்சம் ரூபாவையும், மற்றும் இரு ஆசிரியர்கள் தலா 4 லட்சம் ரூபாவையும் அதிகூடிய சம்பள நிலுவைகளாகப் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-8)

> “ ஆசிரியை ஒருவர் 6 இலட்சம் ரூபாவையும், மற்றும் இரு ஆசிரி யர்கள் தலா 4 லட்சம் ரூபாவையும் அதிகூடிய சம்பள நிலுவைகளாகப் பெற்றுள்ளனர்

# இலக்கமற்ற மோ.சைக்கிளுடன் இளைஞர் ஒருவர் கைது

வலி.வடக்கு, மே 25

இரவு வேளையில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இளவாலைப் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் இளைஞர் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

கடந்த 22ஆம் திகதி இரவு ரோந்து நடவடிக்கையை இளவாலைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிந்திக்க பண்டார தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்டனர்.

அந்த வேளையில் இலக்கமற்ற மோட்டார் சைக்கிளில் தலைக்கவசம் அணியாது வந்தவரை மறித்து சோதனை செய்துள்ளனர். அவரிடம் காப்புறுதி அனுமதிப்பத்திரமோ சாரதி அனுமதிப்பத்திரமோ இருக்க வில்லை. அத்துடன் குறிப் பிட்ட இளைஞரின் நடவடிக்கை சந் தேகத்துக்கிடமானதாக இருந்தது.


சந்தேகம் கொண்ட பொலிஸார் பொலிஸ் நிலையம் கொண்டு சென்று மோட்டார் சைக்கிளைச் சோதனையிட்டதில் மோட்டார் சைக்கிளின் அடிச்சட்ட இலக்கம் அழிக் கப்பட்டுள்ளதுடன் இயந்திரத்தின் இலக்கமும் வேறுபட்டதாகக் காணப்பட்டது.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மல்லாகம் நீதிமன்றத்தில் சந்தேக நபர் முன்னிலைப்படுத்தப்பட்டார். அவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (த-86)



> “ இலக்கமற்ற மோட்டார் சைக்கிளில் தலைக் கவசம் அணியாது வந்தவரை மறித்து சோதனை செய்துள்ளனர்.

# சாவகச்சேரியில் மூன்று மாதங்களில் 127 பேர் வீதி விபத்துக்களில் காயம்



தென்மராட்சி.மே 25

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கடந்த காலாண்டுப் பகுதியில் (ஜனவரி, பெப்ரவரி, மார்ச்) வீதி விபத்துக்களில் சிக்கி 127 பேர் காயமடைந்து சிகிச்சை பெற்றுள்ளதாகவும், இவர்களில் ஒருவர் உயிரிழந்ததாகவும் புள்ளி விவரங்கள் மூலம் அறிய முடிகிறது.

இந்தக் காலப்பகுதியில் வீதி விபத்துக்களில் சிக்கி 100 ஆண்களும் 27 பெண்களும் காயமடைந்துள்ளனர்.

இவர்களில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட 65 பேரில் 39 பேர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர்.

கடந்த வருடம் (2012) இதே காலாண்டுப் பகுதியில் 48 பேர் வீதி விபத்துக்களில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும், கடந்த வருட இறுதிக் காலாண்டுப் பகுதியில் (ஒக்ரோபர், நவம்பர், டிசெம்பர்) வீதி விபத்துக்களில் சிக்கி காயமடைந்த 48 பேர் வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு தலையில் காய மடைந்த 15 பேர் உட்பட 21 பேர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாவும் தெரிய வருகிறது. (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 328 சமுர்த்தி அலுவலர்கள் யாழுக்கு ஜூனில் நியமனம்

யாழ்ப்பாணம்,மே 25

யாழ்.மாவட்டத்தில் 328 சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எதிர்வரும் ஜூன் மாதத்திலிருந்து நியமனம் பெறவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.மாவட்டத்தில் சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடம் தொடர்ந்து நிலவி வருகின்றது. 370 வெற்றிடங்கள் வரை இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நாடளாவிய ரீதியில் உள்ள சமுர்த்தி உத்தியோகத்தர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டிருந்தது. அதனடிப்படையில் வடமாகாணத்தைச் சேர்ந்த பலரும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். தற்போது நேர்முகத் தேர்வுக்குத் தோற்றியவர்களில் 328 பேர் யாழ். மாவட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்களாக நியமிக்கப்படவுள்ளனர். எதிர்வரும் ஜூன் மாதம் முதல் வாரத்தில் இவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

# வேப்பமரத்தில் இருந்து வழிந்தோடுகிறது பால்

### வற்றாப்பளை ஆலயத்தில் அதிசயம்

முல்லைத்தீவு,மே 25

வற்றாப்பளை அம்மன் ஆலயத்தின் ஈசான மூலையில் நிற்கும் சிறிய வேப்பமரம் ஒன்றிலிருந்து நுரை நுரையாகப் பால் பொங்கி வழியும் அதிசயத்தை ஆயிரக்கணக்கான மக்கள் பார்வையிட்டு வருகின்றனர் என்று ஆலயத்தின் பிரதம குரு தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் பாக்குத் தெண்டல், உப்பு நீரில் விளக்கேற்றி வைக்கும் நிகழ்வு என்பன முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத்தில் ஆரம்பமாகின. இவ்வேளையிலேயே இந்த அதிசயம் நிகழ்ந்துள்ளது.

இந்தச் சிறிய வேப்பமரத்தினது அடிப்பாகம் ஏறக்குறைய 30 சென்றிமீற்றர் சுற்றுவட்டம் கொண்டது. இதன் மேற்கிளையிலிருந்து பால் பொங்கி வருவது போன்று வெள்ளை நிறத்திலான திரவம் பொங்கியெழுந்து அடிப்பாகத்தை நனைக்கின்றது. அது இனிப்புச் சுவையைக் கொண்டிருப்பதாக மக்கள் தெரிவித்துள்ளனர். இந்தப் புதுமையைக் கேள்விப்பட்டதும் ஆயிரக் கணக்கான மக்கள் இந்த மரத்தைச் சூழ்ந்து



கொண்டு அதிலிருந்து பொங்கி வரும் திரவத்தைத் தமது நாக்கில் தடவி வருகின்றனர்.

இது தொடர்பாக ஆலயத்தின் பிரதம குருவான சிவஸ்ரீ சிவஸ்கந்ததாசன் குருக்களிடம் கேட்டபோது, நாம் இதனை ஆரம்பத்தில் ஒரு சாதாரண நிகழ்வாகவே எடுத்துக் கொண்டோம். ஆனால் இந்தச் சிறிய வேப்ப மரத்திலிருந்து பால் போன்று பொங்கியெழும் காட்சி தென்படுவது அன்னையின் அற்புதமான செயல் என்பதை உணர்ந்து கொண்டோம். ஆயிரக்கணக்கான மக்கள் இதனைப் பார்வையிட்டுச் செல்கின்றனர் என்று தெரிவித்தார். மேலும் நாளை மறுதினம் அதிகாலை வேளையில் காட்டுவிநாயகர் ஆலயத்திலிருந்து மடைப்பண்டங்கள் எடுத்துவரப்பட்டும் பொங்கலுக்கான விசேட பூசை வழிபாடுகள் ஆரம்பமாகும் என்றும் அவர் மேலும் கூறினார். அத்துடன் வழியும் பாலை பக்தர்கள் போத்தலில் ஏந்தி வீட்டுக்கு எடுத்துச் செல்வதைக் காண முடிகிறது. (ஒ-க-435-422)

# வடக்குத் தேர்தலை ஒத்திவையுங்கள்

### தேசப் பற்றுள்ள இயக்கம் மீண்டும் கோரிக்கை

கொழும்பு,மே 25

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை ரத்துச் செய்யும் வரை தேர்தல் ஒத்திவைக்கப்பட வேண்டும் என தேசப் பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் டாக்டர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் மீள்குடியேற்றமும், 13 ஆவது திருத்தச் சட்டமும் முக்கிய இடம் பெறுகின்றது. 13 ஆம் திருத்தச் சட்டத்தை ரத்துச் செய்யாமல் வடக்கில் தேர்தல் நடைபெற்றால் அது அரசுக்கு அஸ்தமனமாகும்.

மீள்குடியேற்றப்படாமல் மக்கள் பரிதவிக்கிறார்கள். அதிகாரங்கள் பறிக்கப்படாவிட்டால் மீண்டும் தமிழீழக் கொள்கைகள் தலை தூக்கும். பொது நலவாய நாடுகளின் மாநாடு இடம்பெறவிருப்பதால் வடக்குத் தேர்தலை செப்ரெம்பரில் நடத்துவோம் என ஜனாதிபதி கூறினாலும் அது ஒத்தி வைக்கப்படலாம் -என்றார்.



“ மீள்குடியேற்றப்படாமல் மக்கள் பரிதவிக்கிறார்கள். அதிகாரங்கள் பறிக்கப்படாவிட்டால் மீண்டும் தமிழீழக் கொள்கைகள் தலைதூக்கும்.

இந்தியாவுக்கும் பிரபாகரனைக் கொலை செய்ய வேண்டிய தேவை இருந்தது. அந்தத் திட்டத்தை இலங்கையை வைத்து நடத்தி முடித்தது. அதற்காக இலங்கை இந்தியாவின் காலனித்துவ நாடாகிவிட முடியாது என்றும் அவர் கூறினார். (த-ரி)

# கொழும்பு துறைமுகத்தில் தீ

கொழும்பு,மே 25

கொழும்புத் துறைமுகத்தின் களஞ்சியசாலையொன்றில் நேற்று அதிகாலை தீ பரவியமைக்கான காரணத்தைக் கண்டறியும் பரிசோதனைக்காக அரச இரசாயன பகுப்பாய்வாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

துறைமுகத்திலுள்ள களஞ்சியசாலையொன்றில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் பரவிய தீ பின்னர் முழுமையாகக் கட்டுப்பாட்டுக் குள் கொண்டுவரப்பட்டதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான புத்திக சிறிவர்த்தன தெரிவித்துள்ளார். கொழும்புத் துறைமுகத்தின் ஆடைக் களஞ்சியம் ஒன்றிலேயே நேற்று அதிகாலை தீ பரவியது.

தீயைக் கட்டுபடுத்துவதற்காக, 8 தீயணைப்பு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டதாகத் தீயணைப்புச் சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தத் தீயினால் களஞ்சியசாலையில் வைக்கப்பட்டிருந்த பொருள்கள் சேதமடைந்துள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவும், கடற்கரைப் பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (த)

# தமிழரசுக் கட்சியின் யோசனை நிராகரிப்பு

கொழும்பு,மே 25

தமிழரசுக் கட்சியினால் முன்வைக்கப்பட்ட உயர்மட்டக் குழு யோசனையை ஈ.பி.ஆர்.எல்.எப்., தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட் ஆகிய கட்சிகள் நிராகரித்துள்ளன.

இதனால் இந்தக் கட்சிகளால் முன்வைக்கப்பட்டுள்ள புதிய யோசனையை வைத்தே தமிழரசுக் கட்சியுடன் நேற்றுமுன்தினம் பேச்சு நடத்தப்பட்டதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

ரெலோவுக்கும், இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை கொழும்பில் இடம்பெற்றது.

தமிழரசுக் கட்சியின் சார்பில் தலைவர் இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா, எம்.ஏ. சுமந்திரன், பொன்.செல்வராசா ஆகியோரும், ரெலோவின் சார்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், என். ஸ்ரீகாந்தா, ஜனா கருணாகரம் மற்றும் பிரசன்னா இந்திரகுமார், ஹென்றி மகேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கடந்த கலந்துரையாடலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்மட்டக் குழு அமைப்பது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதில் ஒவ்வொரு கட்சிகளிலிருந்து 3 பேரையும், 13 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் உள்ளடக்கியதாக 28 பேர் கொண்ட உயர்மட்டக் குழு அமைப்பது தொடர்பில் தமிழரசுக் கட்சியினால் யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது.

மேற்படி கலந்துரையாடல் முடிவடைந்த பின்னர் ரெலோவினால் ஏனைய 3 கட்சிகளுடன் இந்த விடயம் தொடர்பில் பேசப்பட்டது. இதனை மூன்று கட்சிகளும் ஒட்டுமொத்தமாக நிராகரித்துள்ளன.

தமிழரசுக் கட்சியிலிருந்து 5 பேரும், ஏனைய கட்சிகளிலிருந்து 3 பேரையும் உள்ளடக்கியதாக 17 பேர் கொண்ட உயர்மட்டக் குழு அமைக்கும் யோசனையைத் தமிழரசுக் கட்சியிடம் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது முன்வைக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பதிவு மற்றும் உயர்மட்டக் குழு யோசனை தொடர்பில் தமிழரசுக் கட்சி தனது மத்திய குழுக் கூட்டத்தில் கலந்துரையாடி முடிவு எடுக்க வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. (த-5)

## சர்வதேசக் கடற்பரப்பில் மீனவர் பரஸ்பரம் விடுவிப்பு

வடமராட்சி, மே 25

இலங்கை, இந்திய கடற் பரப்புகளில் வைத்து கைது செய்யப்பட்ட 26 இந்திய, 22 இலங்கை மீனவர்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை கடற்பரப்புக்குள் வைத்து விடுவிக்கப்பட்டதாக கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

சட்ட விரோதமாக இலங்கை கடற்பரப்புக்குள் நுழைந்த தமிழ்நாடு, காரைக்காலைச் சேர்ந்த 26 மீனவர்கள் 5 படகுகளுடன், இந்திய கடற்பரப்புக்குள் நுழைந்த இலங்கையைச் சேர்ந்த 22 மீனவர்கள் 4 படகுகளுடன் விடுவிக்கப்பட்டனர். இந்திய மீனவர்கள் தமிழ்நாடு கரையோர பாதுகாப்புத் தரப்பினரிடமும், இலங்கைமீனவர்கள் இலங்கை கடற்படையினரிடமும் பரஸ்பரம் ஒப்படைக்கப்பட்டனர்.

# தலைவர் பிரபாவின் வீட்டில் வெசாக்கிலும் சனக் கூட்டம்

### ஆயிரக் கணக்கான தென்பகுதியினர் முண்டியடிப்பு

முள்ளியவளை, மே 25

வெசாக் புனித தினமான நேற்று ஏராளமான தென் பகுதியைச் சேர்ந்த மக்கள், புதுக்குடியிருப்பில் புலிகளின் தலைவர் பிரபாகரன் வாழ்ந்ததாகக் கூறப்படும் வீட்டைப் பார்வையிடுவதற்கு முண்டியடித்தனர். இது இந்தப் பகுதி மக்களிடையே ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

போர் முடிவடைந்ததைத் தொடர்ந்து இந்த வீட்டைப் பார்வையிடுவதற்கு வெளியிடங்களைச் சேர்ந்த மக்களுக்கு இராணுவத்தால் அனுமதி வழங்கப்பட்டது. இதனால் தினமும் வெளியிடங்களைச் சேர்ந்தவர்கள் இங்கு வந்து சென்றனர்.

இந்த நிலையில் நேற்றைய தினம் பௌத்தர்களின் புனித தினமான வெசாக் தினமாக இருந்த போதிலும் ஆயிரக் கணக்கானவர்கள் பிரபாகரனின் வீட்டைப் பார்வையிடுவதற்கு புதுக்குடியிருப்பில் குவிந்தனர். இதனால் சுமார் 100 மீற்றர் நீளத்துக்கு மக்கள் வரிசையில் காத்திருந்ததைக் காணமுடிந்தது.

இவர்களை ஏற்றிவந்த ஏராளமான வாகனங்களும் அங்கு



நீண்டவரிசையில் காணப்பட்டன.

இதேவேளை கேப்பாப் பிலவு சீனியா மோட்டையில் இராணுவத்தினர் வசம் இருந்த பொது மக்களின் வீடுகள் வீட்டு உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

வீடுகள் ஒப்படைக்கப்பட்டதும் தமது காணிகளுக்குள் நுழைந்த மக்கள் அங்கு வீழ்ந்து கிடந்த தேங்காய்களைப் பொறுக்கி எடுத்து உரிப்பதை அவதானிக்க முடிந்தது. இங்கு தேங்காய் ஒன்று சராசரியாக 40 ரூபாவுக்கு விற் கப்படுகின் றமை குறிப்பிடத் தக்கது. (க-433)

# வாக்காளர் பட்டியல் தயாரிப்பு துரிதமாக

யாழ்ப்பாணம்,மே 25

யாழ்.மாவட்டத்தில் வாக்காளர் பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் சிறப்பாக இடம்பெற்று வருவதாக வடமாகாணப் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார்.

இந்த மாதம் 15 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை, 2013 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிப்பதற்கான விண்ணப்ப படிவம் கிராம சேவையாளர்களால் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. இந்த நடவடிக்கைகள் யாழ்.மாவட்டத்தின் சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும், கிராம சேவையாளர்களால் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிராம சேவையாளர்களிடமிருந்து விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளத் தவறிய வாக்காளர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் அதனைப் பெற்று பூரணப்படுத்திக் கொடுத்தால் 2013 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலில் இணைத்துக் கொள்ள முடியும். எதிர்வரும் திங்கட்கிழமை பாடசாலை மாணவர்களுக்கான, வாக்காளர் பதிவு தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதார வைத்தியசாலைகள் உள்ளபோதும் போதனா வைத்தியசாலைக்கு அதிகம் பேர்

## காரணம் என்ன எனக் கேட்கின்றனர் பொதுமக்கள்

யாழ்ப்பாணம்.மே 25

யாழ்.மாவட்டத்தில் நான்கு ஆதார வைத்தியசாலைகள் சகல வசதிகளுடன் இயங்குகின்றபோதிலும் யாழ். போதனா வைத்தியசாலை விடுதிகள் நிரம்பி வழியும் நிலை தொடர்வதற்குக் காரணம் என்ன என்று மாகாண சுகாதார திணைக்களத்தினிடம் மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

மாகாண சுகாதார நிர்வாகத்துக்கு உட்பட்ட ஆதார வைத்தியசாலைகளுக்கு போதிய அளவு வைத்திய அதிகாரிகள், மருத்துவ உபகரணங்கள் போன்ற வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த வைத்தியசாலைகளிலிருந்து தினமும் நூற்றுக்கு மேற்பட்ட நோயாளர்கள் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்படுகின்றனர்.

ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை வழங்கக்கூடிய நிலையில் உள்ள சாதாரண நோயாளர்கள் கூட அம்புலன்ஸில் ஏற்றி போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

இந்த வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்திய அதிகாரிகள் நோயாளர்களின் நலன்கருதி அனுப்புகிறார்களா? அல்லது தமது நலன் கருதி செயற்படுகிறார்களா? என்று மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

குறிப்பாக இரவு வேளையில் கொண்டுவரப்படும் சாதாரண காய்ச்சல் நோயாளரைக்கூட விடுதியில் தங்க வைக்காமல் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி விடுகிறார்கள். அந்த நோயாளி மறுநாள் காலை வீடு திரும்புகிறார். நோயாளர்களுக்கு ஏன் இந்த அவல நிலை. வைத்தியசாலைக்குச் சிகிச்சை பெற வருபவர்கள் வசதி படைத்தவர்கள் அல்ல. யாழ்ப்பாணம் அனுப்பப்படுவதால் நோயாளிக்கு அல்லது அவரது குடும்பத்தினருக்கு ஏற்படக் கூடிய செலவுகள் பற்றி எவரும் சிந்திப்பதில்லை என மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

வைத்தியசாலையில் சுழற்சி முறையில் கடமையாற்றக் கூடிய வைத்திய அதிகாரிகள் இருந்த போதிலும் அங்குள்ள விடுதிகளில் உள்ள கட்டில்களில் பெரும்பாலானவை வெறுமையாகவே காணப்படுகின்றன.

யாழ்.போதனா வைத்தியசாலையில் பெறப்பட்ட புள்ளி விவரங்களின்படி விடுதிகளில் தங்கி சிகிச்சை பெற்ற ஒரு லட்சம் பேரில் 80 வீதமானோர் ஆதார வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு அம்புலன்ஸில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டவர்கள் எனத் தெரிய வருகிறது.

போதனா வைத்தியசாலை வைத்திய அதிகாரிகள் காலில் பம்பரம் கட்டியது போன்று உட்கார முடியாத அளவுக்கு சேவையாற்றும் போது ஆதார வைத்தியசாலை வைத்திய அதிகாரிகள் விடுதிகளில் நோயாளர் இல்லாத நிலையில் கடமையாற்றுவது உயர் அதிகாரிகளின் கண்ணுக்குத் தெரிவதில்லையா அல்லது அவர்களும் கண்டும் காணாதது போன்று இருக்கின்றனரா என பல்வேறு கேள்விகளை மக்கள் மாகாண பிராந்திய சுகாதார திணைக்களத்தினரிடம் கேட்கின்றனர். (த-9)

# நிறுத்தல் கருவிகளுக்கு முத்திரையிடும் பணி

வலி.வடக்கு.மே 25

உடுவில் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் சந்தைகளில் பயன் படுத்தப்படும் தராசுகள், படிகள் மற்றும் இலத்திரனியல் தராசுகள் உட்பட அனைத்து நிறுத்தல், அளத்தல் கருவிகளுக்கும் முத்திரையிடும் பணிகள் எதிர்வரும் 27ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 07ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன.



**"தராசுகள், படிகள் மற்றும் இலத்திரனியல் தராசுகள் உட்பட அனைத்து நிறுத்தல், அளத்தல் கருவிகளுக்கும் முத்திரையிடும் பணிகள் எதிர்வரும் 27ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 07ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன.**

யாழ்.மாவட்ட அளவீடுகள் அலகுகளும் நியமங்களும் சேவைகளும் திணைக்களத்தினால் மேற்கொள் ளப்படவுள்ள இந்த நடவடிக்கை உடுவில் பிரதேச சபையின் உப அலுவலகங்களில் இடம் பெறவுள்ளது.

27 ஆம் திகதியில் இருந்து 30 ஆம் திகதி வரை உடுவில் பிரதேச சபையின் மருதனார் மடம் சந்தியில் உள்ள உடுவில்பிரதேச சபை உப அலு வலகத்திலும், 03 ஆம் திகதியில் இருந்து 07ஆம் திகதி வரை உடுவில் பிரதேச சபையின் சுன்னாகம் உப அலுவலகத்திலும் இந்தப் பணிகள் இடம்பெறவுள்ளன.(த-86)

## மாணவ தலைவர்களுக்கு வதிவிட பயிற்சி

தென்மராட்சி. மே 25

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவ தலைவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிநெ[illegible]ின் இருநாள் வதிவிடப் பயிற்[illegible]யலமர்வை நடத்த வலயக் கல்வி அலுவலகத்தினால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முதல் கட்டமாக 50 மாணவ தலைவர்களுக்கான வதிவிடப் பயிற்சி செயலமர்வை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. (வ-9)

## பாடசாலைகளில் தொழில்நுட்ப ஆய்வுகூடம்

யாழ்ப்பாணம், மே 25

மஹிந்த உதய திட்டத்தின் கீழ் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த இரு தேசிய பாடசாலைகளில் தொழில்நுட்ப ஆய்வுகூடம் அமைக்கப்படவுள்ளது.

இரு மாடிக் கட்டடங்கள் அமைக்க இசுறுபாய கல்வி அமைச்சினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.


யாழ்ப்பாணம் கல்வி வலயத்தைச் சேர்ந்த யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆகியவற்றிலேயே தொழில்நுட்ப ஆய்வுகூடம் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

## வலைகளை உலர்த்த இட ஒதுக்கீடு

குருநகர், மே 25

பாஷையூர் துறைமுகத்துக்கு வடக்குப்புறம் அமைந்துள்ள கடற்கரைப் பகுதியில் சுமார் ஒன்றரை ஏக்கர் பகுதி பாஷையூர் மீனவர்களின் வலைகள் உலர்த்துவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்விடத்தில் மணல் போட்டு நிரவப்பட்டு வருகிறது. இவ்வேலை பூர்த்தியடைந்ததும் இங்கு மீனவர் தமது வலைகளை உலர்த்த முடியும். இதன் பின்னர் பாஷையூர் வீதிகளில் வலைகளை உலர்த்த அனுமதிக்கப்படமாட்டாது என பாஷையூர் புனித அந்தோனியார் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் தெரிவித்துள்ளது. (த-51)



யாழ்.மாவட்ட செயலகத்தில் கடந்த காலங்களாக இல்லாத வகையில் முதல் முறையாக நேற்றையதினம் வெசாக் தின நிகழ்வுகள் கொண்டாடப்பட்டன. மாவட்ட செயலக வளாகம் வெசாக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு, தானசாலை அமைக்கப்பட்டு வெசாக் நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டன. யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், நாகவிகாரையின் விகாராதிபதி கலந்துகொண்டு சமய வழிபாடுகளை நடத்தினார். இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட செயலக ஊழியர்கள் பலரும் பங்கெடுத்திருந்தனர். யாழ்.மாவட்ட செயலகத்தில் 6 சிங்கள ஊழியர்களும் 200இற்கும் மேற்பட்ட தமிழ் ஊழியர்களும் பணியாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-5)

## அங்கவீனருக்கு தொழில் வாய்ப்பு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை

தென்மராட்சி.மே 25

வடக்கு மாகாணத்தில் உள்ள அங்கவீனர்களுக்கு தகைமைக்கேற்ற தொழில் வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான தொழில் சந்தை ஜூன் 28ஆம் திகதி நடத்தப்படவுள்ளது.

சமூக சேவைகள் அமைச்சும் தொழில் மற்றும் தொழில் துறை அமைச்சும் இணைந்து இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இந்த தொழில் சந்தையில் வேலைவாய்ப்பைப் பதிவு செய்வதற்கு தகைமையுடைய அங்கவீனர் தத்தமது பகுதியில் உள்ள பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுகளிலும் அல்லது மாவட்ட சமூக சேவைகள் அலுவல கங்களிலும் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தொழில் தொடர்பான பதிவுகளை மேற்கொள்ளவுள்ள அங்கவீனர்கள் தமது சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பப் படிவத்தையும் பிறப்பு சான்றிதழ், கல்விச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை உட்பட்ட ஆவணங்களையும் கொண்டு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

## தென்மராட்சி பாடசாலைகள் வலயப் பரீட்சை சபை

தென்மராட்சி.மே 25

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் மாணவர்களின் கல்விச் செயற்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் வலயத்துக்கான பரீட்சை சபை அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற அதிபர்கள் கூட்டத்தில் பரீட்சை சபை அமைக்கப்பட்டு குழுவும் அமைக்கப்பட்டது பரீட்சை சபையின் தலைவராக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தியும் செயலாளராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் மா.சுந்தரசிவமும் பொருளாளராக சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி ம.இராஜேந்திராவும் தெரிவு செய்யப்பட்டதாக [illegible] அறிவித்துள்ளார். (வ-9)

# கந்தப்பசேகரம் வீதியை அகலிக்க நடவடிக்கை


யாழ்ப்பாணம், மே 25

யாழ்.ஆஸ்பத்திரி வீதிக்குச் சமாந்தரமாகவுள்ள கந்தப்பசேகரம் வீதி வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையத்துக்கென பொருள்களை இலகுவாக ஏற்றி இறக்கக் கூடியவாறு அகலிக்கப்படவுள்ளது.

ஆஸ்பத்திரி வீதி வாகன நெரிசல்கள் நிறைந்த வீதியாக உள்ளதால் வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களுக்கு எடுத்துவரும் பொருள்களை இறக்கி ஏற்றுவதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இதனால் கந்தப்பசேகரம் வீதியை அகலிக்க வேண்டும் என யாழ். மாநகரசபை ஆலோசித்து ஆஸ்பத்திரி வீதியில் உள்ள வர்த்தகர்களுடன் கலந்துரையாடியது.

இதன்போது யாழ்.வணிகர் கழகத்தின் ஒத்துழைப்பையும் பெற்று வீதியின் மத்தியில் இருந்து இரு பக்கங்களிலும் 15 அடி வீதம் 30 அடியாக வீதியை அமைப்பது என முடிவு செய்யப்பட்டது.



[illegible] இந்த [illegible] அகலிக்கக் கூடியதாக வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களின் ஒத்துழைப்புடன் மதில்கள் மற்றும் கட்டடங்கள் ஆகியவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கமைய நேற்று வியாழக்கிழமை வர்த்தகர் கே.சிவபாலன் தனது கடைப் பகுதியின் மதிலை பின் நகர்த்தி மாநகர சபைக்கு தனது ஒத்துழைப்பை வழங்கியுள்ளார்.

ஏனைய வர்த்தகர்களும் தமது ஒத்துழைப்பை விரைவில் வழங்குவதன் மூலம் மேற்படி வீதியை விரைவில் புனரமைக்க உதவ வேண்டும் என மாநகர சபை வேண்டுகோள் விடுத்துள்ளது. (த-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பயங்கரவாதத்தை அனுமதிக்க முடியாது

## பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன்

லண்டன், மே 25
பயங்கரவாதச் செயற்பாடுகளை ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்று தெரிவித்துள்ளார் டேவிட் கமரூன். பிரிட்டனில் பயங்கரவாதத் தாக்குதல் சம்பவத்தில் பிரிட்டன் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்ததை அடுத்தே கமரூன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

''இந்தச் சம்பவம் பிரிட்டன் மீது நடத்தப்பட்ட தாக்குதல்; இஸ்லாம் மதத்துக்கு இழைக்கப்பட்ட துரோகம். இத்தாக்குதல் பிரிட்டிஷ் மக்களை மிகவும் பாதித்துள்ளது. இது குறித்து பயங்கரவாதத்துக்கு எதிரான பொலிஸார் பல்வேறு கோணங்களில் விசாரித்து வருகின்றனர்.'' என்று கமரூன் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தாக்குதல்களில் ஈடுபட்டவர்களில் ஒருவர் மைக்கேல் எடிபோலஜா (28) என்று இனங்காணப்பட்டுள்ளார். தாக்குதலை நடத்திய பின்னர் எடிபோலஜா,

''பிரிட்டன் இராணுவத்தினரால் முஸ்லிம் மக்கள் ஒவ்வொரு நாளும் கொல்லப்பட்டு வருகின்றனர். அதற்குப் பழிவாங்கவே இந்தத் தாக்குதலை நடத்தினேன்'' என்று உரத்துக் கூறியுள்ளார் என்றும் பொலிஸார் கூறுகின்றனர்.

அதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. அதில் ஒருவர் பெண் என்றும் கூறப்படுகிறது. (ற)



இரு தீவிரவாதிகளும் இராணுவச் சிப்பாய் மீது தாக்குதலை நடத்திய பின்னர் அவர்களில் ஒருவர் அங்கிருந்த லயாவ் கென்னட் என்ற பெண்ணை மிரட்டியுள்ளனர். எனினும் அந்தப் பெண் அவர்களுடன் தைரியமாகப் பேசியுள்ளார். ''மீண்டும் போர் வெடிக்க வேண்டும்'' என்று தாக்குதல் நடத்தியவர்களில் ஒருவர் கூறியபோது, ''அவ்வாறு நடைபெற்றால் நீங்கள் தான் கண்டிப்பாக தோல்வியடைவீர்கள்'' என்று தெரிவித்துள்ளார் கென்னட்.

# தாக்குதல்கள் தொடரும்

## அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா திட்டவட்டம்



''பல அமெரிக்கர்களின் உயிர்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கையே இது. இவ்வாறான தாக்குதல் நடவடிக்கைகள் தொடரும்.''

நியூயோர்க், மே 25
அமெரிக்காவால் நடத்தப்படும் தாக்குதல்கள் அமெரிக்காவின் எதிர்காலப் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டே மேற்கொள்ளப்படுகின்றன என்று தெரிவித்துள்ளார் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா.

அமெரிக்கா மேற்கொண்டு வரும் ஆளில்லா விமானத் தாக்குதல் மற்றும் எல்லை தாண்டிய தாக்குதல் நடவடிக்கைகளுக்குக் கடும் எதிர்ப்புகள் வெளியிடப்பட்டு வருகின்றன. இந்தநிலையில் இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே அமெரிக்க ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.


''பயங்கரவாதத் தாக்குதல்களைக் கட்டுப்படுத்துவதற்கு இவ்வாறான ஆளில்லா விமானத் தாக்குதல்களும், போர் விமானங்கள் மூலம் நடத்தப்படும் திடீர்த் தாக்குதல்களும் அவசியமானதாகக் காணப்படுகின்றன'' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

''இவ்வாறான தாக்குதல்களுக்கு எதிர்ப்புகளும் உள்ளன. எனினும் பயங்கரவாதத்தை தடுக்க வேண்டும். பல அமெரிக்கர்களின் உயிர்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கையே இது. இவ்வாறான தாக்குதல் நடவடிக்கைகள் தொடரும்'' என்றும் கருத்துத் தெரிவித்த ஒபாமா,

''குவண்டனாமோ சிறைச்சாலையை மூடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. விரைவில் அந்தச் சிறைச்சாலையின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டு, சிறைச்சாலை முற்றாக மூடப்படும்'' என்றும் கூறினார். (ற)



அமெரிக்கா, பாகிஸ்தான் மற்றும் ஆப்கன் ஆகிய நாடுகளில் நடத்தும் ஆளில்லா விமானத் தாக்குதல்களில் அப்பாவிப் பொதுமக்களே அதிகமாக உயிரிழக்கின்றனர் என்று அந்த நாடுகள் குற்றஞ்சாட்டுகின்றன. அங்குள்ள மக்கள் அமெரிக்காவின் இவ்வாறான தாக்குதல்களுக்கு கடும் எதிர்ப்புகளை வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



கொங்கோ சென்றுள்ள ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ-மூன், அங்கு ஹோமா நகரில் உள்ள சிறுவர்கள் மருத்துவமனை ஒன்றுக்குச் சென்று அங்குள்ள சிறுவர்களைச் சந்தித்தார்.

## இரகசிய நடவடிக்கையில் 4 அமெரிக்கர்கள் உயிரிழப்பு

நியூயோர்க், மே 25
அமெரிக்காவின் பாதுகாப்புக்கு எதிராகச் செயற்பட்ட நான்கு அமெரிக்கர்கள், அமெரிக்க பாதுகாப்புத் தரப்பினரின் இரகசிய நடவடிக்கை மூலம் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாடுகளில் பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கு எதிராக அமெரிக்கா மேற்கொள்ளும் நடவடிக்கைகள் வெளிப்படையாக இருக்க வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ள நிலையில், இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து அமெரிக்க இராணுவ அதிகாரிகள் குறிப்பிடுகையில்,

''ஏமன், பாகிஸ்தான், ஆப்கன் ஆகிய நாடுகளில் அமெரிக்காவுக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்ட நான்கு அமெரிக்கர்கள் இரகசிய நடவடிக்கைகள் மூலம் கொல்லப்பட்டனர். அன்வர் அல் அவ்லகி, சமீர் கான், முகமது உட்பட நான்கு பேர் அமெரிக்க குடியுரிமை பெற்றவர்களாக இருந்த போதும், அமெரிக்காவுக்கு எதிராக செயற்பட்டனர். அமெரிக்க குடியுரிமை பெற்றவர்கள் என்பதற்காக அவர்களை மன்னிக்க முடியாது'' என்றனர். (ற)

## தொடர்பிழந்தது ஈக்குவடோர் செயற்கை கோள்

குவிட்டோ, மே 25
ஈக்குவடோர் நாட்டின் முதல் செயற்கைக் கோளான பெகாசஸுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டு விட்டன என்று கூறப்படுகிறது. விண்வெளிக் கழிவுப் பொருள் ஒன்றுடன் ஏற்பட்ட மோதலை அடுத்தே செயற்கைக் கோளின் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. கடந்த மாதம் சீனாவின் ஜியுகுவான் விண்வெளி நிலையத்திலிருந்து 'பெகாசஸ்' விண்ணுக்கு அனுப்பப்பட்டது.

இந்தநிலையில் ரஷ்யாவின் செயலிழந்த விண்கலம் ஒன்றுடன் ஏற்பட்ட மோதலை அடுத்து அதன் செயற்பாடுகளில் தடங்கல் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து கருத்துக் கூறிய ஈக்குவடோர் நாட்டின் விண்வெளி ஆய்வு மையத் தலைவர் ரோன்னி நடேர்,

''ரஷ்யாவின் செயலிழந்த விண்கலம் ஒன்றுடன் ஏற்பட்ட மோதலை அடுத்து 'பெகசஸு'டனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. எனினும் செயற்கைக் கோள் தொடர்ந்தும் தனது பாதையில் செயற்பட்டு வருகின்றது. அதனால் பாதிப்புக் குறித்து எதுவும் கூற முடியாதுள்ளது.'' என்று தெரிவித்தார். (ற)

# நைஜரில் குண்டு வெடிப்புகள்: 25 பேர் சாவு

ஓர்லிட், மே 25
மேற்கு ஆபிரிக்க நாடான நைஜரில் வெவ்வேறு இடங்களில் நடத்தப்பட்ட இரு கார்க் குண்டு வெடிப்புச் சம்பவங்களில் 25 பேர் உயிரிழந்தனர். 29 பேர் படுகாயமடைந்தனர்.

தாக்குதல் இலக்குகளில் ஒன்று பிரான்ஸுக்குச் சொந்தமான யுரேனியம் பதப்படுத்தும் தொழிற்சாலை என்றும் தெரிவிக்கப்படுகிறது. இராணுவ முகாமில் உள்ள இந்த தொழிற்சாலை மீது காரை மோதி வெடிகுண்டு வெடிக்கவைக்கப்பட்டுள்ளது. அதில் தாக்குதல் நடத்தியவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

அதேவேளை, நைஜரின் புறநகர்ப் பகுதியான ஆர்லிட்டில் உள்ள யுரேனியச் சுரங்கம் ஒன்றிலும் மற்றொரு கார் குண்டு தாக்குதல் நடத்தப்பட்டது.

ராணுவ வீரர் போன்று உடையணிந்த ஒருவர் வெடிகுண்டு நிரப்பப்பட்ட காரை தொழிற்சாலைக்குள் கொண்டு சென்று குண்டை வெடிக்க வைத்தார். சுமார் 250 கி.மீ. இடைவெளியில் அமைந்திருக்கும் இந்த இரண்டு இடங்களிலும் ஒரே நேரத்தில் கார் வெடிகுண்டு மூலம் தாக்குல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த இரண்டு சம்பவங்களிலும் 25 பேர் உயிரிழந்துள்ளனர். 29 பேர் படுகாயமடைந்துள்ளனர். (ற)







கேம்பிரிட்ஜ் நகரில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதற்காக வந்த ராணி இரண்டாம் எலிசபெத், மக்களோடு மக்களாக பஸ்ஸில் பயணித்தார். இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜ் நகரில் சுமார் 212 மில்லியன் பவுண்ட் செலவில் கட்டப்பட்டுள்ள மருத்துவ ஆய்வு மையத்தின் திறப்பு விழாவுக்கு, ராணி இரண்டாம் எலிசபெத் சிறப்பு ரயில் மூலம் வந்திருந்தார். விழா நடக்கும் இடத்திற்கு அவரை அழைத்து செல்ல கார் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அவர் பொதுமக்களோடு பொதுமக்களாக பஸ்ஸில் செல்ல விருப்பம் தெரிவித்தார். இதையடுத்து, விழா நடக்கும் இடத்திற்கு ராணி மக்களோடு மக்களாக பஸ்ஸில் பயணம் செய்தார். (ற)

# பயங்கரவாதத்துக்கு எதிராக இணைகின்றன அமெ.- இந்தியா


நியூயோர்க், மே 25
பயங்கரவாத எதிர்ப்பு, தேடப்படும் குற்றவாளிகளைக் கைது செய்து ஒப்படைப்பது மற்றும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை எதிர்கொள்வது ஆகியவற்றில் ஒருங்கிணைந்து செயற்படுவதற்கு அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகள் இணக்கம் கண்டுள்ளன.

அமெரிக்காவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய மத்திய உள்துறை அமைச்சர் சுஷீல் குமார் ஷிண்டேயுடன் கலந்துரையாடிய பின்னர் அமெரிக்க உள்துறை அமைச்சர் ஜனத் நெப்போலிடானோ இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

''உள்நாட்டுப் பாதுகாப்பு என்பது இந்தியா, அமெரிக்கா இடையிலான சர்வதேச ஒத்துழைப்பின் முக்கிய தூணாக விளங்குவதால், இதுவிடயத்தில் கூட்டாக செயல்பட வேண்டியதன் அவசியத்தை அனைவரும் உணர்ந்துள்ளனர்.

இரு நாடுகளுக்கும் பயங்கரவாத அச்சுறுத்தல் நீடித்து வருவதால் இதுபோன்ற ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகிறது.

இது தொடர்பாக இந்திய மத்திய உள் துறை அமைச்சகமும், அமெரிக்க நீதித் துறையும் இணைந்து செயற்படுவது என்று இணக்கம் காணப்பட்டுள்ளது'' என்று அமெரிக்க உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (ற)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அம்மாவைப் போல நானில்லை

## ராகுல் காந்தி எச்சரிக்கை

டில்லி, மே.25




காங்கிரஸ் தலைவர் சோனியா மென்மையானவர்; நான் அப்படிப்பட்டவன் அல்லன். கட்சியில் ஒழுங்கீனத்தை என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது' என்று காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி எச்சரித்துள்ளார்.

டில்லி மாநில காங்கிரஸ் தலைவர்களுடன், ராகுல், நேற்று முன்தினம் ஆலோசனை நடத்தினார்.

அந்த ஆலோசனையின் போது, நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டசபை உறுப்பினர்கள், மாவட்ட, ஒன்றிய செயலர்கள், ஆலோசகர்கள் என, அனைவரையும் தனித் தனியே அழைத்து ராகுல் பேசினார். அதன்போது ராகுல் காந்தி - ''காங்கிரஸ் கட்சியினர், கோஷ்டி பூசலைத் தவிர்த்து, ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும். கட்சியை வலுப் படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

டில்லியில், முதல்வர் ஷீலா தீட்சித் அரசின் சாதனை களையும் ஐக்கிய முற்போக் குக் கூட்டணி அரசின் சாதனை களையும், மக்களிடம் எடுத் துக் கூற வேண்டும்'' என கேட்டுக் கொண்டதாக காங் கிரஸ் வட்டாரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது. (வ)



டில்லி ராஷ்டிரபதி பவனில் நடைபெற்ற புதிய கணக்கு தணிக்கை அதிகாரி பதவியேற்பில், பரஸ்பரம் நலம் விசாரித்துக் கொள்ளும் பாரதீய ஜனதாக் கட்சி மூத்த தலைவர் அத்வானி மற்றும் மத்திய அமைச்சர் கபில் சிபல்.

# லஷ்கர் இ தொய்பா இயக்க தீவிரவாதி சுட்டுக்கொலை

ஸ்ரீநகர், மே.25

ஜம்மு காஷ்மீரில் நடை பெற்ற துப்பாக்கிச் சண்டை யில் லஷ்கர் இ தொய்பா இயக்கத்தை சேர்ந்த தீவிரவாதி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்தச்சம்பவம் ஸ்ரீநகர் நர் பரிஸ்தானில் இடம்பெற்றுள்ளது. குடியிருப்புகள் அதிகம் நிறைந்த அந்த பகுதியில் உள்ள ஒரு வீட்டில் தீவிரவாதி பதுங்கி இருந்ததாக தகவல் கிடைத் ததை அடுத்து பொலிஸார் அந்த வீட்டை சுற்றிவளைத் தனர். அத்துடன் சரண் அடை யுமாறு பொலிஸார் எச்சரித்த



னர். ஆனால் அந்த வீட்டில் பதுங்கியிருந்த அந்தத் தீவிரவாதி திடீரென பொலிஸாரை நோக்கி சரமாரியாக துப்பாக்கியால் தாக்குதல் நடத்தினார்.

அதனை அடுத்து பொலிஸார் பதில் தாக்குதல் நடத்தத் தொடங் கினர். இரு தரப்புக்கும் இடையே நடந்த சில மணி நேர துப்பாக்கிச் சண்டையில் தீவிரவாதி சுட்டுக் கொல்லப் பட்டார். காவல் உதவி ஆய்வாளர் உட்பட பொலிஸார் 3 பேர் தாக்குதலில் காயம் அடைந் தனர்.

சுட்டுக்கொல்லப்பட்ட தீவிரவாதி லஷ்கர் இ தொய்பா இயக்கத் தைச் சேர்ந்த ஹிலால் மோலி என்றும் 2001 ஆம் ஆண்டு லஷ்கர் இ தொய்பா இயக்க த்தில் சேர்ந்த அவன் பல் வேறு தீவிரவாத தாக்குதல் களுடன் தொடர்புடையவன் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

# இந்திய பெருங்கடல் பிராந்திய பாதுகாப்புக்கு உத்தரவாதம்

## மன்மோகன் சிங் தெரிவிப்பு

குர்கான், மே.25

இந்தியப் பெருங்கடல் பிராந் தியத்தில் பாதுகாப் புக்கு உத்தர வாதம் அளிக்கும் நிலையில் நாம் உள்ளோம். இந்தப்பிராந் தியத்தில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தும் பொறுப்பு எமக்கு உள்ளது என்று பிரதமர் மன் மோகன் சிங் தெரிவித்தார்.




ஹரியானா மாநிலம், குர்கானில் உள்ள பினோலாவில் இந்திய தேசிய பாதுகாப்புப் பல்கலைக் கழ கத்துக்கு பிரதமர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அடிக்கல் நட்டார். இந்நிகழ் வில் மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ஏ.கே. அந்தோனி, வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித், பாதுகாப்புத் துறை இணையமைச்சர் ஜிதேந் திர சிங், ஹரியானா முதல்வர் பூபிந்தர் சிங் ஹூடா, முப்படை களின் தளபதிகள் உட்படப் பலர் பங்கேற்றனர்.

நிகழ்வில் பிரதமர் பேசுகை யில் தெரிவித்த தாவது:-

அண்டை நாடுகளின் முரண் பட்ட போக்கால், பலமுனை களிலும் சவால்களை நாம் சந்தித்து வருகிறோம். அதே சமயம், தெற்காசியா மற்றும் இந்திய பெருங்கடல் பிராந்தியம் முழுமைக்கும் பாதுகாப்பு அளிக்கும் அளவுக்கு வளர்ந் துள்ளோம். இந்தப்பகுதியில் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கும் நிலையில் நாம் உள்ளோம். இங்கு ஸ்திரத் தன் மையை ஏற்படுத்தும் பொறுப்பு எமக்கு உள்ளது. இணையம் (சைபர்), வானியல் சார்ந்த அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் வகையில் தொழில்நுட்ப வசதி களைப் பெற்றுள்ளோம். இதற் காக தேசிய சைபர் பாதுகாப்பு ஒத்துழைப்புக்கான அலுவல கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### இராணுவத் தளபாடக் கொள்கையில் வெளிப்படைத்தன்மை

முறைகேடு நடை பெறாமல் தடுக்கும் வகை யில், பாதுகாப் புத் துறையில் இராணுவத் தள பாடக் கொள்முதலில் வெளிப் படைத்தன்மையை கடைப் பிடிக்கும் வழி முறைகளை மத்திய அரசு ஆராய்ந்து வரு கிறது. உள்நாட்டில் இராணு வத் தளபாடக் கொள் முதலை அதிகரிக்க நடவ டிக்கை எடுக்கப்படும். அதற் காக, உள்நாட்டிலேயே இரா ணுவத் தளபாட உற்பத் தியை அதிக ரிக்க முயற்சி எடுக்கப்படும்.

இராணுவக் கொள்முதல் கொள்கை வலுவாக இருந் தால்தான், எமது பாதுகாப்பும் வலுவாக இருக்கும். இதை மனதில் வைத்து, இராணு வத்துக்கு மிகச்சிறந்த போர்க் கருவிகள் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் கொள்முதல் கொள்கை வகுக்கப்படும்.

இப்பிராந்தியத்தில் அமைதி ஸ்திரத்தன்மை, நட்புறவு, ஒத்து ழைப்பு ஆகி யவை மேம்பட வேண்டும் என்பதே எமது குறிக்கோள். எமது பாதுகாப் புப் படை யினர் எத்தகைய சவால் களையும் எதிர்கொள் ளும் திறனுடன் உள்ளனர். பாது காப்பைப் பலப்படுத்த அரசு எடுத்துள்ள பல்வேறு நடவ டிக்கைகளின் விளை வாக இத்தகைய திறனை இராணுவம் பெற்றுள்ளது. முன்னர் இருந்ததை விட எல்லை யோரப் பகுதிகளில் கட்டமைபபு வசதிகளை அதிக ரித்துள்ளோம். விமா னப்படை மூலம், நாட்டின் எந்தப்பகுதிக் கும் விரைவாக செல்லும் திறன் உள்ளது. கடந்த 5 ஆண்டு களில் இந்தியக் கடற்படையின் பலம் அதிகரித்துள்ளது என்றார்.

# மலையாள மொழிக்கு செம்மொழி அந்தஸ்து

மலையாள மொழிக்கு 'செம்மொழி அந்தஸ்து' வழங்க மத்திய அமைச் சரவை ஒப்புதல் அளித்துள் ளது.

பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை மத்திய அமைச்சரவைக் கூட்டம் நடைபெற் றது. அதில் மலையாள மொழிக்கு செம்மொழி அந்தஸ்து வழங் குவது என முடிவெடுக் கப்பட்டது என நிதி அமைச்சர் ப. சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

செம்மொழி அந்தஸ்து கிடைத்தால் 2 சர்வதேச ஆண்டு விருதுகள், செம் மொழிகள் படிப்பு தொடர் பான சிறப்பு மையம், சிறப்பு இருக்கைகள் ஏற்படுத்துதல் உள்ளிட்ட சலுகைகள் கிடைக்கும்.

ஏற்கெனவே தமிழ், கன் னடம், தெலுங்கு மொழி களுக்கு செம்மொழி அந் தஸ்து வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மாயாவதி கட்டிய கட்டடங்கள் வாடகைக்கு

லக்னோ, மே.25

உத்தரப் பிரதேச முன் னாள் முதல்வர், மாயாவதி ஆட்சி யில் கட்டப்பட்ட, பிரமாண்ட நினைவு மண்டபங்கள், பூங் காக்கள் மற்றும் அதைச் சுற்றி யுள்ள இடங்கள், திருமணம் மற்றும் ஏனைய காரியங் களுக்கு, வாடகைக்கு விடப்பட் டன.

தற்போது அவை, சில துறை களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. சட்டமேதை அம்பேத்கர், பகுஜன் சமாஜ் நிறுவுநர், கன் ஷிராம், கட்சியின் தலைவர் மாயாவதி ஆகி யோருக்கு, உத்தரப் பிரதேச தலைநகர் லக்னோ மற்றும் நொய்டா போன்ற இடங் களில், பல ஆயிரம் கோடி ரூபா செல வில், நினைவு மண்டபங்கள், பூங்காக் களை, அப்போதைய முதல்வர் மாயாவதி அமைத்தார். அதற்கு அப்போதே, எதிர்க் கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்திருந்தன.. எனி னும்,



அதைப் பொருட்படுத் தாது, பல ஏக்கர் பரப்ப ளவில், பல ஆயிரம் கோடி ரூபா செலவில், ஏராளமான நினைவு மண்ட பங்கள், பூங்காக்களை மாயா வதி எழுப்பினார்.

மாநிலத்தில், தற்போது ஆட்சி யில் உள்ள முதல்வர் அகி லேஷ் யாதவ் தலைமை யிலான சமாஜ்வாதி அரசு, அந்த நினைவிடங்களையும், கட்டடங்களையும் திருமணங்கள் நடத்தவும், அரச விழாக்கள் நடத்தவும், முதலில் வாட கைக்கு விட்டன.

தற்போது, ஒரு படி மேலே போய், மாயாவதி கட்டிய சகல நினைவு மண்டபத்தையும், ஒவ்வொரு துறைக்கு, தனித் தனியாக ஒதுக்கியுள்ளது. ரமா பாய் அம் பேத்கர் பெய ரில் கட்டிய மைதா னம் மற்றும் அதைச் சுற்றியுள்ள இடங்கள், அரசின் பொது நிலங்கள் மற்றும் கட்ட டங்கள், துறைக்கு ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய வீட்டுத் திட்டம் கிழக்கில் அங்குரார்ப்பணம்



மட்டக்களப்பு,மே 25

இந்திய அரசின் உதவியுடன் அமைக்கப்படும் வீட்டுத்திட்டம் கிழக்கில் கடந்த புதன்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்ட ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலர் பிரிவின் கீழ் வரும் சிங்கள, தமிழ் , முஸ்லிம் மக்களை உள்ளடக்கியதான மூன்று கிராமங்களில் இந்த வீட்டுத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் இந்தியத் தூதர் அசோக் கே. காந்தா, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ், மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், உற்பத்தித்திறன் விருத்தி அமைச்சர் பஷீர் சேகு தாவூத், கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 46 ஆயிரம் வீடுகளை அமைத்துக் கொடுக்கும் இந்திய அரசின் உதவித் திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட 5000 வீடுகளில் முறையே மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டத்திற்கு தலா 2 ஆயிரம் வீடுகளும் அம்பாறை மாவட்டங்களுக்கு 1000 வீடுகளும் நிர்மாணிக்கப்பட இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# இந்தியா அறிவித்த வீட்டுத் திட்டம் கிழக்கில் சிங்களவருக்கும்

## இந்தியாவிடம் இருந்து எதிர்ப்பு ஏதுமில்லை

மட்டக்களப்பு,மே 25

போரால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்காக இந்தியா அறிவித்த 50 ஆயிரம் வீடுகளை அமைத்துக் கொடுக்கும் திட்டத்தின் கீழ், கிழக்கில் பெரும்பான்மை இனத்தவர்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

2009 ஆம் ஆண்டு மே மாதம் போர் முடிவுக்கு வந்த பின்னர், வடக்கில் போரால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்காக 270 மில்லியன் டொலர் செலவில் 50 ஆயிரம் வீடுகளை அமைத்துக் கொடுப்பதாக இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் தெளிவாக அறிவித்திருந்தார்.

**சிங்களக் குடியேற்றவாசிகளுக்கும் இந்தியாவின் உதவியுடன் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.**

எனினும், இலங்கை அரசு இந்தத் திட்டத்தின் கீழ் வடக்கில், சிங்களக் குடியேற்ற வாசிகளுக்கும் இந்த வீடமைப்பு உதவியை பெற்றுக் கொடுத்து வருகிறது.

குறிப்பாக, வெலிஓயா என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ள மணலாறு சிங்களக் குடியேற்றப் பிரதேசத்திலும், வவுனியா மாவட்டத்தில் நிறுவப்பட்டு வரும் சிங்களக் குடியேற்றங்களுக்கும் இந்திய உதவித்திட்டத்தின் கீழ் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படுகின்றன.

இந்தநிலையில், கிழக்கில் போரால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு 4000 வீடுகளை அமைத்துக் கொடுக்கும் இந்தியத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்தநிகழ்வில் இந்தியத் தூதர் அசோக் கே காந்தா, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ உட்பட பலர் கலந்து கொண்டனர். இந்தத் திட்டத்தில் மட்டக்களப்பில் உள்ள சிங்களக் கிராமமான மங்களகமவும் உள்ளடக்கப்பட்டுள்ளது. அங்குள்ள சிங்களக் குடியேற்றவாசிகளுக்கும் இந்தியாவின் உதவியுடன் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

தமிழர்களுக்காக இந்தியா அறிவித்த வீடமைப்புத் திட்டம் சிங்களக் குடியேற்ற வாசிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்படுவது குறித்து இலங்கையிடம் இந்தியா எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.(ச)

## சட்டவிரோத மருந்துகள் கம்பளையில் பறிமுதல்

### சுகாதார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு,மே 25

தரம் குறைந்த மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருள்களை சட்டவிரோதமாக உற்பத்தி செய்து விநியோகிக்கும் வர்த்தக நடவடிக்கை தொடர்பில் தகவல்கள் வெளியாகியுள்ளன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.



தேசிய ஔடத அதிகாரசபைக்கு கிடைத்த தகவல்களுக்கு அமைய கம்பளை நகரில் சந்தேகத்துக்கிடமான வாகனம் ஒன்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

குறித்த பாரவூர்தியில் இருந்து சுமார் 5 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுடைய தரம் குறைந்த மருந்துகள் மீட்கப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட மருந்துகள் மற்றும் அழகுசாதன பொருள்கள் பலவிதமான போலிப் பெயர்களில் பொதி செய்யப்பட்டிருந்தன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கைப்பற்றப்பட்ட வாகனத்தின் சாரதியும் உதவியாளரும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் வெளியிட்ட தகவல்களுக்கமைய கடந்த காலங்களில் நாட்டின் பல பாகங்களுக்கு தரமற்ற ஔடதங்கள் மற்றும் அழகுசாதனப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டமை தெரியவந்துள்ளது. (ச)



பள்ளத்தாக்கு பகுதிகளில் குடிசைகளில் வசித்துவந்த 3 குடும்பங்களுக்கு தலா இரண்டு மில்லியன் பெறுமதியான வீடுகளை ஹிம்பலப்பிட்டிய, பத்தரமுல்லையில் பாதுகாப்பு படையினரின் பொறியியல் பிரிவினர் அமைத்துக் கொடுத்தனர். அதனை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜ பக்ஷவும், பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவும் வழங்கி வைத்தனர். (16)

## சூழல் மாசு; 3 கோடி ரூபா அபராதம்

கொழும்பு,மே 25

நுளம்புகள் பெருகும் வகையில் சூழலை வைத்திருந்த நபர்களிடம் இருந்து இது வரை மூன்று கோடி 46 லட்சம் ரூபா அபராதமாக அறவிடப்பட்டுள்ளது.

கடந்த 5 மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களில் இந்த அபராதம் அறவிடப்பட்டதாக இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தக் காலப்பகுதியில் 295,000 வளாகங்கள் சோதனைக்குட்படுத்தப் பட்டன. 1427 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்று இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (ச)

## இராணுவ சீருடையில் வந்ததோர் கொள்ளை

கொழும்பு,மே 25

தங்கநகை தொழிற்சாலையில் கஜ முத்துக்கள் மறைத்து வைத்திருப்பதை சோதனையிட வந்ததாகக் கூறி துப்பாக்கிகளுடன் இராணுவ சீருடையில் வந்த கோஷ்டி சுமார் 2 கோடி ரூபா பெறுமதியான தங்கக் கட்டிகளை கொள்ளையடித்துச் சென்ற சம்பவம் கண்டி நகரில் நிகழ்ந்துள்ளது.

இந்தக் கொள்ளைச் சம்பவம் கண்டி, பேராதனை வீதியில் அமைந்துள்ள தங்க நகை தொழிற்சாலையிலேயே நிகழ்ந்துள்ளது.

இராணுவ சீருடைக்கு சமமான உடையில் துப்பாக்கிகளுடன் வந்த சிலர் அங்கு கஜ முத்துக்கள் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாகக் கூறி அங்குள்ளவர்களை அச்சுறுத்தி சோதனை செய்வது போன்று நடித்து அங்கு வைக்கப்பட்டிருந்த சுமார் இரண்டு கோடி ரூபா பெறுமதியான தங்கக் கட்டிகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இந்தச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## மீள்சுழற்சி நிலையங்களின் ஊடாக மீண்டும் 'பிளாஸ்ரிக்' உருவாக்கம்

### அறிமுகப்படுத்தியது சுற்றாடல் அதிகார சபை



கொழும்பு,மே 25

பொலித்தீன், பிளாஸ்ரிக் போன்ற பொருள்களை சூழலுக்குள் கலக்க விடாது இருப்பதற்கான முறையான திட்டத்தை மத்திய சுற்றாடல் அதிகார சபை அறிமுகப் படுத்தியுள்ளது.


இந்த நடவடிக்கையை கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் ஆரம்பிக்க தொழிற்சாலைகள் நிர்மாணிக்கப்படவுள்ளன என்று அதிகார சபையின் தலைவர் விமல் ரூபசிங்க தெரிவித்தார்.

வீடுகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப்பொருள்கள், உக்கும் மற்றும் உக்காதவை என்று வகைப்படுத்தப்படவுள்ளன என்று அவர் கூறினார்.

வீடுகளில் இருந்து அகற்றப்படும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்களை சேகரித்து, நாட்டில் இயங்கும் மீள்சுழற்சி நிலையங்களின் ஊடாக அவை சுத்தப்படுத்தவுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் நிர்மாணிக்கப்பட்டு வரும் தொழிற்சாலைகளுக்கான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக 15 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.(ச)

## திருமலையில் அமெரிக்க நிலையம் ஆரம்பிக்க ஒப்பந்தம் கைச்சாத்து



திருகோணமலை,மே 25

திருகோணமலை பொது நூலகத்தில் அமெரிக்க நிலையம் ஒன்றினை ஆரம்பிப்பதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு திருகோணமலை பொது நூலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் திருகோணமலை நகரசபையின் தலைவருக்கும் இலங்கைக்கான அமெரிக்க நிலையத்தின் பணிப்பாளர் கிருஸ்கோபர் ஸ்டீல் ஆகியோருக்கும் இடையே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

அவர்கள் திருகோணமலை லக்சுமி நாராயணர் கோயிலில் வழிபாட்டிலும் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (ச -40)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கைதடி நவீல்ட் பாடசாலையில் இடம்பெற்ற விசேட தேவையுடைய மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார், போட்டியின் முதன்மை விருந்தினர் யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வித்துறை விரிவுரையாளர் மா.இளம்பிறையன், பாடசாலை அதிபர் வீ.எஸ்.மகேந்திரன் ஆகியோர் ஊர்வலமாக அழைத்து வரப்படுகின்றனர். முதன்மை விருந்தினர் மாணவியொருவருக்கு பரிசில்

## மாற்றுவலுவுடைய உயர்தர வகுப்பு மாணவர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், மே 25

வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேசத்தில் கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்று உயர்தர வகுப்புகளில் இணைந்துள்ள மாற்று ஆற்றலுடைய வறுமைக்கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களை பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு வடமராட்சி தெற்கு- மேற்கு பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ அறிவித்துள்ளார். (வ-9)

# எழுதுமட்டுவாழ் கரம்பகத்துக்கு 'வசந்தம்' மின்சாரம் எப்போது?



தென்மராட்சி, மே 25

எழுதுமட்டுவாழ், கரம்பகம் பகுதிக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்சாரம் வழங்கப்படுமா என பிரிவு மக்கள் கேட்டுள்ளனர்.

இந்தப் பிரிவில் இரு வருடங்களுக்கு முன்னர் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டதையடுத்து இடம்பெயர்ந்த அனைத்து குடும்பங்களும் மீளக்குடியமர்ந்துள்ளன.

சுவிஸ் நாட்டு அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான நிறுவனமும் இந்திய வீடமைப்புத் திட்டத்தினரும் இணைந்து இதுவரை 250 இற்கு மேற்பட்ட வீடுகள் நிர்மாணித்து வழங்கியதையடுத்து மக்களும் தமது வீடுகளில் குடியமர்ந்துள்ளனர்.


இந்தப் பகுதிக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்சாரம் வழங்கப்படுமென தெரிவிக்கப்பட்ட போதிலும் இதுவரை எந்தவொரு ஆரம்பகட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இது தொடர்பாக இலங்கை மின்சாரசபையுடன் தொடர்பு கொண்ட போது உரிய நிதி கிடைக்கவில்லை என தெரிவிப்பதாகவும் அப்பிரிவு மக்கள் கூறினர்.

இந்த நிலையில் தமது குடியிருப்புகளுக்கு எப்போது மின்சாரம் கிடைக்கும் என எதிர்பார்த்திருப்பதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரின் முயற்சியால் கரம்பகம் பகுதியின் பிரதான வீதி புனரமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (வ-9)

# யாழில் 48 லட்சம் லீற்றரை தாண்டியது பியர் விற்பனை

## கடந்த வருடம் மட்டும்



உல்லாசப் பயணிகளின் வருகை மற்றும் தொழில் வாய்ப்பைத் தேடி வருபவர்கள் குடாநாட்டுக்குள் உள்நுழைந்ததன் அடிப்படையிலேயே இவ்வாறு பியர் விற்பனை சூடு பிடித்துள்ளது.

யாழ்ப்பாணம், மே 25

யாழ்.மாவட்டத்தில் கடந்த வருடம் மட்டும் 48 லட்சத்து 45 ஆயிரத்து 588 லீற்றர் பியர் விற்பனை செய்யப்பட்டுள்ளது என்று யாழ்.மாவட்ட மதுவரித் திணைக்கள புள்ளி விவரங்கள் தெரிவித்துள்ளன.

இதன் அடிப்படையில் கடந்த 11 வருட காலப் பகுதிக்குள் கடந்த வருடம் மட்டுமே அதிகூடிய பியர் யாழ்.மாவட்டத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

போர்ச்சூழலின் பின்னர் யாழ்.மாவட்டத்தில் பியர் பாவனையாளர் அதிகரித்துள்ள நிலையில் 2002 ஆம் ஆண்டு 5 லட்சத்து 55 ஆயிரத்து 304 லீற்றரும், 2003 ஆம் ஆண்டு 13 லட்சத்து 86 ஆயிரத்து 570 லீற்றரும், 2004 ஆம் ஆண்டு 14 லட்சத்து 56 ஆயிரத்து 73 லீற்றரும்,2005 ஆம் ஆண்டு 18 லட்சத்து 15 ஆயிரத்து 250 லீற்றரும், 2006 ஆம் ஆண்டு 6 லட்சத்து 39 ஆயிரத்து 850 லீற்றரும், 2007 ஆம் ஆண்டு 7 லட்சத்து 9 ஆயிரத்து 891 லீற்றரும், 2008 ஆம் ஆண்டு 10 லட்சத்து 2 ஆயிரத்து 816 லீற்றரும், 2009 ஆம் ஆண்டு 7 லட்சத்து 62 ஆயிரத்து 610 லீற்றரும், 2010 ஆம் ஆண்டு 24 லட்சத்து 60 ஆயிரத்து 502 லீற்றரும், 2011 ஆம் ஆண்டு 33 லட்சத்து 90 ஆயிரத்து 935 லீற்றரும், 2012 ஆம் ஆண்டு 48 லட்சத்து 45 ஆயிரத்து 588 லீற்றரும் விற்பனை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உல்லாசப் பயணிகளின் வருகை மற்றும் தொழில் வாய்ப்பைத் தேடி வருபவர்கள் குடாநாட்டுக்குள் உள்நுழைந்ததன் அடிப்படையிலேயே இவ்வாறு பியர் விற்பனை சூடு பிடித்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-14)

# போதையில் மோ.சைக்கிள் செலுத்தியோருக்கு தண்டம்

வலி.வடக்கு.மே 25

மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திச் சென்ற மூன்று இளைஞர்கள் வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் வசமாக மாட்டிக் கொண்டு நீதிமன்றில் தண்டம் செலுத்திய சம்பவம் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் இடம்பெற்றுள்ளது.

> கசூரினா கடலில் குளித்துக் கொண்டாடி விட்டு வேகமாக மோட்டார் சைக்கிளை குழுவாக வீதியால் செலுத்திச் சென்றுள்ளனர்.

இவர்கள் காரைநகர் கசூரினா கடலில் குளித்துக் கொண்டாடி விட்டு வேகமாக மோட்டார் சைக்கிளை குழுவாக வீதியால் செலுத்திச் சென்றுள்ளனர். அதன்போது வட்டுக்கோட்டை பொலிஸார் இடைமறித்த வேளை அவர்களுடன் வாய்த் தர்க்கத்திலும் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த மூன்று இளைஞர்களையும் தடுத்து வைத்த பொலிஸார் அவர்களை வைத்தியசாலைக்கு அனுப்பி சோதனையிட்ட வேளையில் மூவரும் நிறை மது போதையில் இருந்ததாக வைத்தியரால் உறுதிப்படுத் தப்பட்டது.

அந்த மூவரில் ஒருவரிடம் மோட்டார் சைக்கிள் செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரம் இல்லாத நிலையும் காணப்பட்டுள்ளது. மூவரும் மல்லாகம் நீதிமன்றில் பொலிஸாரால் முன்னிலைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து மூவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டனர்.

மது போதையில் மோட்டார் சைக்கிளை செலுத்தி குற்றத்துக்காகத் தலா ஏழாயிரத்து ஐநூறு ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன், சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிளைச் செலுத்தியவருக்கு மேலதிகமாக நாலாயிரம் ரூபாவும் தண்டமாக விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. (வ-86)

# தென்மராட்சியில் கடும் காற்று பயன்தரு மரங்கள் சேதம்

தென்மராட்சி.மே 25

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த நான்கு நாள்களாக வீசிவரும் கடும் காற்றால் பெருமளவு பயன்தரு மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

பயன்தரு மரங்களான பப்பாசி, முருங்கை, மா, பலா உட்பட வேறு மரங்களும் முறிந்து வீழ்ந்துள்ளதாகவும் , சில இடங்களில் காணிகளின் வேலிகளையும் வீழ்த்தியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள திண்மக் கழிவுகளை பசளையாக்கும் கொட்டகையின் கூரைத் தகரம் காற்றினால் அள்ளுண்ட போதிலும் நகர சபைத் தலைவரின் உடனடி நடவடிக்கையால் மேலும் சேதமேற்படாதவாறு தடுக்கப்பட்டது.

இதேவேளை, நகர சபையினால் நிர்மாணிக்கப்பட்ட நகர மண்டபத்தின் மேல் மாடி மண்டபத்தில் உள்ள நீள மின் விளக்குகள் காற்றின் வேகத்தால் சேதமடைந்தன. (வ-9)

## நெல்லியடி–பருத்தித்துறை வரையான
# வீதி அகலிப்புப் பணி 3 மாதங்களுக்குள் நிறைவு



வடமராட்சி,மே 25

பருத்தித்துறை- யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள நெல்லியடி தொடக்கம் பருத்தித்துறை வரையான நான்கு மைல் நீளமான வீதி அகலிப்புப் பணி மூன்று மாத காலத்துக்குள் நிறைவுபெறும் என்று யாழ்.பிராந்திய வீதி அபிவிருத்தி அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

குறித்த வீதியில் வீதி அகலிப்புடன் ஆங்காங்கே வெள்ள வாய்க்கால்களும் கொங்கிறீட்டால் கட்டப்பட்டு வருகின்றன. மூன்று கட்டங்களாக இதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பருத்தித்துறை துறைமுகம் தொடக்கம் ஓராங்கட்டைச் சந்தி வரையான பருத்தித்துறை நகரப் பகுதியில் வீதி அகலிப்பு, வெள்ளவாய்க்கால்கள் அமைத்தல் ஆகிய பணிகளை சீனாவைச் சேர்ந்த பொறியியலாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் களத்தில் நின்று கண்காணித்து வருகின்றனர்.

ஓராங்கட்டை தொடக்கம் நெல்லியடி வரையான எஞ்சிய 3 மைல் தூரம் அகலிக்கும் பணிகளை தனியார் நிறுவனம் ஒன்று சீன தொழில் நுட்பவியலாளர்கள், பொறியியலாளர்களின் ஆலோசனை வழிகாட்டல்களையும் பெற்று மேற்கொண்டு வருகின்றது. (வ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு உண்டு

ஆங்கில எழுத்துக்களுடன் நான்கு தொடர் இலக்கங்களை உடைய, அரைபொடியுடன் கூடிய, 10 சில்லுகள் கொண்ட, லங்கா அசோக் லேலன்ட் லொறிகள் விற்பனைக்கு உள்ளன. அனைத்தும் ஒரு இலட்சம் கிலோ மீற்றருக்கு உள்ளே பாவிக்கப்பட்டவை.

தொடர்பு: 077 772 2305 (35134) (6)


## சொகுசு கார்களை வாங்கும் திட்டம் எதுவும் கிடையாது

அதி சொகுசுக் கார்களை இறக்குமதி செய்யும் உத்தேசம் கிடையாது என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டுக்காகப் பெரும் செலவில் ரோல்ஸ் ரொய்ஸ் மற்றும் பி.எம்.டபிள்யூ கார்கள் இறக்குமதி செய்யப்பட உள்ளதாக எதிர்க் கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன.

குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை எனவும் எந்த காரணத்துக்காகவும் இவ்வாறு வாகனங்கள் இறக்குமதி செய்யப்படமாட்டாது எனவும் வெளி விவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

வரவு-செலவுத் திட்ட யோசனைகளுக்கு அமைவாகவே பொது நலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுக்கான சகல செலவுகளும் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் அபிவிருத்தியை உலகுக்கு எடுத்துரைத்து, பொருளாதார வாய்ப்புக்களை பெற்றுக் கொள்வதே அமர்வுகளை நடத்தும் பிரதான நோக்கமெனவும் வெளி விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

(த)


## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

UN xxxx இலக்கமுடைய scooty pep (கறுப்பு நிறம்) விற்பனைக்கு உண்டு.
விலை- 55,000/= தொடர்புகளுக்கு- 077 5789324


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 10.09.1944 மறைவு 24.04.2013



அமரர்
**லோகககுகதாசன் சந்திராவதி**
[ஓய்வு பெற்ற ஆசிரியை கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்]

கடந்த 24.04.2013 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் லோககுகதாசன் சந்திராவதி அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு இன்று [25.05.2013] சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் இந்த நிகழ்வுக்குத் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(36823)(6.16.07)

**16. காட்டுக்கந்தோர் லேன்,**
**சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

## 5ஆம் ஆண்டு, முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

25-05-2013

தோற்றம் 29 05 1923 — மறைவு 14 04 2008



தோற்றம் 20 06 1930 — மறைவு 05 04 2012



**ஏகாம்பரம் சோமசுந்தரம்**
(சோமையா)

**சோமசுந்தரம் ராஜேஸ்வரி**
(தாத்தோ)

எங்கள் குடும்பத்து ஒளி விளக்கே
பாசத்தின் உறைவிடமே
நற்பண்புகளின் சிகரமே
எல்லோரையும் இன்முகத்துடன் அரவணைக்கும்
எங்கள் சோமையாவே தாத்தோவே
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து ஆண்டுகள்
ஒன்றல்ல ஐந்தல்ல பல்லாண்டுகள் சென்றாலும்
உங்களை மறவோம் நாம்

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
குடும்பத்தினர்.

இராஜஸ்தான் வதிரி, கரவெட்டி


## அலுவலக உதவியாளர் (PEON) தேவை

யாழ்ப்பாணம் வணிகர் கழக அலுவலகத் திற்கு அலுவலக உதவியாளர்கள் (PEON) தேவை. விண்ணப்பங்கள் 31.05.2013 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும்.
(நேரடியாக கையளிக்கலாம்)

இல.165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ்.வணிகர் கழகம். (C/15049)(6.11)

## காணி விற்பனைக்கு

வண்ணார்பண்ணை சிவன்கோயில், வைத்தீஸ்வராக் கல்லூரி, ஈழநாடு Press ஆகியவற்றுக்கு அருகில் உள்ள வெள்ளாந்தெருவில் 2பரப்பு 13குளி காணி விற்பனைக்குண்டு.

This property is very close to grand bazar and ideal for business or residential use.

For details contact (519) 433-3654

Contact in Jaffna:
+94 21 221 2115 / +94 21 490 7069

(35697)(3-6-7)


## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியலெட்சுமி மயில்வாகனம்



அரியாலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியலெட்சுமி மயில்வாகனம் கடந்த 19.05.2013 ஞாயிற்றுக்கிழமை அரியாலையில் காலமானார்.

அன்னார் வல்லிபுரம்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற மயில்வாகனத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி- இராசம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான நவரட்ணம், அன்னலெட்சுமி மற்றும் ராசலெட்சுமி ஆகியோரின் சகோதரியும் கனடாவில் வசிக்கும் பத்மாவதி, சிறிகாந்தரூபன், சவுந்தராஜன், காலஞ்சென்ற மஞ்சுளா மற்றும் பிரதாபன், சசிகலா மற்றும் இலங்கையில் வசிக்கும் சூரியகலா ஆகியோரின் பாசமிகு தாயும் ராஜேஸ்வரி, சிறிரங்கநாதன் (பதி), சித்திரா, கலைச்செல்வி, காலஞ்சென்ற மகேஸ்வரன் மற்றும் பத்மினி, ரவீந்திரன், ராஜமோகன், ஜெகமோகன், பாலமோகன் ஆகியோரின் மாமியும் ரஞ்சன், ரஞ்சினி, ரஞ்சிதா, வசந்தன், காலஞ்சென்ற கஜந்தன், தயா, மஞ்சு, சுகீர்தா, லீலாவதி ஆகியோரின் பெரியதாயும் வஜீதன், றஜீதன், ஷோபன், சஞ்சீவன், சிந்துஜன், கரிஷினி, சபிஸ்ஷன், மயூரன், ஜெனித்தா, சர்மிளா, தனுஷன், பவிஷ்ஷன், சரிக்கா, ரவிஷ்சன், சதுஷ்ஷா, ஐங்கரன், கவிதா, பாண்டியன், சுமன், லக்ஷன், சபித்தா, கீர்த்தனா, கிரிஷன் ஆகியோரின் பேர்த்தியும் அஸ்வின், ரிஷ்வினி, சஞ்யே ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.05.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சிந்துப்பாத்தி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இல.80, பொன்னம்பலம் வீதி,
அரியாலை.

(36827)

தகவல்:
குடும்பத்தினர்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**வான் ஒன்றை வாடகைக்கு அழைப்பின் பேரில் வழங்கக் கூடியவர்களிடமிருந்து**

### கேள்விப் பத்திரங்கள் கோரல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உத்தியோகபூர்வ தேவைக்காகப் பல்கலைக் கழகத்துக்குத் தேவைப்படும் சந்தர்ப்பத்தில் பயன்படுத்துவதற்கு வான் (Van) ஒன்றின் சேவை, அந்த வாகனத்துக்கான சாரதி, எரிபொருள், காப்புறுதி, திருத்த வேலைகள் போன்றவற்றுடன் கிலோமீற்றர் அடிப்படையில் வாடகைக்கு வழங்கக் கூடிய வாகன உரிமையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

மீளளிப்புச் செய்யப்படாத வைப்புப் பணமாக ரூபா 500.00 பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டை சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ நிர்வாகம் அவர்களிடம் சமர்ப்பித்துக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**இவ்வாகனமானது பின்வரும் விடயங்களைப் பூர்த்தி செய்வதாக அமையவேண்டும்.**

1. வாகனம் 1997ஆம் ஆண்டுக்குப் பின்னர் பதிவுசெய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
2. இருபொறிமுறைக் குளிரூட்டி **(Dual Air Conditioning)**
3. போதிய இடவசதியுடனான குறைந்த பட்சம் 10 பேருக்கான இருக்கை ஒழுங்கமைப்பு **(Comfortable Seating Arrangements with Adequate Space for Legs)**
4. மாற்றியமைக்கக் கூடிய இருக்கைகள் **(Adjustable Seats)**

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரப் படிவங்களை 07.06.2013 பி.ப. 02.30 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபாலில் **தலைவர், கேள்விச் சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி** என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

கடித உறையின் இடது புற மேல் மூலையில் **''வான் ஒன்றை வாடகைக்கு வழங்குதல்''** என்று குறிப்பிடல் வேண்டும். நேரடியாகச் சமர்ப்பிக்க விரும்புவோர் மேற்குறித்த காலவரையறைக்குள் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியுள் இடலாம். கேள்விப் பத்திரப் படிவம் மற்றும் நிபந்தனை விவரங்களை நிர்வாகக் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடம் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம். பல்கலைக்கழகக் கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

பதிவாளர்.


## காணி விற்பனைக்கு

பலாலிறோட், உரும்பிராய் மடத்தடிக்கு அருகில் 3½ பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:077 844 8937,
077 833 1144 (36814)(6.11)

## காணி விற்பனைக்கு

இல. 74, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணத்தில் 1¼ பரப்பு கிணற்றுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 077 3911477

தென்மராட்சியில் வசிக்கும் மக்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி

## நியூ எய்ஸர் சப்ளயர்ஸ்

தென்மராட்சியில் கால் பதித்துள்ளது.

* பல வர்ணங்களில் கொமோட் வகைகள்
* கண்கவர் டிசைன்களில் பலவர்ண டைல் வகைகள் (லங்கா மற்றும் இறக்குமதி செய்யப்பட்டவை)
* பாத்றூம் பிற்றிங்குகள், கிச்சின் சிங்குகள்
* Stand fan, Celing fan வகைகள்
* எலக்ரிக்கல், பிளம்பிங் பொருள்கள், மோட்டர் வகைகள்



அனைத்தையும் வியக்கத்தக்க குறைந்த நியாயமான விலைகளில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.

அங்கு இங்கு எங்கும் செல்லத்தேவையில்லை வாருங்கள் எம்மிடம்



நியூ எய்ஸர் சப்ளயர்ஸ்
இல. 325,A 9 கண்டி வீதி,
சாவகச்சேரி. 077 914 2010
(சாவகச்சேரி வைத்தியசாலைக்கும் இந்துக்கல்லூரிக்கும் இடையில்)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு நிதி வழங்குகிறது சீனா

## ரொய்ட்டர் தெரிவிப்பு

கொழும்பு,மே 25

இலங்கையின் முக்கிய உட்கட்டமைப்பு பணிகளுக்காக சீனா 580 மில்லியன் டொலர்களை வழங்கவுள்ளது என்று ரொய்ட்டர் தெரிவித்துள்ளது.

ரொய்ட்டர் செய்தி சேவை இலங்கையின் அரச அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி இதனை தெரிவித்துள்ளது.

கடன் அடிப்படையில் வழங்கப்படும் இந்த நிதியுடன் இலங்கைக்கு சீனா வழங்கும் கடன் தொகை 1.4 பில்லியன் டொலராக உயர்கிறது.

> இலங்கைக்கு சீனா வழங்கும் கடன் தொகை 1.4 பில்லியன் டொலராக உயர்கிறது.

இந்தநிலையில் சீனா, இலங்கைக்கு வழங்கும் இந்த நிதியுதவி இந்திய நலன்களுக்கு மேலும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று ரொய்ட்டர் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை புதிதாக வழங்கப்படும் 580 மில்லியன் டொலர்களில், 300 மில்லியன் டொலர்கள் வீதி அபிவிருத்திக்கும், 200 மில்லியன் டொலர்கள் நீர் விநியோக பணிகளுக்காகவும் ஒதுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# முஸ்லிம் கட்சிகள் ஆதரிக்க கூடாது '19' ஆவது திருத்தச் சட்டத்தை

## முஸ்லிம் மக்கள் கட்சி வேண்டுகோள்



கொழும்பு,மே 25

மாகாண சபைகளின் அதிகாரங்களைக்குறைக்கும் 19 ஆவது திருத்தச்சட்டத்துக்கு முஸ்லிம் கட்சிகள் எந்தவகையிலும் ஆதரவளிக்கக்கூடாது என்று முஸ்லிம் மக்கள் கட்சி தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கட்சியின் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் மௌலவி தெரிவித்ததாவது:-

நாட்டில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுள்ள இப்போதுள்ள நிலை என்பது போர் அற்ற நிலையாகும். தமிழ் - முஸ்லிம் முறுகல் ஓரளவு நீங்கியுள்ளதோடு நாட்டின் முழு அதிகாரமும் இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது.

ஆனாலும் சிங்கள -முஸ்லிம் இனங்களுக்கிடையில் முறுகலும் சந்தேகங்களும் ஒரு காலத்திலும் காணாத அளவு தற்போது அதிகரித்துள்ளது.

அதனால், புலிகள் காலத்தில் இடம்பெறாத அளவுக்கு தற்போது தமிழ் பேசும் மக்களின் காணிகள் ஆக்கிரமிக்கப்படுவதை அன்றாடம் காண முடிகிறது.

அதேபோல், பொதுமக்களின் பிரச்சினைகள் குறித்து நீதியான முறையில் பொலிஸார் செயற்படுவதில்லை என்ற பொது மக்களின் முறைப்பாடுகளை பரவலாக ஊடகங்களில் காண முடிகிறது. அதேபோல் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களைக் கொண்டவை என்பதால் காணி, பொலிஸ் அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்படுவதனூடாகவே இன ஒற்றுமையையும், அதிகார தரப்பு பற்றிய மக்களின் சந்தேகங்களையும் நீக்க முடியும்.

அதனால் 19ஆவது திருத்தச் சட்டத்துக்கு நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் கட்சிகள் ஆதரவளிக்கக்கூடாது.-என்றார். (ச)

# வருட இறுதிக்குள் மாணவர் இணைப்பு

## ஜூன் தொடக்கம் விண்ணப்பம் ஏற்பு

கொழும்பு,மே 25

2012 ஆம் ஆண்டில் நடைபெற்ற உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் இந்த வருட இறுதிக்குள் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படுவர் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மாணவர்களை பல்கலைக்கழகத்துக்கு உள்வாங்குவது தொடர்பான கையேடு தற்போது தயாரிக்கப்பட்டு வருகிறது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் க்ஷனிகா கிரும்புரேகம தெரிவித்தார்.

அந்த நடவடிக்கை அடுத்த வாரம் நிறைவு பெறும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதற்கமைய எதிர்வரும் ஜூன் மாதம் தொடக்கம் பல்கலைக்கழகங்களுக்குப் புதிய மாணவர்களை இணைத்துக் கொள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்று அவர் கூறினார். (ச)

# சட்டவிரோத குடியேறிகள் உடன் நாடு திரும்புங்கள்

## அமைச்சர் டிலான் வேண்டுகோள்



கொழும்பு, மே 25

சவூதி அரேபியாவில் சட்டவிரோதமாக தங்கி இருக்கும் இலங்கையர்களை நாடு திரும்புமாறு வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் டிலான் பெரேரா வேண்டுகோள் விடுத்துள்ளார்.


இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

" சவூதி அரேபியா அரசு அறிவித்துள்ள பொது மன்னிப்பினை இலங்கையர்கள் பயன்படுத்த வேண்டும். அங்கு கடமையாற்றும் 5000 முதல் 6000 வரையான இலங்கையர்கள் நாடு திரும்ப முடியவில்லை.

சட்டவிரோதமாக தங்கியிருக்கும் வெளிநாட்டவர்கள் நாட்டை விட்டு வெளியேற எதிர்வரும் ஜூலை மாதம் 31 ஆம் திகதி வரை பொது மன்னிப்பு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இதன் பின்னர் சவூதியில் வாழும் சட்டவிரோத வெளிநாட்டவர்கள் 2 வருட சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று அந்த நாட்டுச் சட்டம் கூறுகின்றது.

சட்டவிரோதமாக தங்கியிருக்கும் இலங்கையர்கள் நாடு திரும்ப அங்குள்ள இலங்கை தூதரகம் 24 மணி நேர சேவை வழங்குகின்றது. 400 பேர் நாடு திரும்புவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-ரி)



கண்டி தலதா மாளிகைக்குச் சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, உடுகம ஸ்ரீ புத்தரக்கித்த தேரரைச் சந்தித்து அவருக்கு 24 மூலிகைகளுடன் கூடிய சிறிய மேசையொன்றை அன்பளிப்புச் செய்தார். அருகில் முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க, ஆளுநர் டிக்கிரிகொப்பேகடுவவும் காணப்படுகின்றனர். (ச)

# மாற்று அரசியல் தீர்வு இல்லாமல் '13' ஐ இல்லாதொழிக்கக் கூடாது

## ம.ம.முன்னணி செயலர் லோறன்ஸ் தெரிவிப்பு

கொழும்பு,மே 25

மாற்று அரசியல் தீர்வு இல்லாமல் 13ஆவது திருத்தத்தை இல்லாதொழிக்கக் கூடாது என்று மலையக மக்கள் முன்னணியின் செயலர் அ.லோறன்ஸ் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு வடக்கு, கிழக்குத் தமிழ் மக்கள், மலையக தமிழ் மக்கள், முஸ்லிம் மக்களின் பிரச்சினை உள்ளடக்கிய ஓர் இனப் பிரச்சினைத் தீர்வாக அமையவேண்டும். வடக்கு, கிழக்குப் பிரச்சினைக்கு ஒரு மட்ட தீர்வையாவது தந்துள்ள 13ஆவது திருத் தத்தை மாற்று ஏற்பாடுகள் இல்லாத நிலை யில், முற்றாக இல்லாதொழிப்பதற்கு இனவாத சக்திகள் எடுக்கும் முயற்சிகளுக்கு அரசும், அது சார்ந்த கட்சிகளும், எதிர்க்கட்சிகளும் துணைப்போய் விடக்கூடாது.- என்றார். (ச)

# அழியும் நிலையில் வெண்சந்தனம்

கொழும்பு,மே25

இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்குக் கடத்தப்படும் மூலிகைத் தாவரங்களில் வல்லபட்ட மற்றும் வெண்சந்தனம் ஆகியவற்றுக்கு ஆபத்தான நிலை ஏற்பட்டுள்ளது என்று சூழலியலாளர்கள் தெரிவித்தனர்.



கடந்த காலப் பகுதியில் பல்வேறு சந்தர்ப்பங்களில் அவை கடத்தப்பட்டபோது அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டன என்று சூழலியல் சட்டத்தரணி ஜகத் குணவர்தன குறிப்பிட்டார்.

வன பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் ஊடாக தாவரங்களை அழிப்பது தடைசெய்யப்பட்டுள்ள நிலையில், வல்லபட்ட தாவரமே அதிகளவில் அழிவை எதிர்நோக்கியுள்ளது என்று அவர் கூறினார். (ச)

# கழிவுகளை அகற்றத் தவறின் அனுமதிப்பத்திரம் உடன் ரத்து

## சூழல் மாசடைவதை தடுக்க நடவடிக்கை என்கிறார் சுசில்



கொழும்பு,மே 25

கழிவுகளை உரிய முறையில் வெளியேற்றத் தவறும் ஹோட்டல்களது சூழல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் உடனடியாக ரத்துச் செய்யப்படும் என்று சுற்றாடல் மற்றும் மீன் சக்தி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கரையோரங்களில் அமைந்துள்ள ஹோட்டல்கள் எமது கழிவுகளை நேரடியாக கடலுக்குள் செலுத்துவதனால் கடல் நீர் மாசடைவதை தவிர்க்கும் முகமாகவே, ஹோட்டல்களின் கழிவகற்றும் செயற்பாடுகள் குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது.

இதனை உரிய முறையில் [illegible] முறைப்படுத்துவதற்காக [illegible] ஹோட்டல்களிலும் கழிவுகளை சுத்திகரிக்கும் பொறிமுறையொன்று இருக்க வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் அதிகாரிகள் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவர். அவ்வாறானதொரு பொறிமுறை செயற்படுத்தப்படாத ஹோட்டல்களின் சூழல் பாதுகாப்புக்கான அனுமதிப்பத்திரம் உடனடியாக ரத்துச் செய்யப்படும்.-என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

வன்னிப் பணிமனை:
ஏ9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி: 021 2262789, 021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: ... மாலுசந்தி, அல்வாய்: 021 226 3206. 'நெல்லியடி ... நெல்லியடி: 021 490 1519. ஜோதி புக் சென்டர் மன்னார்: 023 222 2052 ... கண்டி வீதி, ... தெற்கு: 021 227 0399. மன்னார் சிவசக்தி தாழ்வுபாடு வீதி, மன்னார்: 0752824478. 'கொடிகாமம் அருள்நாயகி' ... நிலையம், கொடிகாமம்: 0774937585. 'கோபி ...' முல்லைத்தீவு நகர்: 0779598917, 'அன்புசன்', சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான்: 0775035571.

## தேடிச் சென்று உதவுக

அங்கக் குறைபாட்டோடு வாழ்பவர்களை 'விசேட தேவையுடையோர்', 'மாற்றுவலுவுடையோர்' என்ற சொற்கள் அவர்களின் குறைகளை சுட்டிக் காட்டாத வகையில் உருவாக்கப்பட்டும் கூட அவை இன்னமும் ஏட்டளவிலேயே இருக்கின்றன. பத்திரிகைகளிலும், கட்டுரைகளிலும் மாத்திரமே இத்தகைய சொற்களின் மூலம் அங்கங்களை இழந்தவர்கள் காட்டப்படுகிறார்கள். மற்றும்படி அவர்கள் 'குருடு', 'நொண்டி', 'சொத்தி', 'ஊமை' என்ற உள்ளத்தைத் தைக்கும் சொற்களாலேயே அடையாளப்படுத்தப்படுகிறார்கள்.

எவருமே வேண்டுமென்றே தமது அங்கங்களை ஊனமாக்கிக் கொள்வதில்லை. பிறப்பில் ஏற்பட்ட குறைபாடு, விபத்துகள், போர், பரம்பரை ரீதியாக ஊனமாகக் கடத்தப்படும் நோய்க் காவிகள், போலியோ போன்ற அங்கக் குறைபாட்டை ஏற்படுத்தக் கூடிய நோய்கள் என்பனவே ஏனைய மனிதர்களிடம் உள்ளதைப்போன்ற அங்கங்களை இவர்களிடமிருந்து பறித்து விடுகின்றன. மற்றவர்கள் இயல்பான மனிதர்களாக ஓடித்திரியும் போது தாம் மட்டும் ஊனமுற்றவர்கள் என்ற முத்திரை குத்தலோடு ஒதுக்கப்பட்டு மூலையில் இருப்பதை நினைத்து அவர்கள் கண்ணீர் வடிக்காத நாள்கள் இருக்காது. ஆயினும் அவர்கள் தங்களுடைய குறைகளையே ஒரு ஓர்மத்தோடு நிறைகளாகவும் மாற்றியிருக்கிறார்கள்.

கை, கால் இருப்பவர்கள் கூட பஸ் நிலையங்களிலும், கோயில்களிலும் நின்று பிச்சை கேட்டு கையேந்துகையில் இத்தகைய மாற்று ஆற்றலுள்ளவர்கள் வேலை செய்து வருமானத்தை ஈட்டி வருகிறார்கள். இன்னும் சிலர் கல்வியில் சிறந்து விளங்கி ஏனையோருக்கு நிகரான நிர்வாக பணியாளர்களாகவும் உள்ளார்கள். இவர்கள் தம்முடைய குறையை மறைக்க அல்லது மறக்க இன்னொரு துறையில் மேற்கிளம்ப முனைகிறார்கள். இதனால் அண்மைக் காலமாக கல்வித் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் மாற்று ஆற்றலுள்ளவர்கள் பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளார்கள்.

வாழ்வில் மற்றவர்களைப்போல நாமும் உழைத்து முன்னேற வேண்டும் என்ற ஓர்மமும், முயற்சியும் இருந்தும் கூட இன்றைக்கும் பெரும்பாலான மாற்று வலுவுள்ளவர்கள் வீடுகளில் முடங்கியே கிடக்கிறார்கள். காரணம், இவர்களுக்குரிய பொருளாதார முதலீடு கிடைப்பதில்லை. மாற்று ஆற்றலுள்ளவர்களை நம்பி எவரும் பணம் கொடுக்கத் தயாராக இல்லை. இவர்களுக்கு வங்கிகளில் விசேட கடன்கள் இருப்பதாகக் கூறப்பட்டாலும் கூட அந்தக் கடன்களை குறித்த வங்கிகள் ஆயிரத்தெட்டுத் தரம் அலைக்கழித்த பின்னே, பிச்சை போடுவதுபோல மாற்றுவலுவுள்ளோருக்கு வழங்குகின்றன. எதற்கு வீணலைச்சலும் அவமானமும் என்ற எண்ணத்தில் தமக்குரிய விசேட கடன்களைப் பெற்றுக்கொள்ள இவர்கள் பின்னடிக்கிறார்கள்.

இதேவேளை ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் உள்ள சமூக சேவைத் திணைக்கள அதிகாரிகளும் கதிரையில் இருந்தபடியே 'மாற்றுவலுவுள்ளோர்கள் உதவி தேவை என்றால் எங்களைத் தேடி வரவேண்டும். அப்போதுதான் ஏதாவது செய்வோம்' என்று நினைக்கிறார்களே தவிர, அவர்களைத் தேடிச் சென்று தோள் கொடுக்கும் மனப்பாங்கு குறைந்தவர்களாகவே இருக்கிறார்கள். அவ்வாறில்லாமல் மாற்று ஆற்றலுள்ளோருக்கு தேடிச் சென்று உதவ வேண்டும் என்று சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் இமெல்டா தெரிவித்துள்ளார். உண்மையில் அவரது கூற்று வரவேற்கத்தக்கதே.

காலத்தால் செய்த உதவியே ஞாலத்திலும் பெரிது. அதிலும் இயலாமையால் முடங்கிக் கிடப்பவரின் வாழ்வில் தேடிச் சென்று ஒளியேற்றுவது இன்னும் பெரிய செயல். கேட்க முதலே தருபவர்களுக்கும், தட்ட முதலே திறக்கப்படும் கதவுகளுக்கும் எப்போதும் மதிப்பு அதிகம்.

# 1956 பௌத்த அலையும் 2014 புதிய அரசமைப்பு அலையும்

மூலம் உப்புல் ஜோசெப் பெர்னாண்டோ
தமிழில் வீஎஸ்ரீ

1947 ஆம் ஆண்டில் பதவிக்கு வந்த ஐ.தே.கட்சி அரசை எவராலும் வீழ்த்த இயலாது என்றதொரு பொது நம்பிக்கை அந்தக் காலகட்டத்தில் நிலவியது. பிரதமர் டி.எஸ்.சேனநாயக்காவுக்குப் பின்னர் பிரதமர் பதவியை அடைய எதிர்பார்த்துக் காத்திருந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க அரசிலிருந்து வெளியேறிய சமயத்தில் அரசு வீழ்ச்சியடையப் போகிறது என்று சிலர் எதிர்வு கூறியபோதிலும் ஐ.தே.கட்சி அரசு நலிவு காணவில்லை. டி.எஸ்.சேனநாயகாவின் மரணத்தின் பின்னர் இடம்பெற்ற பொதுத்தேர்தலிலும் ஐ.தே.கட்சியே பெருவெற்றி கண்டது. ஐ.தே.கட்சி அரசைப் பண்டாரநாயகவாலும் கூட வீழ்த்திவிட இயலாதென அந்த வேளையில் பலரும் உணர்ந்து கொண்டனர்.

அந்தக் காலகட்டத்திலேதான் அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனம், பௌத்த மதத்தை மேன்நிலைப் படுத்தும் நோக்குடன் ஆணைக் குழுவொன்றை நியமித்தது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் கீழ் இயங்க நேர்ந்ததால் பௌத்தர்களது விகிதாசாரம் குறைவடைவதாகவும், பௌத்த மதத்தவர்கள் புறந்தள்ளப்படுவதாகவும் அந்த ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளித்த பௌத்த மதத் தலைவர்கள் உட்பட சிங்கள புத்திஜீவிகள் குற்றம் சுமத்தினர். பௌத்த மதத்தைக் காப்பாற்ற வேண்டுமானால் ஆட்சியாளர்கள் அந்த விடயத்தில் அக்கறை காட்டி தலைமை தாங்கிச் செயற்பட வேண்டுமென்ற கருத்துக்கு கடும் ஆதரவு நிலவியது.

1956 ஆம் ஆண்டில் அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனம் தான் நியமித்த ஆணைக் குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த அரசியல் தலைமைத்துவமொன்றை தேட முயன்றது. சிங்கள பௌத்த பின்னணியை இழந்திருந்த, மேற்குலக நாடுகளின் ஆதரவாளரான அந்த வேளைய பிரதமர் சேர்.ஜோன் கொத்தலாவலவுடன் பௌத்த மகா சம்மேளன பௌத்த பிக்குமார் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டபோதிலும், பௌத்த மதத்தை வளர்ச்சியடைய வைப்பதற்கான ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த சேர்.ஜோன் நாட்டமெதனையும் காட்டினாரில்லை.

இதனால் அதிருப்தியுற்ற பௌத்த பிக்குமார், ஐ.தே.கட்சி அரசை வீழ்த்தும் திட்டத்துக்குத் தலைமை தாங்கி வழி நடத்தப் பொருத்தமான தலைவரொருவரைத் தேட ஆரம்பித்தனர். அந்த வகையில் முதலில் அவர்கள் அந்த வேளைய எதிர்க்கட்சித் தலைவர் பண்டாரநாயக்கவைச் சந்தித்தனர். அந்த வேளையில் சேர்.ஜோன். கொத்தலாவலவுடன் முரண்பட்டுக் கொண்டு பிரதமர் பதவியை விட்டு விலகி தற்காலிகமாக அரசியலில் இருந்து ஒதுங்கியிருந்த டட்லி சேனநாயக்கவை தலைமைதாங்க உடன்பட வைத்தால் தாமும் டட்லியுடன் இணைந்து அரசை வீழ்த்தும் திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்க முடியுமென பண்டாரநாயக்க பௌத்த பிக்குமாரிடம் தெரிவித்தார். மக்களைக் [illegible] அந்த வேளையில் பண்டாரநாயக்க நம்பியதால் பௌத்த பிக்குமார் நேராக டட்லி சேனநாயக்கவிடம் சென்று தமது கோரிக்கையை முன்வைத்தனர். டட்லி சேனநாயக்கவோ, தம்மால் அரசியல் அரங்குக்கு வெளியிலிருந்தே உதவ முடியுமெனவும், அரசைக் கவிழ்க்கும் திட்டத்துக்குத் தலைமை தாங்க பண்டாரநாயக்கவே பொருத்தமானவர் எனவும் தெரிவித்ததுடன், அடுத்த பொதுத் தேர்தலில் சேனநாயகா குடும்பம் கொத்தலாவலவுக்கு ஆதரவு வழங்க மாட்டாதெனவும் உறுதியளித்தார். அத்துடன் பௌத்த பிக்குமாரின் முயற்சிக்குத் சேனநாயக்க குடும்பத்தைச் சேர்ந்த ஆர்.ஜி.சேனநாயக்கவின் உதவி ஒத்தாசையையும் பெற்றுத் தருவதாகவும் பௌத்த பிக்குமாருக்கு வாக்குறுதி வழங்கினார்.

எவராலும் வீழ்த்த இயலாதென விமர்சிக்கப்பட்ட ஐ.தே.கட்சி அரசை, 1956 ஆம் ஆண்டில் பௌத்த பிக்குமார் தரப்பு தமது விடாமுயற்சியால் பதவிலிருந்து அகற்றி, பௌத்த மத உரிமைகளைப் பாதுகாக்கும் ஓர் அரசை உருவாக்கும் போராட்டத்தை முன்னெடுத்த வரலாறு இதுவே. அவர்களது





அந்த முயற்சிக்கு நாடு பூராவும் பரந்து வாழ்ந்து வந்த பௌத்த பிக்குமார் தரப்பின் பூரண ஆதரவும் கிட்டியது.


இன்று மாதுளுவாவே சோபித தேரர் ஆரம்பித்துள்ளதும் அத்தகையதொரு போராட்டமே. 1978 ஆம் ஆண்டின் அரசமைப்பு மூலம் நாசமுற்ற அரச நிர்வாக நடைமுறையில் மாற்றத்தை ஏற்படுத்த முயலும் போராட்டமே அது. முன்னர் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், மற்றும் ஆங்கிலேயர் என்ற ஏகாதிபத்திய வாதிகளது நிர்வாகத்தில் பௌத்தமதம் நலிவுபடுத்தப்பட்டது. இன்று இந்த நாட்டின் அரச நிர்வாக நடைமுறை சீர்குலைந்தமைக்குக் காரணம் 1978 ஆம் ஆண்டின் அரசமைப்பு நடைமுறைப் படுத்தப்பட்ட நாள்முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட நிறைவேற்று ஜனாதிபதிகளின் நிர்வாகமே. ஆயினும் இந்த நடைமுறையை மாற்றியமைக்கத் தலைமை தாங்கிச் செயற்படத் தக்கதொரு தலைவரைக் கண்டுபிடிக்க அன்று போன்று இன்றும் சோபித தேரர் உட்பட பௌத்த குருமார் சிரமமுற நேர்ந்துள்ளது. அன்றைய சேர்.ஜோன் கொத்தலாவல போன்று இன்று ஆட்சி அதிகாரம் கொண்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் நிறைவேற்று அதிகாரங்களை மேலும் பலப்படுத்தும் நோக்குடன் செயற்படுகிறாரேயன்றி, அவற்றை விலக்கிக் கொள்ளும் வகையில் செயற்பட விரும்பவில்லை.

அன்றுபோன்று இன்றும்கூட எவராலும் கவிழ்க்க இயலாதெனக் கூறப்படும் மஹிந்தவின் தலைமையிலான அரசைக் கவிழ்த்து நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழித்துக் கட்டி நாட்டின் நிர்வாக நடைமுறையில் மாற்றத்தை ஏற்படுத்த இந்த நாட்டின் பௌத்தமத பீடங்களாலேயே இயலும். 1956 ஆம் ஆண்டைப் போன்று இன்றும் சோபித தேரரின் தலைமையில் நிறைவேற்று ஜனாதிபதி நடைமுறையை மாற்றியமைக்க ஆணைக்குழு வொன்றை உருவாக்கி நாடு தழுவிய ரீதியில் பௌத்த விகாரைகளில் உதவு அமைப்புக்களை நிறுவி சாட்சியங் களைப் பெற்று அறிக்கையொன்றைத் தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால், நாட்டின் நிர்வாக நடைமுறையை மாற்றியமைக்கத்தக்க தலைவரொருவரோ அல்லது தலைவியொருவரோ தானாக உருவாக வாய்ப்புண்டு.

இன்று எதிர்க்கட்சியில் அன்றைய தலைவர்கள் போன்று எவரும் இல்லை. அன்று பண்டாரநாயக்கவைத் தலைமை தாங்குமாறு பௌத்த பிக்குமார் கோரியபோது தம்மைவிட டட்லி சேனநாயக்கவுக்கு நாட்டு மக்களது ஆதரவு அதிகமுள்ளதெனக் கூறி பண்டாரநாயக்க, டட்லி சேனநாயக்கவின் தலைமைத்துவத்தின் கீழ் தாம் செயற்பட விரும்பினார். டட்லி சேனநாயக்காவை பௌத்த பிக்குமார் அணுகியபோது பண்டாரநாயக்காவுக்கே தலைமைத்துவத்தை வழங்குமாறு டட்லி சேனநாயக்க பெருந்தன்மையுடன் கூறிக்கொண்டார். அன்று தலைமைத்துவ வேட்கை கொண்ட தலைவர்களல்லாது, கொள்கையை வென்றெடுக்க எத்தகைய அர்ப்பணிப்பையும் மேற்கொள்ள தயாரான தலைவர்களே இருந்தனர். இன்றுகூட சோபித தேரரின் போராட்டத்துக்குத் தலைமை தாங்கி வழி நடத்த அத்தகையதொரு தலைவரே அவசியமாகிறார். அத்தகைய தலைவரொருவரோ தலைவியொருவரோ ஆகாயத்திலிருந்து குதிக்கப்போவதில்லை. வேளை வரும் போது மக்கள் மத்தியிலிருந்து அத்தகைய ஒருவர் உருவாவார். இன்று நிறைவேற்று ஜனாதிபதி நடைமுறையை இல்லாதொழிக்கும் யோசனைக்கு மகாநாயக்க தேரர்களது ஆசீர்வாதமும் கிட்டியுள்ளது. அன்று குங்குணாவே பௌத்த மதகுருமார் சிறையில் இருந்தவாறே வெள்ளையர்களை இந்த நாட்டிலிருந்து விரட்டியடிக்க அரசனொருவனைத் தேடமுயன்றனர். இன்று சோபித தேரர் தேடுவதும் அத்தகையதொரு தலைமைத்துவத்தையே. அத்தகையதொரு தலைமைத்துவம் இந்த நாட்டு அரசியலரங்கில் உருவாவதற்கான காலம் வெகு தூரத்தில் இல்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வீசுமா? வசந்தம்....



புதியவன்

யாழ்ப்பாணம் இளவாலைப் பிரதேசத்தில் இயற்கை வளம் கொழிக்கும் ஓர் அழகிய சிற்றூர் வசந்தபுரம். கடல்வளம் காவாந்து பண்ணும் கள்ளங்கபடமற்ற மாந்தரைக் கொண்ட ஊர் வசந்தபுரம்.

பழைய பெயர் 'சிங்கத்தின் காடு' அதனாலோ என்னவோ வாழும் மக்கள் விலங்குகளாகவே நடத்தப்படுகிறார்கள். உடுக்க உடையில்லை, உறங்க ஒரு வசதியான இடமில்லை வெட்டை வெளியிலே குளிக்கிறார்கள். மலம் கழிக்க காட்டுப்புறம் செல்கிறார்கள். இந்த ஊரில் வாழக்கூடிய சூழ்நிலை இல்லை. பெயர் மாற்றம் பெற்றதே தவிர ஊரில் மனிதர்களில் எந்தவித மாற்றமும் தென்படவில்லை. இங்கு சுமார் 110 குடும்பங்களைச் சேர்ந்த 550 பேர் வாழ்கின்றனர். இதில் 200 பேர் பாடசாலையில் படிக்கும் மாணவர்கள். போர்க் சூழல் காரணமாக சொந்த இடமாகிய வசந்தபுரத்தைவிட்டு இடம்பெயர்ந்து வேறு இடங்களில் பல இன்னல்களை அனுபவித்து வாழ்ந்து வந்தவர்கள்.

சொந்தபந்தம், சொத்துக்களை இழந்து நிர்க்கதியாய் போர் முடிந்த பின் மீண்டும் தமது சொந்த இடத்துக்கு வந்து குடியமர்ந்தார்கள். போர் முடிந்து நான்கு வருடங்களாகியும் பழங்குடிவாழ் மக்களாகவே இப்பொழுதும் இவர்கள் வாழ்கின்றனர். ஊர் மத்தியில் கூட ஒரு பொதுவான மலசல கூடமோ, பொதுவான குளியல் அறைகளோ, கட்டடமோ இல்லை.

இதனை யாரிடம் சொல்வது? வாழ்க்கையை வாழமுடியவில்லை. ஊர் நடுவே உள்ள கூடத்தார் அம்மன் கூட கண் திறக்க மாட்டாளா? என ஏங்கித் தவிக்கிறார்கள் இந்த மக்கள். கொட்டும் மழைக்குக் கூட ஒதுங்க இடமில்லாமல் மழையில் நனைந்து வெய்யிலில் காய்ந்து ஓலைக் குடில் கூட ஒழுங்காக இல்லாமல் ஒவ்வொரு கணமும் நகர்ந்து கொண்டிருக்கின்றது இவர்களது அவல வாழ்க்கை. இங்கு வாழும் ஒவ்வொருவரதும் முகங்களில் சோகம் அப்பிக் கிடக்கிறது. ஊரிலே மழலைகளின் சிரிப்புக்குக் கூடபஞ்சம். இந்த ஊரில் வாழும் வயதான பெரியவர் ஒருவரின் கருத்து இது.

''எனது பெயர் நாகலிங்கம். எனக்கு 80 வயதாகின்றது. எனக்கு மொத்தம் 5 பிள்ளைகள். அவர்களில் மூன்று ஆண் பிள்ளைகள். 2 பெண் பிள்ளைகள். இவர்களில் இரு ஆண்பிள்ளைகள் திருமணமாகிச் சென்றுவிட்டனர். மற்றைய ஆண் பிள்ளையின் சம்பாத்தியத்திலேயே எனது இரண்டு பெண் பிள்ளைகள் உட்பட நானும் எனது மனைவியும் வாழ்கின்றோம்.

பெண் பிள்ளைகள் உயர்தரம் வரை படித்துள்ளார்கள். அவர்களுக்கு ஒரு வேலையும் இல்லை. எனக்கும் வயதாகிவிட்டது. இங்கு ஒரு தொழில் வாய்ப்பும் இல்லை. போர்க்காலத்தில் இடம்பெயர்ந்து பல இடங்களில் இருந்தோம். அங்கு நாம் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்துள்ளோம். போர் முடிவுற்ற பின்னர் நாம் இங்கு வந்து பல வருடங்கள் கழிந்தும் எந்தவித முன்னேற்றமும் எமக்கு ஏற்படவில்லை.

ஊருக்கொரு பாடசாலை இல்லை, கோயில் இல்லை, பொதுமலசல கூடமில்லை. மின்சாரம் இல்லை. ஒரு தரமான குடிசை கூட இல்லை. மனிதன் வாழ்வதற்கான எந்தவித சாத்தியக் கூறுகளும் இங்கு இல்லை.

பதவியில் உள்ளவர்கள் ஒரு நாள் கூட வந்து பார்த்ததும் இல்லை. எம் கேள்விகளுக்குப் பதில் சொல்ல அவர்களால் முடியாது. எங்களுக்கு கோபுரம் வேண்டாம், ஒரு குடிசை போதும். ஊருக்கு ஒரு பாடசாலை வேண்டும். இங்கு உள்ள மாணவர்கள் பல மைல் தூரம் நடந்து போய்ப் படிக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவித அடிப்படை வசதிகள் கூட யாரும் செய்து தரவில்லை. எத்தனையோ பேர் தேர்தலின் போது அது செய்வோம், இது செய்வோம் என்று சொன்னார்கள். ஆனால் அதன் பின்பு வாக்குறுதியை நிறைவேற்ற எவரும் அக்கறை காட்டவில்லை.

ஊர் என்று சொல்வதற்கு எந்தவொரு அம்சமும் இல்லாத இந்த ஊருக்கு ஏன் கிராம சேவையாளர், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் மற்றும் மாதர் சங்கம், அரசியல் வாதிகள் எவரும் தேவையில்லையே?'' என்று அவர் கடிந்து பேசினார்.

இது தொடர்பாக அந்தப் பகுதிக்குரிய கிராம சேவையாளர் அன்ரனிரோயிடம் வினவியபோது:-

''எனது J/222 பிரிவின் கீழ் 8 கிராமங்கள் உள்ளன. இந்தப் பிரிவுக்கு கிடைக்கும் உதவியை நான் பிரித்து வழங்கவேண்டிய நிலையில் உள்ளேன். இனிவரும் காலத்தில் வசந்தபுரத்துக்குத் தேவையான வசதிகளைப் பெற்றுக்கொடுப்பேன்'' எனக் கூறினார்.

வசந்தபுரத்தில் எந்தவித அடிப்படை வசதியும் இன்றி நிர்க்கதியாக உள்ள மக்கள் குறித்து சமூகப் பொறுப்புள்ள நிறுவனங்கள், சமூக ஆர்வலர்கள், உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

ஊருக்கொரு பாடசாலை இல்லை, கோயில் இல்லை, பொதுமலசல கூடமில்லை. மின்சாரம் இல்லை. ஒரு தரமான குடிசை கூட இல்லை. மனிதன் வாழ்வதற்கான எந்தவித சாத்தியக் கூறுகளும் இங்கு இல்லை. எங்களுக்கு கோபுர வீடு வேண்டாம், ஒரு குடிசை போதும். ஊருக்கு ஒரு பாடசாலை வேண்டும். எத்தனையோ பேர் தேர்தலின்போது அது செய்வோம், இது செய்வோம் என்று சொன்னார்கள். ஆனால் அதன் பின்பு வாக்குறுதியை நிறைவேற்ற எவரும் அக்கறை காட்டவில்லை.

# சமையலும் ஒரு கலைதான்

கவிதாயினி

இன்று அநேகமானவர்களிடம் உங்களுக்கு சமைக்கத் தெரியுமா என்று கேட்டால் 'நான் இதுவரை சமையலறைப் பக்கமே சென்றதில்லை' என்றுதான் கூறுவார்கள். சமைப்பதற்குத் தெரியவில்லை என்று கூறுவதை இன்றைய நாகரிகமாக அவர்கள் கருதுகிறார்கள். சுளகு கொண்டு அரிசியை புடைப்பதற்கு தெரியாத பெண்களையும் விசேட தினங்களில் இனிப்புப் பண்டங்களை கடைகளில் வாங்கும் பெண்களையுமே இன்று அநேகமாகக் காணக்கூடியதாக உள்ளது. எமது மூதாதையர் கட்டிக்காத்த இந்த சமையற்கலை கொஞ்சம்கொஞ்சமாக அழிந்து போய்விடும் நிலையில்தான் உள்ளது.

பெண்களும் சரி, ஆண்களும் சரி, சமையலை ஓர் அநாவசிய விடயமாக கருதுவதை முதலில் நிறுத்த வேண்டும்.

சமையல் என்பதும் ஒருவகை கலைதான். அந்தக் கலையை விருப்பத்துடன் மேற்கொள்வோமானால் எம்மைப்போல் சமைப்பதற்கு ஒருவரும் இருக்க மாட்டார்கள். எமது கைப்பக்குவமே தனியாக இருக்கும்.

எமது பசியைப் போக்கிக்கொள்ள எத்தனை காலத்திற்கு அடுத்தவர் கைகளையே பார்த்துக்கொண்டு இருக்கமுடியும்? 'அம்மா சமைத்துத் தருவார் எனக்கென்ன கவலை?' என்று அம்மாவை எதற்கும் எதிர்பார்த்துக்கொண்டு இருப்பதை தவிர்த்து, நாமும் சமைப்பதற்கு கற்றுக்கொள்ள வேண்டும்.

இன்று ஊரைவிட்டு ஊரைத் தாண்டிச்சென்று தொழில் புரியும் ஆண்களும் பெண்களும் உணவுப்பொதிகளை கடைகளிலே வாங்கி உண்கின்றார்கள். இவர்களில் 'விடுதிகளில் தங்கியிருந்து தொழில் புரிபவர்களை தவிர மாத வாடகைக்கு வீடெடுத்து வாழ்பவர்கள் தங்களது உணவுத் தேவையை பூர்த்தி செய்வதற்காக கடைகளையே நம்பி வாழ்கின்றார்கள்.

வாங்கும் ஊதியம் இவர்களுக்கு மாத உணவுக்கே போதுமாகவுள்ளது. இவர்களிடம் காரணம் கேட்டால் 'சமைப்பதற்கு தெரியாது. அதற்கெல்லாம் நேரத்தைச் செலவு செய்ய முடியாது எனப் பேசிவிட்டுச் சென்றுவிடுவார்கள். இவ்வாறான உணவுப் பழக்கவழக்கங்களால் உடலுக்குத்தான் தீங்கு ஏற்படுகிறது என்பதை இவர்கள் புரிந்துக்கொள்வதாக இல்லை.

சமைப்பதற்கு தெரிந்திருந்தால் நாம் வேண்டிய நேரத்தில் விரும்பியதை செய்து உண்ணலாம். இது எமது உடலுக்கு ஆரோக்கியத்தைத் தரும், அதேவேளை செலவையும் மீதப்படுத்தும்.


இந்தச் சமையலைக் கற்றுக்கொள்வதால் என்ன தீங்குதான் ஏற்படப்போகிறது?

சமைக்கத் தெரியாது என்றுக் கூறுபவர்கள் முழுமையாக சமைப்பதற்கு தெரியாதவர்கள் அல்ல, சமையலைக் கற்றுக்கொள்ள உடன்பாடில்லாதவர்களே.

இதற்குக் காரணம் நாகரிக மோகம். கிராமப்புறங்களில் வசிப்பவர்களின் சமையல் கைப்பக்குவமே தனியாக இருக்கும். நகர்புறங்களில் வாழும் அநேகமானவர்கள் தமக்கு சமைப்பதற்குத் தெரியும் என்று கூறினால் கிராமப்புறத்திலிருந்து வந்தவர்கள் என்று தம்மை எண்ணிவிடுவார்கள் என்பதாலும் தமக்கு சமைப்பதற்கே தெரியாது என்று கூறுகின்றார்கள். இதைவிட வேறு காரணங்களும் உண்டு.

ஆனால், மேலைத்தேய நாடுகளில் கூட பெண்களும் ஆண்களும் சமையலை விரும்பி மேற்கொள்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

என்னதான் இருந்தாலும் நம்ம கையால் சமைத்து சாப்பிடுவதுபோல் வேறெங்கும் கிடைத்திடுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு பெயர்ச்சிப் பலன்கள்

■ ஸ்ரீமான் எம்.பி.ராமன்



## சிம்மம்

(மகம், பூரம், உத்தரம் முதலாம் பாதம் முடிய)

பொதுப் பலன்

குருபகவான் 27.5.2013 முதல் சூரியனை அதிபதியாகக் கொண்ட உங்கள் சிம்ம ராசிக்கு பல நல்ல பலன்களை வழங்க இருக்கிறார். சிம்ம ராசிக் காரர்கள் தோற்றத்தில் எப்போதும் கம்பீரத்துடனும், உடம்பில் ஒரு முறுக்கோடும் வலம் வருவார்கள். எதைப்பற்றியும் கவலைப் படாமல் தன் காரியங்களில் வெற்றி பெற முனைப்போடு உழைப்பார்கள். தன் வாக்குப்படிதான் மற்றவர்கள் நடந்து கொள்ள வேண்டும் என்றும், மீறியவர்களை நிரந்தரமாக விலக்கி வைக்க வேண்டும் என்றும் எண்ணுவார்கள்.

நண்பர்களிடம் மிகுந்த அன்பு வைத்திருப்பார்கள். அவர்களுக்கு ஒரு துன்பம் என்றால் ஓடோடிச் சென்று உதவுவார்கள். குடும்பத்தில் மதிப்பு உயர்ந்து காணப்படுவார்கள். பெண்களிடம் நல்ல மதிப்பு பெற்றிருப்பார்கள். லட்சியத்தில் உறுதியுடன் அடி ஆழம் வரை சென்று வெற்றி பெறுவது இவர்களின் இயல்பான குணமாகும். நம்பி வந்த யாரையும் கைவிட மாட்டார்கள். பெரியதாக இல்லை என்றாலும் ஏதேனும் சிறு உதவிகள் செய்து கொண்டிருப்பார்கள். எந்த அளவுக்குத் திறமைசாலிகளாக இருப்பார்களோ அதே அளவுக்கு கோபமுடையவர்களாகவும் இருப்பார்கள். அதுதான் இவர்களிடம் பெரும் குறையாக இருக்கும். அதனால் பல பின் விளைவுகளை சந்திப்பார்கள். சில வேளைகளில் நீதிமன்றம், வழக்கு வரையிலும் கூட கொண்டு சென்றுவிடும். படிப்பில் சுமார் ரகம் தான். அதிகம் ஆர்வம் காட்ட மாட்டார்கள். ஆனால் எதையும் ஒருமுறை செய்வதைப் பார்த்தால் அதை உடனே துடிப்புடன் செய்தும் முடிப்பார்கள். மிடுக்காக ஆடை உடுத்துவதிலும், பளிச்சென்று தன்னைக் காட்டி கொள்வதிலும் நிறைய செலவு செய்வார்கள். தொழிலில் சிறந்து விளங்கினாலும், அதனால் வரும் இலாபத்தை பொறுப்பற்று செலவு செய்து விடுவார்கள். அதனால் தொழில் நஷ்டம் ஏற்படும் வாய்ப்பு உண்டாகும். சிக்கனத்தை கடைப் பிடிக்க மறக்க வேண்டாம்.

தெய்வபக்தி இருந்தாலும் கோவில் குளமே கதியென இருக்க மாட்டார்கள். தேவைப்படும்போது குடும்பத்தினரின் வற்புறுத்தலுக்காக மட்டுமே ஆலயம் சென்று வருவார். பெற்றோர்களிடமும் பிள்ளைகளிடமும் பாசத்துடன் இருந்தாலும் ஊரார்களுக்கு செலவு செய்வதைக் காட்டிலும் குடும்பத்துக்கு குறைவாகவே செய்வார்கள். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு எதிர்பார்த்த பதவி உயர்வும், இட மாற்றமும் கிடைக்கும். விவசாயிகளுக்கு நல்ல விளைச்சல் கிட்டும். பயிரிடுவது பற்றி ஆலோசனை செய்வது நல்லது. மாணவ, மாணவிகள் படிப்பில் இன்னும் கூடுதலான அக்கறை செலுத்த வேண்டும். பெண்களுக்கு அரச உத்தியோகம் கிடைக்கும் யோகம் உள்ளது. சிலருக்கு புத்திர பாக்கியம் உண்டாகும்.

குருபகவான் அருளைப் பெற வியாழக் கிழமைகளில் விரதம் இருந்து, அவருக்குரிய காயத்ரி மந்திரத்தை உச்சரித்து பக்தியுடன் வணங்கி வர வேண்டும். முதலில் விநாயகப் பெருமானையும் பின் குருபகவானையும் பிறகு உங்கள் ராசிக்கு அதிபதியான சூரிய பகவானையும் வணங்க வேண்டும்.

பெண்களுக்கு

மாமனார் மாமியாரிடம் இது வரை நிலவி வந்த சண்டை சச்சரவுகள் படிப்படியாக குறையும். சுய தொழில் தொடங்குவதற்கானவாய்ப்பு அமையும். அழகுசாதனப் பொருள்கள் வாங்குவதில் செலவு செய்ய வேண்டியிருக்கும். சகோதர சகோதரி வீட்டிலிருந்து நல்ல செய்திகள் வரும். அலுவலகம் செல்லும் பெண்கள் மேலதிகாரிகளின் பழிச் சொல்லுக்கு ஆளாக நேர்வதால் கவனமுடன் இருக்கவும்.

மாணவ-மாணவிகளுக்கு

படிப்பில் கவனக்குறைவும், மனப் பாடத்தில் குழப்பமும் ஏற்படும். மனதை ஒருமுகப்படுத்த யோகா, தியானம் போன்றவற்றை பழகிக் கொள்வது நல்லது. வேண்டாத செய்திகளையும், தேவையில்லாத சம்பவங்களையும் விலக்கி வைத்து விட்டு படிப்பில் மட்டுமே கவனத்தை பதிய வையுங்கள். ஒவ்வொரு தேர்விலும் நாற்றுக்கு நூறு என்ற இலட்சியத்தை நோக்கி முன்னேற படிப்பு அவசியம் என்பதை உணர்ந்து செயலில் இறங்குங்கள்.

**27.2.2013 முதல் 9.6.2013 வரை**

இப்போது குருபகவான் மிருக சீரிட நட்சத்திரம், மூன்றாம்பாதம், செவ்வாய் சாரத்தில், சஞ்சரிக்கிறார். இந்தக் காலக்கட்டத்தில் புதிய தொழில் தொடங்குவதிலோ, புதிய வியாபாரம் செய்வதிலோ அவசரப்பட வேண்டாம். துறை சார்ந்த வல்லுனர்களிடம் ஆலோசனைப் பெற்று தொடங்குவது நல்லது.

சகோதர சகோதரி வீட்டு விசேஷங்களுக்கு சென்று வருவதன் மூலம் குடும்பத்தில் மகிழச்சி ஏற்படும். சொந்தங்களின் உறவும் பலப்படும். பொருளாதாரம் சிறப்பாக இருக்கும். இந்த வேளையில் ஆதரவற்றோர், முதியோர் இல்லங்களுக்கு உதவுவது மனநிறைவையும் நிம்மதியையும் கொடுக்கும்.

**10.6.2013 முதல் 24.6.2013 வரை**

இப்போது குருபகவான் மிருக சீரிட நட்சத்திரம், நான்காம் பாதம், செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக் காலகட்டத்தில் நாலா பக்கமும் இருந்து வருமானம் வந்து கொண்டிருக்கும். பெற்றோர்களிடம் இருந்து வரும் பகை மேலும் அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அவர்கள் மனவேதனை உங்கள் வளர்ச்சியைப் பாதிக்கும்.

**25.6.2013 முதல் 8.7.2013 வரை**

இப்போது குருபகவான் திருவாதிரை நட்சத்திரம், முதல் பாதம், ராகு சாரத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக் காலக்கட்டத்தில் கலைஞர்கள் கலை நிகழ்ச்சிகளுக்கான ஒப்பந்தங்களில் கை யெழுத்திடுவார்கள். வெளிநாடு செல்லும் வாய்ப்பு அமையும். இது நாள்வரை இருந்து வந்த கடன் தொல்லை விலகும். நண்பர்களுக்கு வீண் ஆடம்பர செலவுகளுக்கு செய்யும் பண விரயத்தைக் கட்டுப்படுத்தவும்

அரசியல்வாதிகள் தக்க சமயம் பார்த்து பதவி பெறுவதற்கான வேலைகளைத் தொடங்குவார்கள். தொண்டர்களின் மத்தியில் செல்வாக்கு குறையாமல் பார்த்து கொள்வார்கள். மேல்மட்டத்தின் கருணைப் பார்வை கிடைத்து, அதன் மூலம் புகழை அடைவார்கள். பிள்ளைகளின் மேற்படிப்புக்காக வெளிநாடு சென்றுவர சந்தர்ப்பம் அமையும்.

**9.7.2013 முதல் 23.7.2013 வரை**

இப்போது குருபகவான் திருவாதிரை நட்சத்திரம், இரண்டாம் பாதம், ராகு சாரத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக் காலக்கட்டத்தில் புதிய வீடு, புதிய வாகனம் வாங்குவார்கள். குடும்பத்தினருக்கு தேவையான பொன்னாபரணம், ஆடை அணிமணிகள், அழகு சாதனப் பொருள்கள் வாங்குவார்கள். பிள்ளைகள் மேற்படிப்புக்கு செல்வதில் சிக்கல் ஏற்படும். அதற்காக கணிசமான தொகை செலவு செய்ய நேரும்.

உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு இடமாற்றம் அவ்வளவு சௌகரியத்தைக் கொடுக்காது. தேடிச் சென்ற நபர் வீட்டில் இல்லாமல் அலைச்சலை ஏற்படுத்துவார். எக்காரணம்கொண்டும் முயற்சிகளைக் கைவிட வேண்டாம்.

**24.7.2013 முதல் 8.8.2013 வரை**

இப்போது குருபகவான் திருவாதிரை நட்சத்திரம், மூன்றாம் பாதம், ராகு சாரத்தில் சஞ்சரிக்கிறார். தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்வது நல்லது. வீணான போராட்டத்தால் வேலை இழக்கும் அபாயம் ஏற்படும்.

மாணவ மாணவிகள் தமது இலட்சியத்தை அடையும் வகையில் படிப்பில் அதிக அக்கறை செலுத்துவார்கள். வீட்டில் நடக்கும் குழப்பங்களில் மனதை செலுத்தாமல் இருக்க பழகிக் கொள்ளுங்கள்.

**9.8.2013 முதல் 26.8.2013 வரை**

இப்போது குருபகவான் திருவாதிரை நட்சத்திரம், நான்காம் பாதத்தில், ராகு சாரத்தில் சஞ்சரிக்கிறார். மாணவ மாணவிகள் பல்வேறு சாதனைகளை செய்து பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் பெயரையும் புகழையும் கொண்டு வந்து சேர்ப்பார்கள். தொழிலில் புதுப்புது யுக்திகளை கையாண்டு அதிக இலாபம் அடைவதற்கானவழிகளை ஆராய்வீர்கள். வியாபாரத்துக்கான புது கிளைகளை ஆரம்பிப்பதன் மூலம் வியாபாரம் சூடு பிடித்து சுறுசுறுப்படையும். தேவைப்படும் நேரத்தில் நண்பர்கள் மற்றும் உறவினர்களிடமிருந்து உதவி வந்து சேரும். பெற்றோர்களின் ஆலோசனையும், ஆசியும் பெற மறக்க வேண்டாம்.

**27.8.2013 முதல் 16.9.2013 வரை**

இப்போது குருபகவான் புனர்பூச நட்சத்திரம், முதலாம் பாதம், தனது சொந்த சாரத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக் காலக்கட்டத்தில் உறவினர் வீட்டிலிருந்து வரும் செய்தியால் வீட்டில் குழப்பமும், சண்டை சச்சரவுகளும் ஏற்படும். அதை மேலும் அதிகப்படுத்தாமல் அனுசரணையாக பேசி பிரச்சினைகளை சமுகமாக தீர்க்கப் பாருங்கள். மனதில் எண்ணியிருந்த காரியம் படிப்படியாகத் தான் நடந்தேறும். அவசரப்பட வேண்டாம்.

பெற்றோர்களின் உடல் நிலையில் மாற்றம் ஏற்பட்டு மருத்துவ செலவு செய்ய வேண்டியிருக்கும். சின்னப் பிரச்சினை என்றதும் உடனே மருத்துவரிடம் அழைத்துச் செல்லுங்கள். வெளிநாட்டிலிருக்கும் பிள்ளைகளிடமிருந்து நல்ல செய்தி வரும். புத்திரபாக்கியம் வேண்டி ஏங்கித் தவிக்கும் பெண்களுக்கு மகப்பேறு உண்டாகும்.

**17.9.2013 முதல் 18.10.2013 வரை**

இப்போது குருபகவான் புனர்பூச நட்சத்திரம், இரண்டாம் பாதம், சொந்த சாரத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக்காலக்கட்டத்தில் தொழில் சிறந்து விளங்கும். புதுத் தொழில் கைகொடுக்கும். தொழிலாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியும், உற்சாகமும் பெருகும். உறவினர் மற்றும் நண்பர்களின் வீட்டு விசேடங்களில் கலந்து கொண்டு விருந்துண்டு மகிழ்வார்கள். கலைஞர்களுக்கு புது ஒப்பந்தம் மூலம் நல்ல வருவாய் கிடைக்கும்.

விவசாயிகள் வங்கியில் பெற்ற கடனை திரும்ப செலுத்துவார்கள். பிள்ளைகளின் திருமணம் போன்ற சுபகாரியங்களுக்கான பேச்சுவார்த்தை தொடங்கும், பங்காளிகளிடம் இது வரை இருந்து வந்த பகை விலகும். நிலம், வீடு வாங்குவார்கள்.

**19.10.2013 முதல் 13.11.2013 வரை**

இப்போது குருபகவான் புனர்பூச நட்சத்திரம், மூன்றாம் பாதம், சொந்த சாரத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக் காலக்கட்டத்தில் பொருளாதாரம் சிறப்பாக இருக்கும். குடும்பத்தினரின் ஆசைக்கிணங்க அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வார்கள். உத்தியோகம் பார்ப்பவர்கள் சக ஊழியர்களின் சதியால் வேலை இழக்கும் ஆபத்து ஏற்படும்.

நாளைக்கு என்று கொஞ்சமேனும் சேமிக்க வேண்டும். பெண்களுக்கு கணவரின் ஆதரவு முழுமையாக கிடைக்கும்

**14.11.2013 முதல் 1.12.2013 வரை**

இப்போது குருபகவான் புனர்பூச நட்சத்திரம், மூன்றாம் பாதத்தில், வக்கிர நிலையில் சஞ்சரிக்கிறார். இந்தக் காலக்கட்டத்தில் உங்களுக்கு பல்வேறு நன்மைகளை வழங்கவுள்ளார். உங்கள் சிரமம் குறையும் வகையில் எங்கிருந்தாவது பணம் வந்து கொண்டிருக்கும். கூட்டுத் தொழில் மூலம் ஆதாயம் கிட்டும்.

பெற்றோர்களின் உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். தொல்லைப்படுத்திய நோய்களிடமிருந்து விடுபடுவார்கள். மருத்துவ செலவுக்கு விழி பிதுங்கும். சகோதர, சகோதரிகளிடமிருந்து உதவிகள் வந்து சேரும்.

**2.12.2013 முதல் 2.1.2014 வரை**

இப்போது குருபகவான் தன் வக்கிர நிலையில் இருந்து மாறாமல், புனர்பூச நட்சத்திரம் இரண்டாம் பாதத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக் காலக்கட்டத்தில் நினைத்தது எல்லாம் நிறைவேறும். பிள்ளைகளின் படிப்பு சிறந்து விளங்கும். பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களும் பெருமை சேர்ப்பார்கள். மேற்படிப்பு எளிதில் கிடைக்கும்.

வெளிநாட்டிலிருந்து உறவினர்களின் வருகை மகிழச்சியை ஏற்படுத்தும். பண உதவி கிடைக்கும். விவசாயிகளுக்கு நீர்வளம், நிலவளம் இரண்டும் கைகொடுப்பதால் மகிழ்ச்சியுடன் இருப்பார்கள். வங்கியில் பெற்ற கடன்தள்ளுபடி ஆகும். வீடு, நிலம் போன்றவற்றை வாங்குவார்கள்.

**3.1.2014 முதல் 26.1.2014 வரை**

இப்போது குருபகவான் புனர்பூச நட்சத்திரம், முதலாம் பாதம் வக்கிர நிலையிலேயே சஞ்சரிக்கிறார். இதன் அடிப்படையில் பலன்களைப் பார்ப்போம். இதுவரையில் சூழ்ந்திருந்த அத்தனை துன்பங்களும் விலகும். குடும்பத்தில் மகிழ்ச்சியும், உற்சாகமும் பெருகும். நினைத்திருந்த காரியங்கள் வெற்றியுடன் முடியும்.

விவசாயிகளுக்கு ஏற்றமும், மகிழ்ச்சியும் ஏற்படும். இதுநாள் வரை பட்ட கடன்களை கட்டி முடிப்பீர்கள். ஏளனமாகப் பார்த்தவர்கள் வியந்து பார்க்கும் அளவுக்கு பொருளாதாரம் உயர்ந்து காணப்படும்.

உறவினர்களின் விருந்து உபசரிப்புகளில் கலந்துகொள்வீர்கள். வெளியூர் பயணம் நல்ல ஆதாயத்தை கொடுக்கும். பெற்றோர்களின் உடல்நிலை சீராகும். மருத்துவச் செலவு குறையும். சந்தோஷம் பெருகுவதுடன், மனநிறைவுடன் காணப்படுவீர்கள்.

**27.1.2014 முதல் 11.3.2014 வரை**

இப்போது குருபகவான் வக்கிர நிவர்த்தி அடைந்த நிலையில் திருவாதிரை நட்சத்திரம், நான்காம் பாதத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக் காலக்கட்டத்தில் நீண்ட காலமாக தள்ளிப்போய்க் கொண்டிருந்த சில காரியங்களை சிறப்புடன் நடத்தி முடிப்பீர்கள்.

தொழிற்சாலைகளில் வேலையின் கவனக்குறைவால் ரத்தக்காயம், எலும்பு முறிவு போன்ற விரும்பத்தகாத சம்பவங்கள் நிகழலாம். கவனத்தைச் சிதறடிக்காமல் இருப்பது நல்லது. ஊதிய உயர்வு சற்றுத் தள்ளிப்போகும். யாருக்கும் இணங்காமல் கம்பீரமாக வலம் வந்த நீங்கள் சில காரியங்களை சாதிக்க பணிந்து போக வேண்டிய அவசியம் ஏற்படும். பொருளாதாரம் நல்லபடியாக இருந்தாலும் கடன் வாங்குவதைத் தவிர்க்க இயலாது.

**12.3.2014 முதல் 6.2.2014 வரை**

இப்போது குருபகவான் புனர்பூச நட்சத்திரம், முதலாம் பாதம், சொந்த சாரத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக் காலக்கட்டத்தில் அலுவலகத்தில் வேலைப்பளு அதிகமாக இருக்கும். அதனால் சோர்ந்து போக வேண்டாம். அதற்கான ஆதாயம் வந்து சேரும். பிள்ளைகளின் படிப்பில் மேலும் அக்கறை காட்டுங்கள். என்ன செய்கிறார்கள், ஏது செய்கிறார்கள் என்று கவனியுங்கள். கெட்ட நண்பர்களின் சகவாசத்தால் வழிதவறிப் போகும் வாய்ப்புள்ளதை மறக்க வேண்டாம்.

**7.2.2014 முதல் 25.5.2014 வரை**

இப்போது குருபகவான் புனர்பூச நட்சத்திரம், இரண்டாம் பாதம், சொந்த சாரத்தில்சஞ்சரிக்கிறார். இந்தக் காலக்கட்டத்தில் தொழிலில் நல்ல முன்னேற்றம் காணப்படும். கூட்டுத் தொழில் இலாபம் கொடுக்கும். பங்காளிகளிடம் விரோதப் போக்கை கைவிடுவது நல்லது. வேண்டுமென்றே வம்புக்கு இழுத்தாலும் தாழ்ந்து போவதில் தப்பில்லை.

சிலர் வீடு மற்றும் நிலம் வாங்குவார்கள். நகையில் முதலீடு செய்வதில் நல்ல இலாபத்தை எதிர்பாக்கலாம். ஆடம்பர செலவு செய்து வீட்டில் சுபகாரியங்களை நடத்துவார்கள். உறவினர் பாராட்டுக்கள் குவியும்.

**26.5.2014 முதல் 11.6.2014 வரை**

இப்போது குருபகவான் புனர் பூச நட்சத்திரம், மூன்றாம் பாதத்தில், தனது சொந்த சாரத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக் கால கட்டத்தில் தொழிலில் சில புதிய முயற்சிகள் நல்ல வருமானத்தை கொடுக்கும். அதற்கான ஆரம்ப வேலைகளைத் தொடங்குவார்கள். வெளியூர் பயணம் அலைச்சலை ஏற்படுத்தும். பயன் எதுவும் இருக்காது.

குடும்பத்தில் மனைவி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வார்கள்.

*(வளரும்)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மயானக் காணியும் அபகரிப்பு

கிளிநொச்சி,மே 25
கண்டாவளை பொது மயானத்துக்குரிய காணியின் ஒரு பகுதியைத் தனிநபர் ஒருவர் அபகரித்து மதில் அமைத்து வருவது தொடர்பாக இந்தப் பகுதி மக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

கரைச்சிப் பிரதேச சபைக்குச் சொந்தமான கண்டாவளைப் பொது மயானத்துக்குரிய காணியின் ஒரு பகுதியை அபகரித்துள்ள தனிநபர் ஒருவர் மதிலும் அமைத்து வருகின்றார்.

இந்த நடவடிக்கை அந்தப் பகுதி மக்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் குறித்த மயானத்தின் காணியை அபகரிப்பதற்கு எதிராக அங்குள்ள பொது அமைப்புக்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும், இந்தக் காணி அபகரிக்கப்படுவதற்கு எதிராக அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)



அக்கராயன் குளத்தின் வான் பாயும் பகுதியில் புனரமைப்புப் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. (க-18)

## டெங்கு மலேரியா தடுப்பு தொடர்பாக பொலிஸாருக்கு விசேட செயலமர்வு

கிளிநொச்சி,மே 25
கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் மலேரியா மற்றும் டெங்கு நோய்கள் தொடர்பான விழிப்புணர்வுகளை பொலிஸாருக்கு ஏற்படுத்தும் வகையிலான விசேட செயலமர்வு ஒன்று இடம் பெற்றுள்ளது.

கடந்த 19 ஆம் திகதி கிளிநொச்சிப் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கேட்போர் கூடத்தில் பகல் 2 மணிக்கு இந்தச் செயலமர்வு இடம்பெற்றது. கிளிநொச்சி மாவட்டப் பொலிஸ் பொறுப்பதிகாரி எட்மன் மகேந்திரா, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சேனாதீர மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மாங்குளம் பொலிஸ் நிலையங்களின் பொலிஸ் பொறுப்பதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் எனப் பலர் இதில் கலந்து கொண்டனர்.

கொழும்பில் இருந்து வருகை தந்த மருத்துவ அதிகாரிகளால் கிராமங்கள் தோறும் டெங்கு மற்றும் மலேரியா போன்ற உயிர்க்கொல்லி நோய்களை கட்டுப்படுத்தும் வகையில் பொலிஸார் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டியதன் அவசியம் தொடர்பாகவும், இவ்வாறான தாக்கங்களில் இருந்து பொது மக்களைப் பாதுகாப்பது தொடர்பாகவும் இந்தச் செயலமர்வில் விளக்கங்கள் அளிக்கப்பட்டன. (க-6)



### இரணைமடுக் குளத்தின் கீழ்

# 2 ஆயிரத்து 400 ஏக்கரில் அனுமதி பெறாத நெற்செய்கை

கிளிநொச்சி, மே 25
கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக செய்கையின் போது சுமார் 2 ஆயிரத்து 400 ஏக்கருக்கும் மேலாக அனுமதியற்ற விதத்தில் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.



இரணைமடுக்குளத்தின் புனரமைப்பு மற்றும் நீர்மட்டம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இந்த ஆண்டு சுமார் 8 ஆயிரத்து 500 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டு அதன் பிரகாரம் விவசாயிகள் பயிர்ச் செய்கைகளை மேற்கொண்டுள்ளனர். அதில் சுமார் 2 ஆயிரத்து 400 ஏக்கருக்கு மேலான நிலப்பரப்பில் அனுமதியற்ற விதத்தில் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை பரிசோதனையின் போது தெரியவந்துள்ளது. இதனால் அனுமதிக்கப்பட்டதன் பிரகாரம் பயிர்ச் செய்கையை மேற்கொண்டுள்ள ஏராளமான விவசாயிகள் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று கடந்த 19 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மு.சந்திரகுமார் தலைமையில் நடைபெற்றது.

இந்த விசேட கலந்துரையாடலில் மேலதிக அரச அதிபர் செ.சிறிநிவாசன், திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.மோகனபவன், கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் பி.தயாரூபன், கரைச்சிப் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன், கண்டாவளைப் பிரதேச செயலர் ரி.முகுந்தன், இரணைமடுக் குளத்தின் நீர்ப்பாசனப் பணிப்பாளர் எஸ்.விகிர்தன் மற்றும் திணைக்கள அதிகாரிகள், கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள், விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலின் போது சட்டவிரோத செய்கைகளை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னதாக அளவீடு செய்து அவற்றை அடையாளப்படுத்துமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது. இதற்கென தற்போது விசேட குழுக்களும் களத்தில் இறக்கிவிடப்பட்டுள்ளன. இரணைமடுக்குளத்தின் கீழ் இந்த ஆண்டு சிறுபோக செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள பகுதிகளைச் சேர்ந்த சுமார் 7 கமக்கார அமைப்புகளும் மேலதிக செய்கைகள் யாவற்றையும் அழிக்குமாறும் அல்லது அதிக பட்சத் தண்டனைகளை வழங்கி எதிர்காலத்தில் இவ்வாறான செய்கைகளை மேற்கொள்ளாதவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இந்தக் கூட்டத்தில் கோரிக்கை விடுத்தன. (க-6)

### தட்டுவன்கொட்டிக் கிராமத்துக்கு

## போக்குவரத்து வசதியை ஏற்படுத்துமாறு கோரிக்கை

கிளிநொச்சி,மே 25
கிளிநொச்சி தட்டுவன் கொட்டிக் கிராமத்துக்கு போக்குவரத்து வசதியை ஏற்படுத்தித் தருமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள தட்டுவன் கொட்டிக் கிராமத்தில் தற்போது சுமார் 97 குடும்பங்களைச் சேர்ந்த 300 க்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இங்குள்ள குடும்பங்கள் குடிதண்ணீர் வசதி தொடங்கி போக்குவரத்து வசதிகள் வரை பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன.

குறிப்பாக போக்குவரத்து வசதிகள் மேற்கொள்ளப்படாததால் இங்குள்ள மக்கள் தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதாயின் சுமார் 12 கிலோமீற்றர் தூரத்துக்கு அப்பால் உள்ள கிளிநொச்சிக்கோ அல்லது பரந்தன் நகருக்கோ செல்லவேண்டிய நிலையிலுள்ளனர்.

மேலும் ஏ-9 வீதியில் இருந்து தட்டுவன் கொட்டிக் கிராமம் வரையான வீதி மிகவும் மோசமாகச் சேதமடைந்து காணப்படுகின்றது. இதனால் இதனூடாகப் பயணிக்கும்போதும் சிரமங்கள் ஏற்படுகின்றன.

அதேவேளை தண்ணீர் போன்ற ஏனைய தேவைகளையும் வேறு இடங்களுக்குச் சென்று பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளதாகவும் இங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர். (க-6)

## முன்பள்ளிக் கட்டடத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு

கிளிநொச்சி,மே 25
முரசுமோட்டை அபிராமி முன்பள்ளியின் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இடம்பெற்றுள்ளது.



கிளிநொச்சி முரசுமோட்டைப் பிரதேசத்தில் இயங்கிவரும் அபிராமி முன்பள்ளிக்கு நிரந்தரக் கட்டடம் இல்லாததால் கடந்த மீள்குடியமர்வின் பின்னர் தனியார் வீடொன்றில் முன்பள்ளி இயங்கி வந்தது. பின்னர் கடந்த ஆண்டு இந்தப் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்ட பொதுநோக்கு மண்டபத்தின் ஒரு பகுதியில் இயங்கி வருகின்றது.

இந்த நிலையில் பள்ளிக்கென நிரந்தரக் கட்டடத்தை அமைத்துத் தருமாறு பல்வேறு தரப்பினரிடமும் முன்பள்ளிச் சிறார்களின் பெற்றோர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த நிலையில் 573 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் இந்தப் பகுதியில் முன்பள்ளியொன்றுக்கான நிரந்தரக் கட்டடம் அமைக்கும் பணி முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த 20 ஆம் திகதி காலை 9 மணிக்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரின் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் முன்பள்ளிச் சிறார்கள், ஆசிரியர்கள், கிராம அலுவலர் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-6)

# மாற்றுத் திறனாளிகளைப் பயன்படுத்தி பல்வேறு வகையில் மோசடிகள்

### மாற்றுத் திறனாளிகள் சங்கத் தலைவர் விசனம்

கிளிநொச்சி,மே 25
மாற்றுத் திறனாளிகளைப் பயன்படுத்தி பல்வேறு மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட மாற்றுவலுவுடையோர் சங்கத்தின் தலைவர் விசனம் தெரிவித்துள்ளார்.

புலம்பெயர்ந்து வாழும் யாழ். மயிலிட்டியைச் சேர்ந்த 15 பேர் இணைந்து கடந்த 19 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 45 மாற்றுத் திறனாளிகளுக்கு உதவித் திட்டங்களை வழங்கினார்கள். இந்த நிகழ்வு முற்பகல் 10 மணியளவில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் அலுவலகமான அறிவகத்தில் கிளிநொச்சி மாவட்ட மாற்றுவலுவுடையோர் சங்கத்தின் தலைவர் மாறன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு தலைமை உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்;

இன்று 4 ஆயிரத்து 500 பேர் வரையில் மாற்று திறனாளிகள் இருப்பதாக கருதப் படுகிறது. இதில் அதிகமானவர்கள் பொருளாதார ரீதியில் பின்தங்கிய நிலையில் தமது மருத்துவ தேவைகளைக்கூட பூர்த்தி செய்ய முடியாதவர்களாகக் காணப்படுகின்றனர்.

இவர்களுக்கு உதவுவதாகக் கூறும் சில அரசசார்பற்ற நிறுவனங்கள் பெருந்தொகை நிதியைத் தமது நிர்வாகச் செலவுக்குச் செலவிடுகின்றன. ஆனால் மாற்றுத் திறனாளிகளுக்குக் குறைந்தளவு உதவிகளே கிடைக்கின்றன.

இதைவிடப் பலர் மாற்றுத் திறனாளிகளைக் காட்சிப் பொருள்களாக்கி அவர்களது புகைப்படங்களைக் காட்டிப் பெருமளவு நிதியைச் சூறையாடி வருகின்றனர். இதனால் மாற்று வலுவுடையோர்களே பாதிக்கப்படுகின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-6)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள்

தருவது வித்தியா

## உங்களுக்கு எப்படி?

**மேடர்:** மனக்குழப்பங்கள் விலகும். உத்தியோகத்தில் வேலைபளு குறையும். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவி கிடைக்கும். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள். அரச வேலைகள் சுமுகமாக முடியும்.

**இடபர்:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணப்பற்றாகுறை விலகும். மனதுக்குப்பிடித்தவர்களை சந்தித்து மகிழ்வீர்கள். மன நிறைவுடன் சில வேலைகளை செய்து முடிப்பீர்கள். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பகர்களின் வருகையுண்டு.

**மிதுனர்:** நீங்கள் முன்பு செய்த உதவிகளுக்கு இப்பொழுது பாராட்டப்படுவீர்கள். உறவினர்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். உற்சாகமான பேச்சால் அனைவரையும் கவருவீர்கள்.

**கடகர்:** சோர்வாக இருந்த நீங்கள் சுறுசுறுப்படைவீர்கள். சிந்தனைத் திறன் அதிகரிக்கும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபார ரீதியாக முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும்.

**சிங்கர்** துடிப்புடன் காணப்படுவீர்கள். எதிரிகளின் கொட்டம் அடங்கும். முன்கோபம் குறையும். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். தாயாரின் நீண்டநாள் கோரிக்கைகளை பூர்த்தி செய்வீர்கள்.

**கன்னி:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு காரியங்களைச் சாதிப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஒத்துழைப்பு உண்டு. வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். மாணவர்கள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள்.

### நாளை

வைகாசி-12 ஞாயிற்றுக்கிழமை 26.05.2013
திதி: பிரதமை கா. 08.07 வரை
நட்சத்திரம்: கேட்டை மு.இ. 07.56 வரை
சுபநேரம்: 08.52 - 10.22 வரை
இராகுகாலம்: 04.22 - 05.22 வரை

**துலாமர்:** புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். முன்கோபத்தால் நல்லவர்களின் நட்பை இழக்க வேண்டி வரும். வாக்கு றுதியை நிறைவேற்றப் போராட வேண்டி வரும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் விவாதம் வந்து நீங்கும்.

**விருச்சிகர்:** விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். திட்டமிடாத செலவுகளை போராடிச் சமாளிப்பீர்கள். எதிர்பாராத பயணங்களால் அலைச் சல் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவு வந்து நீங்கும்.

**தனுசர்:** பழைய நல்ல சம்பவங்களை நினைவு கூர்ந்து மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும். மனக்குழப்பங்கள் நீங்கும்.

**மகரர்:** ஆரவாரமின்றி சில வேலைகளை முடிப்பீர்கள். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. வியாபார ரீதியாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும். அரச வேலைகளிலிருந்து வந்த தடைகள் நீங்கும்.

**கும்பர்:** மனக்குழப்பங்கள் நீங்கும். நம்பிக்கைக்குரியவர்களின் ஆதரவு கிடைக்கும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். கோபம் குறையும். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**மீனர்:** தேவையற்ற அலைச்சலுக்கு ஆள்படுவீர்கள். நெருங்கியவரிடம் உங்களின் மனக்குறைகளை சொல்லி ஆதங்கப்படுவீர்கள். யாருக்காகவும் சாட்சிக் கையெழுத்திட வேண்டாம். உத்தியோகத்தில் மறதியால் பிரச்சினைகள் ஏற்படும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | | | 5 | | | |
| 9 | | 4 | 2 | 3 | 1 | 7 | 6 | |
| | | 7 | | | | | 1 | |
| | | | 6 | | 3 | 8 | 9 | |
| | 4 | 3 | 1 | | 9 | 2 | 5 | |
| | 9 | 8 | 5 | | 7 | | | |
| | 6 | | | | | 1 | | |
| | 3 | 1 | 9 | 5 | 2 | 4 | | 6 |
| | | | 8 | | | | 3 | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 1 | 6 | 7 | 9 | 5 | 3 | 8 | 4 |
| 9 | 8 | 4 | 2 | 3 | 1 | 7 | 6 | 5 |
| 3 | 5 | 7 | 4 | 6 | 8 | 9 | 1 | 2 |
| 7 | 2 | 5 | 6 | 4 | 3 | 8 | 9 | 1 |
| 6 | 4 | 3 | 1 | 8 | 9 | 2 | 5 | 7 |
| 1 | 9 | 8 | 5 | 2 | 7 | 6 | 4 | 3 |
| 5 | 6 | 9 | 3 | 7 | 4 | 1 | 2 | 8 |
| 8 | 3 | 1 | 9 | 5 | 2 | 4 | 7 | 6 |
| 4 | 7 | 2 | 8 | 1 | 6 | 5 | 3 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள் ஒவ்வொன்றிலும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

**நாய்க் குட்டிகள் விற்பனைக்கு**

40 நாள் நிரம்பிய ஜேர்மன் செப்பேட் அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 735 3957

(36741)(6.11)

**"Ridge back" நாய்கள் விற்பனைக்கு**

2 வயது நிரம்பாத பெண் 9000/=
6 மாதம் ஆண் 8000/=

தொடர்பு: 077 948 5703

(36785)(6.11)

**நாய்க் குட்டி விற்பனைக்கு**

ஜேர்மன் செப்பேட் 60 நாள்கள் நிரம்பிய தடுப்பூசி போடப்பட்ட நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 947 5996

(36804)(6.11)

**தேவை**

25000/= - 28000/= சம்பளத்துக்கு PVC பைப் தயாரிப்பு கம்பனியில் வேலைவாய்ப்புக்கு 18-50 வயது வரையான ஆண்கள் தேவை. உணவு, தங்குமிட வசதிகள் உண்டு.

தொடர்புகளுக்கு: 077252 3241

(35195) (10.6)

**வேலையாள்கள் தேவை**

25,000/= சம்பளத்திற்கு எங்களுடைய க்ளவுஸ் உற்பத்தி செய்யும் கம்பனிக்கு 18-55 வயது வரையான ஆண்கள், பெண்கள் தேவை. சாப்பாடு, தங்குமிட வசதி உண்டு. குழுக்களாகவும் வரலாம். வரும் அன்றே வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர்.

தொடர்பு: 077 303 2004 அனுராதபுரம்.

**பணியாள்கள் தேவை**

25,000/=, 35,000/=, 40,000/= வரையான சம்பளத்துக்கு எங்கள் தனியார் துறை நிறுவனத்தில் கப்பல் வேலைக்கு 18-55 வயது வரையான ஆண்கள் தேவை.

தொடர்பு: 077 3033 803

(35196) (6.11)

**கல்வி**

ஆங்கில வகுப்புகள்

30 வருடங்களுக்கு மேலாக அனுபவமுள்ள ஆசிரியரினால் யாழ். நகரினுள் வீடுகளுக்கு வந்து ஸ்போக்கன் இங்கிலிஸ் மற்றும் IELTS, GCE (O/L) போன்ற பரீட்சைகளுக்கும் ஆங்கில மொழி மூல பாடங்களும் கற்பித்துக் கொடுக்கப்படும். ஒரு மணித்தியாலம் 150/= மட்டுமே.

தொடர்பு: 071 608 7833

(36767)(6.11)

**நான்காம் ஆண்டு நினைவஞ்சலி**



மண்ணில்: 25.07.1940
விண்ணில்: 08.06.2009

திருமதி
ஈஸ்வரி
விஸ்வநாதன்

திதி:- 25.05.2013

இன்று (25.05.2013) சனிக்கிழமை எமது இல்லத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நடைபெறும்

23, 2 ஆவது லேன்,
பிறவுண்ரோட்,
யாழ்ப்பாணம்

கணவர்
நா. விஸ்வநாதன்
0775193616

(36566)(6)

**மாபெரும் தங்கநகை ஏலவிற்பனை**

செலான் வங்கியின் ஒரு வருட, 6 மாத, 3 மாத கால அடிப்படையில் அடகு வைக்கப்பட்டு உரிய காலத்தில் மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாத தங்க நகைகள் யாவும் எதிர்வரும் 01.06.2013 சனிக்கிழமை காலை 9 மணி முதல் அடகு வைக்கப்பட்ட பின்வரும் கிளைகளில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட உள்ளது. என்பதை அறியத்தருகின்றோம்.

(யாழ்ப்பாணம் - (சங்கானை, மானிப்பாய் உள்ளடங்கலாக) மற்றும் நெல்லியடி, சாவகச்சேரி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா)

SEYLAN BANK PLC

- வட பிராந்திய முகாமையாளர், செலான் வங்கி. (C/9471)(2.6)

**யாழ். மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ/து)**

**பதவி வெற்றிடம் (வெளிவாரி)**

எமது சங்கத்தில் லொறிச் சாரதி பதவிக்கு தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

1. வயதெல்லை: 18 தொடக்கம் 45 வரை (கூட்டுறவுச் சங்கத்தில் பணி புரியும் விண்ணப்ப தாரிகளுக்கு இவ் வயதெல்லை பொருந்தாது)
2. விண்ணப்ப முடிவு திகதி: 2013.06.06
3. பிணை: குறித்த பதவிக்கு தெரிவு செய்யப்படும் பட்சத்தில் பொறுப்புக்களுக்கேற்ப சங்கத்தினால் கோரப்படும் பிணையினை சமர்ப்பிக்க தயாராக இருத்தல் வேண்டும்.

4.பதவி

லொறிச்சாரதி :312-14
சம்பள அளவுத் திட்டம் : 9700-11350
80x 10- 85x10

தகைமைகள்: தரம் 05 சான்றிதழ்களுடன் பஸ்/ லொறிச்சாரதி அனுமதிப்பத்திரத்துடன் 02 வருடத்திற்கு குறையாத தொழிலனுபவம் உடையவராகவும் தேக ஆரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்

5. குறித்த பதவிக்குரிய மேலதிகமாக கூட்டுறவு ஊழியர்ஆணைக்குழுவின் சுற்று நிருபங்களுக்கு அமைவாக வாழ்க்கைச் செலவுப்படி மற்றும் விசேட படிகளும் வழங்கப்படும்.

6. விண்ணப்பிக்கும் முறை:

1 சங்கத்தில் தற்போது கடமையாற்றுபவர்கள் சங்கத்தினூடாகவே விண்ணப்பிக்க முடியும்.
2 சங்கத்தில் ரூபா 20 செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்தினை முறையாகப் பூர்த்தி செய்து ''தலைவர்'' யாழ். மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ/து), இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் என்னும் முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
3 விண்ணப்ப படிவத்துடன் கல்விச் சான்றிதழ்கள், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், சாரதி அனுமதிப் பத்திரம், சேவை அனுபவச் சான்றிதழ்கள் என்பனவற்றின் பிரதிகள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

தலைவர்
யா/மா/த/பா/உ/கூ.சங்கம்

(C/15048)(6.11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடனான காலநிலை நிலவும்.

# வைத்தியசாலை-பொது அமைப்புக்கள் இடையே நல்லுறவு ஏற்பட சிரமதானம் சிறந்த வழி

## அச்சுவேலி வைத்தியசாலை நிகழ்வில் உரை

அச்சுவேலி, மே 25
வைத்தியசாலைக்கும்- சமூகத்தில் உள்ள பொது அமைப்புக்களுக்கும் இடையே நெருக்கமான நல்லுறவை ஏற்படுத்திக்கொள்வதற்கு "சிரமதானம்" சிறந்தவழி முறையாகும். இதன் மூலம் வைத்தியசாலை சார் சமூகத்தால் வைத்தியசாலையின் சேவைகள் மற்றும் வசதி நிலையை அறிந்து கொள்வதோடு பணியாளர்களுடனும் நெருக்கமான நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ளமுடியும். இவ்வாறு தெரிவித்தார் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையின் மேற்பார்வையாளர் எம். மனோகரன்.

அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் அச்சுவேலி மத்திய விளையாட்டுக்கழக உறுப்பினர்களால் சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டது. நிகழ்வில் கலந்துகொண்டு வைத்தியசாலை மேற்பார்வையாளர் தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

வைத்தியசாலைகளால் வழங்கப்படும் சேவைகள் மற்றும் வள வசதிகளை வைத்தியசாலை சார் சமூகம் விவரமாக அறிந்து கொள்ளவேண்டும். வைத்தியசாலை பணியாளர்களுடன் நல்லுறவைப் பேணிக் கொள்ளவேண்டும். இந்த நிலை சமகால சமூகத்தில் குறைவடைந்து கொண்டு செல்கின்றது.

சமூகம் நெருக்கமான தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளாத நிலையில். சேவை நிலையில் நம்பிக்கை கொள்ளாத நிலை ஏற்படுகின்றது. இதனால் குறை கூறுகின்ற நிலை ஏற்படுகின்றது. இது மாற்றப்படவேண்டும். சமூக நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்கள் வைத்தியசாலையின் வள வசதிகள் சேவைகளை அறிந்துகொண்டு வைத்தியசாலைக்கு உதவமுன்வருவது வரவேற்கத்தக்கது. அந்த வகையில் அச்சுவேலி மத்திய விளையாட்டுக்கழக உறுப்பினர்கள், வீரர்கள் மேற்கொண்ட சிரமதானப் பணி பாராட்டைப் பெறுகின்றது. இளைஞர்கள் அக்கறையுடன் பற்றுக் கேடனா நிலையில் சிரமதானப் பணியை மேற்கொண்டனர். இதனை முன்னுதாரணமாகக் கொண்டு ஏனைய அமைப்புக்களின் உறுப்பினர்களும் இத்தகைய பணி முன்னெடுப்பில் ஈடுபட முன்வர வேண்டும். உயிர்ப் பாதுகாப்புக்கும் உறுதுணையாக இருந்து 24 மணி நேரமும் மக்களுக்கான சேவையை வழங்கும் வைத்தியசாலை மீது நம்பிக்கை கொள்ளவேண்டும். வைத்தியசாலைகளின் தேவைகளை கண்டு கொள்ள வேண்டும்- என்றார். (வ-11)

## கௌரவிப்பு


யாழ்ப்பாணம்,மே 25
கரணவாய் கிழக்கு உச்சிப் புவனேஸ்வரி அம்பாள் ஆலய பெருந்திருவிழாவின் தீர்த்தத் திருவிழாவான நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கூட்டுப் பிரார்த்தனையில் பங்கு கொண்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களையும், சைவசமய அறிவுப் போட்டியில் பங்கு கொண்டு வெற்றியீட்டிய மாணவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு நடைபெறும்.
இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ, சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைத் தலைவர் பொ. வியாகேசு, கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.நற்குணலிங்கம், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள யாழ்.மாவட்ட அபிவிருத்தி அலுவலர் திருமதி ம.விஜயகுமார், கரவெட்டி பிரதேச செயலக கலாசார அலுவலர் செ.ரூபகுமார், கரணவாய் கிழக்கு கிராம அலுவலர் சி. அசோகன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (வ)

## பொதுக் கூட்டமும் கௌரவிப்பும்

யாழ்ப்பாணம்,மே 25
யாழ். மாவட்ட தனியார் பாரவூர்த்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டமும் கௌரவிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை மு.ப10 மணிக்கு சங்கத் தலைமைக் காரியாலயத்தில் சங்கத் தலைவர் செ.ஜெயக்குமார் தலைமையில் நடை பெறும்.
நிகழ்வில் பிரதம விருந்தினராக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் கலந்துகொள்வார்.
நிகழ்வில் சங்க ஆரம்பகால தலைவரின் திருவுருவப்படம் வைத்தல், புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவித்தல், இளைப்பாறிய சங்கப் பணியாளர்களைக் கௌரவித்தல் போன்ற நிகழ்வுகள் இடம்பெறும். (ந)

## ஜி.சீ.ஈ. உயர்தர மாணவருக்கான முன்னோடிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,மே 24
இந்த வருடம் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான உயிரியல், பௌதிகவியல், இரசாயனவியல் பாடங்களுக்கான முன்னோடிப் பரீட்சை எதிர்வரும் 29 ஆம் திகதி தொடக்கம் ஜூன் 5 ஆம் திகதி வரையில் யாழ். வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் இடம்பெற வுள்ளது.
சகல மாணவர்களையும் தவறாது பரீட்சைக்குத் தோற்றுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தெரிவித்தார்.
வினாத்தாள் தொடர்பான கருத்தரங்கு எதிர்வரும் ஜூன் 19 முதல் ஜூன் 21 வரை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-5)



யாழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்கு சமீபமாகவுள்ள கந்தப்பசேகரம் வீதியில் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் உடைந்து கிடக்கும் கழிவுநீர் வடிகால். (ஒ-7)

## விபத்தில் காயம்

வடமராட்சி வலயத்தைச் சேர்ந்த வேதாரணீஸ்வரா வித்தியாலய அதிபர் தனபாலசிங்கம் பாலகுமார் விபத்துக்குள்ளானார். இவர் கடந்த செவ்வாய்க் கிழமை கிளினிக் காரணமாக யாழ்ப்பாணம் நோக்கி தனது மோட்டார் சைக்கிளில் செல்லும் போது திருநெல்வேலியில் எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி பலத்த காயமடைந்தார். அதனையடுத்து யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். (வ)

## சமாதான நீதிவானாக நியமனம்



பருத்தித்துறை ஐயனார் கோயில் வீதியைச் சேர்ந்த இரத்தின சாமி இராசநாதன் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதிநந்தசேகரன் முன்னிலையில் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இவர் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் தலைவராக நீண்டகாலம் பணியாற்றி பருத்தித்துறை பிரதேச விளையாட்டுத்துறை வளர்ச்சிக்கு அளப்பரிய பணி ஆற்றியுள்ளார்.இவரது விளையாட்டுத்துறைப் பணிக்காக பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் இவ்வாண்டுக்கான (2013) விருதை இவருக்கு வழங்கிக் கௌரவித்தது. (வ-8)

## கற்றாக் சிகிச்சை ஆரம்பம்

தென்மராட்சி, மே 25
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை கண் பரிசோதனைக் கிளினிக்கில் விழிவெண்படலத்தில் பூப்படர்வு ஏற்பட்ட நிலையில் கண்டு பிடிக்கப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கான கண் சத்திர சிகிச்சை திங்கள் தொடக்கம்யாழ்.போதனா வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
சுகாதார அமைச்சின் விஷன் செயற்றிட்டத்தின் கீழ் சத்திர சிகிச்சைச் செய்வதற்கான பதிவுகள் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
பதிவை மேற்கொண்டவர்களின் ஒரு தொகுதியினர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.
பதிவை மேற்கொள்பவர்கள் கட்டம் கட்டமாக கண் சத்திர சிகிச்சைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதால் கண் பரிசோதனையில் கற்றாக் ஏற்பட்டிருப்பதாக வைத்திய அதிகாரியால் வழங்கப்பட்ட மருத்துவ அறிக்கையுடன் வருகை தந்து பதிவை மேற் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## அகலம் குறைந்த வீதிகள் வாகனங்கள் விலத்துவதில் அவதி


### இருபக்கமும் மண் போட்டு அணைக்குமாறு கோருகிறார் பிரதேச சபைத் தவிசாளர்

வலி.தென்மேற்கு,மே 25
பூநகரிப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுவரும் வீதிகள் அகலம் குறைவாக இருப்பதால் வாகனங்கள் வழிவிட்டுச் செல்ல முடியாதநிலை தோன்றியுள்ளது. அதனால் வீதிகளின் இருமருங்கும் மண்கொட்டி அணைக்குமாறு சம்பந்தப்பட்டவர்களை பிரதேச சபைத் தவிசாளர் பி.ஸ்ரீஸ்கந்தராஜா கோரியுள்ளார்.
பூநகரிப் பிரதேசத்தில் மக்கள் குடியமர்த்தப்பட்டதைத் தொடர்ந்து தற்பொழுது வீதி அபிவிருத்தி வேலைகள் துரிதமாக இடம் பெற்று வருகின்றது. கொங்கிறீட் வீதிகள், காப்பெற் வீதிகள் எனப் பல வீதிகள் அமைக்கப்பட்டு வருகின்றன என்று அவர் குறிப்பிட்டார்.
இந்தநிலையில் அமைக்கப்பட்டு வரும் வீதிகளின் அகலம் குறைவாக இருப்பதால், வாகனங்கள் ஒன்றையொன்று விலத்த முடியாத நிலை ஏற்படுகின்றது.அதனால் சில சமயங்கள் விபத்துக்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்களும் உருவாகுகின்றன என்று அவர் சுட்டிக்காட்டினார்.
எனவே வாகனங்களின் வசதி கருதி அமைக்கப்பட்டு வரும் வீதிகளின் இரு பக்கமும் மண்ணைக் கொட்டி அமைக்குமாறு சம்பந்தப்பட்டவர்களை அவர் கோரியுள்ளார். (ச-115)

## நல்லூர் பிரதேச சபையின் இலக்கிய விழா போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,மே 25.
இந்த வருடத்துக்கான தேசிய கலை இலக்கிய விழாவை யொட்டி நல்லூர் பிரதேச மட்டத்தில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றியீட்டியோரின் விவரம் வெளிவந்துள்ளது.
**பாலர் பிரிவு கவிதை**
1ஆம் இடம்- க.கஜனி- (யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை),ப.ஜனந்தினி (யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), 2ஆம் இடம்- ச.பானுஜா (யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை).
**கையெழுத்துப் போட்டி**
முதலாம் இடம்-தெ.திசங்கன் (இளையதம்பி இந்து வித்தியாலயம்),2 ஆம் இடம்- ப.அபிராமி- (இளையதம்பி இந்து வித்தியாலயம்), 3ஆம் இடம்- ந.மோரிறகிம்ஷா (அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை)
**கனிஷ்ட பிரிவு கவிதை**
முதலாம் இடம்- த.அபிஷா (இந்து மகளிர் கல்லூரி), 2 ஆம் இடம்-தே.தேவசுரேகா- (ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்), 3 ஆம் இடம்-மோ.சுகந்திகா- இந்து மகளிர் கல்லூரி).
**கட்டுரை**
முதலாம் இடம்-த.கிருத்திகா- (அரியாலை பார்வதி வித்தி), 2 ஆம் இடம்-தே.தேவநிஷா- (அரியாலை ஸ்ரீபார்வதி வித்தி), 3ஆம் இடம்- கி.மதுரா- (கோண்டாவில் பரஞ்சோதி வித்தி)
**சிரேஷ்ட பிரிவு கவிதை**
முதலாம்இடம்- தி.மிதுஷா-(இந்து மகளிர் கல்லூரி), 2 ஆம் இடம்- அ.ஸ்வேதினி- (இந்து மகளிர் கல்லூரி),3ஆம்இடம்-பி.சஜானி- (இந்து மகளிர் கல்லூரி),
**கட்டுரை**
முதலாம் இடம்-மோ.ரசிக்கா- (இளையதம்பி இந்து வித்தி), 2ஆம் இடம்- ஜெ.செந்தூரி- (இளையதம்பி இந்து வித்தி),3 ஆம் இடம்- சி.பிரவீணா- (இந்து மகளிர் வித்தி). (வ)

## ஓய்வு பெறுகிறார்



யாழ்ப்பாணம் பிரதம அஞ்சலக அதிபராகக் கடமையாற்றிய ஏபிரகாம் தர்மராஜா அண்மையில் சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். அஞ்சல் அதிபர் சேவையில் 36 வருட சேவையைப் பூர்த்தி செய்த இவர் இறுதியாக கொழும்பு-7 கறுவாக்காடு அஞ்சலகம் மற்றும் யாழ்ப்பாணம் அஞ்சலகம் ஆகியவற்றில் பிரதம அஞ்சல் அதிபராகக் கடமையாற்றியவர். (வ-122)

## மணவாளக்கோல சங்காபிஷேகம்

வடமராட்சி,மே 25
சரித்திரப்பிரசித்தி பெற்ற நாகர் கோயில் பூர்வீக நாகதம்பிரான் சுவாமி ஆலய மணவாளக்கோல உற்சவம் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.
அன்றையதினம் காலை 7 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி நாகேஸ்வரப் பெருமானுக்கு 1008 சங்காபிஷேகமும், பரிவாரமூர்த்திகளுக்கு ஸ்நபன அபிஷேகமும் இடம்பெறும். தொடர்ந்து நண்பகல் விசேட பூசைகள் நடைபெற்று நாகேஸ்வரப் பெருமான் பரிவாரமூர்த்திகளுடன் வீதி உலா வருவார்.

## யாழ். விஞ்ஞான சங்க நிர்வாகக் குழு தெரிவு

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் நடப்பாண்டுக்கான நிறைவேற்று நிர்வாகக் குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது.
நிர்வாகக் குழுத் தலைவராக திருமதி ச.ரவீந்திரன், தெரிவுத் தலைவர் பேராசிரியர் திருமதி சி.குகநாதன், செயலாளர் கலாநிதி பா.நிமலதாசன், உதவிப் பொதுச் செயலாளர் கலாநிதி ப.செல்வேள், பொருளாளர் கலாநிதி திருமதி அ.சிவரூபன், உதவிப்பொருளாளர் திருமதி கு.நிரஞ்சன், பத்திராதிபர் அ.இராசகுமாரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதிப் போரில் கைவிடப்பட்ட வாகனங்கள் முல்லைத்தீவு செயலகத்தால் விவரம்

இறுதிப் போர் நடவடிக்கையின் போது கைவிடப்பட்ட வாகனங்களின் விவரங்கள் குறித்து முல்லைத்தீவு அரச அதிபர் அலுவலகம் அறிவித்துள்ளது.
பின்வரும் வாகனங்களின் விவரங்கள் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திற்குக் கிடைக்கப்பெற்றுள்ளன.
இந்த இலக்கங்களையுடைய வாகனங்களின் உரிமையாளர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் உரிய மூல ஆவணங்களுடன் (பொலிஸ் அறிக்கை உட்பட) மாவட்டச் செயலகத்துக்கு வருகை தருமாறு அரச அதிபர் அறிவித்துள்ளார்.

**வாகன விபரம் வருமாறு:-**

| இல. | வாகன இல. | இயந்திர இல. | அடிச்சட்ட இல. |
|---|---|---|---|
| 1 | | 05E08M36182 | 05E09C36840 |
| 2 | JU-7574 | 05A08M50S23 | 05A09C49654 |
| 3 | | | MBLHXHEE79M00524 |
| 4 | | SGVMJ74373 | |
| 5 | MH-8324 | CD125TE1228773 | CD125T1503710 |
| 6 | UA-8725 | 07LOSM21008 | MBLHA10EL7GL00578 |
| 7 | JK-9018 | E55OL382323 | C7RK304266 |
| 8 | MD-4301 | 05E47M00487 | 05E47C00450 |
| 9 | | AWEN0156 | AWCH0152 |
| 10 | | 07122E07811 | MB4HA 11EC79F00338 |
| 11 | 8SRI5363 | CD185TE-207455 | CD185T-2074282 |
| 12 | | 04C081145887 | 06E09C19856 |
| 13 | | 06A192968 | 760024912ALAAAXXHE |
| 14 | | AWEN0055 | AWCH0151 |
| 15 | | AWEN0054 | AWCH0150 |
| 16 | | AWEN0060 | AWCH0156 |
| 17 | 156-6804 | MA01E-2106253 | MA01-2066628 |
| 18 | UL-3017 | JF16EA8GC00329 | MBLJF16EB8GC00401 |
| 19 | | 05E08M28933 | CH05584 |
| 20 | MB-1302 | MD90E-2219502 | MD90-2219510 |
| 21 | HH-1652 | MD90E-2126351 | MD90-2126346 |
| 22 | GA-1070 | MD90E-2114592 | MD90-2114554 |
| 23 | JB-8700 | MD90E-2201646 | MD90-2201549/MD90-2201645 |
| 24 | | 150FMGPJ095342 | |
| 25 | HD-5204 | V50-7798980 | V50-7798980 |
| 26 | | 05F03232515 | C500032437 |
| 27 | MS-6176 | YX150FMGO3454556 | ZMGLB409P1C23C454556 |
| 28 | UV-0403 | 50E-0668447 | C50-0694280 |
| 29 | MB-9230 | JLIP47MF-505A191340 | LAAAXKFB850002957 |

# பதில் பிரதம நீதியரசராக சலீம் மர்சூப்



கொழும்பு, மே 25
பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் வெளிநாட்டு பயணத்தை மேற்கொண்டிருப்பதை அடுத்து உயர் நீதிமன்ற நீதியரசர் சலீம் மர்சூப் பதில் பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கான நியமனக் கடிதத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வழங்கினார்.
சட்டமா அதிபர் திணைக்களத்தில் சொலிஸிட்டர் ஜெனரலாக பதவி வகித்த இவர் 2003 ஆம் ஆண்டு மேல்முறையீட்டு நீதிமன்ற தலைவராக நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் 2004 ஆம் ஆண்டு உயர்நீதிமன்ற நீதிபதியாக பதவியுயர்வு பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச-ரி)

# அல்வாய், துன்னாலைக் கிராமங்களின் அபிவிருத்தியில் முனைப்பு இல்லை

வடமராட்சி, மே 25
கட்டைவேலி உப அலுவலகப் பிரிவில் உள்ள அல்வாய், துன்னாலைக் கிராமங்களை அபிவிருத்தி செய்வதில் கரவெட்டிப் பிரதேச சபை முனைப்புக் காட்டவில்லை. இவ்வாறு அந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.
வீதிகள் புனரமைப்பு, திருத்தம், தெரு விளக்கு பொருத்துதல் போன்ற அபிவிருத்திகள் கரவெட்டிப் பிரதேச சபையின் ஏனைய உப அலுவலகப் பிரிவுகளில் மேற்கொள்ளப்படுவது போன்று அந்தப் பிரிவில் மேற்கொள்ளவில்லை என மக்கள் தமது குற்றச்சாட்டுக்களைத் தெரிவிக்கின்றனர். (ந-8)

## வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கு பரீட்சைகள்

யாழ்ப்பாணம், மே 25
யாழ். மத்திய கல்லூரியின் பல்கலைக்கழக மாணவர்களினால், 2013 ஓகஸ்ட் மாதம் உயர்தர வர்த்தகப் பிரிவில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நன்மை கருதி எதிர்வரும் 27,28,29 ஆம் திகதிகளில் பரீட்சைகள் நடத்தப்படவுள்ளன. மாணவர்கள் இப் பரீட்சைக்குத் தோற்றி பயன்பெறுமாறு கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (ஓ)

## நற்கருணை விழா

பூம்புகார் புனித பிலிப்பு நேரியர் ஆலயத்தில் வருடாந்த திருப்பலி மற்றும் திருச்சொரூபப் பவனி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறும்.
இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை விழா இடம்பெறும்.
கடந்தகால போர் இடரினால் இந்த ஆலயம் பெரும் சேதப்பட்டன.
தற்போது ஆலய பங்கு மக்களின் உதவியுடன் இந்த ஆலயம் புனரமைக்கப்பட்டது.
புனரமைக்கப்பட்ட ஆலயத்தின் முதல் வருடாந்த திருவிழா இதுஎன்பது குறிப்பிடத்தக்கது. (ந-17)

## பொதுக்கூட்டம்

யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் பழைய மாணவிகள் சங்க பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு கல்லூரியில் இடம்பெறவுள்ளது. எனவே பழைய மாணவிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பழைய மாணவிகள் சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (ந-16)

## பொங்கல் விழாவும் தீ மிதிப்பும்

மல்லாகம் பெரியதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் நிகழ்வும் தீ மிதிப்பும் நடைபெறவுள்ளன.
இன்று சனிக்கிழமை மல்லாகம் சாடியடியில் அமைந்துள்ள சாடி மனையில் நோன்புப் பூசை இடம்பெற்று வளந்துப் பானை ஊர்வலம் இடம் பெறும்.
நாளை ஞாயிற்றுக்கிழமை வளந்துவைத்தல் நிகழ்வுடன் பொங்கல் நிகழ்வு ஆரம்பமாகி விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். அதனைத் தொடர்ந்து தீமிதிப்பு நிகழ்வு இடம் பெறும். (ந)

## செங்குந்தா இந்துமுதலிடம்

யாழ்ப்பாணம், மே 25
மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட ஆசிரியர்களுக்கான கணித உபகரணப் போட்டியில் யா/செங்குந்தா இந்துக் கல்லூரி ஆசிரியர் இ.செல்வமகேசன் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.
அதேநேரம் யாழ். வலய மட்டத்தில் கணிதச் செயற்பாட்டுப் போட்டியில் தரம் 10 இல் கல்வி கற்கும் ப.தமிழ்ப்பிரியன் முதலாம் இடத்தைப் பெற்று மாகாண மட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளார். (ந)

## 2ஆம், 3 ஆம் இடங்கள் தீவக வலயத்துக்கு

2013 ஆம் ஆண்டுக்கான மாகாண மட்ட கணித பாட ஆசிரியர்களுக்கான கற்பித்தல் உபகரணம் தயாரித்தல் போட்டியில் தீவகக் கல்வி வலயம் 2 ஆம், 3ஆம் இடங்களைப் பெற்றுள்ளது. வேலணை கிழக்கு மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த திருமதி கீதபொன்கலன் பிறிம்றோஸ் 2 ஆம் இடத்தையும், வியாவில் சைவ வித்தியாலயத்தைச் சேர்ந்த திருமதி லக்ஸ்மன் மாலினி 3ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர். (ந)


31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 10.09.1948
மறைவு 25.04.2013
அமரர்
மாணிக்கம் சிவகுரு

கடந்த 25.04.2013 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (25.05.2013) சனிக்கிழமை மு.ப.11.30 மணிக்கு நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இல. 28, 1ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (36793)(6)
குடும்பத்தினர்.



31 ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
துரையப்பா நடராஜா
(கார் கராச் உரிமையாளர்)
தோற்றம் 20.09.1933
மறைவு 25.04.2013

கடந்த 25.04.2013 அன்று இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவர் அமரர் துரையப்பா நடராஜா அவர்களின் பிரிவுச் செய்தி அறிந்து உடன் வந்து ஆறுதல் சொல்லியும் அன்னாரின் இறுதி நிகழ்வுகளில் கலந்து கொண்டும், சகல வழிகளிலும் ஒத்தாசை நல்கி எம் தந்தையின் பிரிவுத் துயரில் பங்குகொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் எம்மைத் தேற்றியவர்களுக்கும் எம் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (25.05.2013) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ள நால் அத்தருணம் தாங்கள் குடும்பத்தினருடன் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அழைப்புகிடைக்கப்பெறாதவர்கள் இந்த அழைப்பைதனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

25, நாவலர் வீதி,
ஐந்து சந்தி அருகில்,
யாழ்ப்பாணம். (36833) (45.6)
குடும்பத்தினர்



கணினி திருத்தம் (Computer Repair)
உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கு வந்து திருத்தித் தருகிறோம்.
அழையுங்கள் 0779086737
GUNAA BEST PC (36826) (6)
52, Hospital Road,Jaffna.



வீடு வாடகைக்கு
இணுவில் கந்தசாமி கோயில் சந்திக்கு அருகில் சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீடு உடனடி வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 075 410 5230






புதுமாத்தளன் புனித சதா சகாயமாதா ஆலயத்திருவிழா-2013

நற்கருணை தினம்: காலம்: 25.05.2013 சனிக்கிழமை
பெருவிழா: காலம்: 26.05.2013 ஞாயிற்றுக்கிழமை

திருநாளை முன்னிட்டு இடம்பெறவுள்ள விளையாட்டு நிகழ்வுகள் பின்வருமாறு:
நிகழ்வுகள்:
1. சைக்கிள் ஓட்டம் (ஆண்கள்) 60 Km
2. மரதன் ஓட்டம் (ஆண்கள்) - 20 Km
3. படகோட்டம் : 10 Km (மாத்தளன் கடற்கரை)
நேரம் : அனைத்து போட்டிகளும் திருப்பலி நிறைவு பெற்ற பின் நடைபெறும்.
குறிப்பு: எந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் போட்டியில் கலந்துகொள்ளலாம்.
தொடர்புகளுக்கு: 077 9709466, 077 0180412
சதா சகாய அன்னையின் ஆசீர் பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
புதுமாத்தளன் சந்தி, புதுமாத்தளன்.
பங்குத்தந்தையும் பங்கு மக்களும்.
(36832)(10.6)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## திருவடிநிலையில் தீர்த்தம்

சுழிபுரம் பறாளாய் சிவசுப்பிரமணிய சுவாமி தீர்த்தம் திருவடி நிலை தீர்த்தக் கடற்கரையில் இன்று நடைபெறவுள்ளது. சுவாமி தீர்த்தமாடி இளைப்பாறு மண்டபத்தில் எழுந்தருளுவார்.
தீர்த்தக் கடற்கரையில் நீண்ட காலமாகபழுதடைந்திருந்தசுவாமி இளைப்பாறு மண்டபம் உபயகாரர்களால் புனரமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ந-28)

## செயலமர்வு

வடமராட்சி, மே 25
பாடசாலை மேம்பாட்டுத் திட்டம்'' தொடர்பான செயலமர்வு வடமராட்சி கல்வி வயலத்தில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வலயக் கல்வி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்தச் செயலமர்வில் பாடசாலை அதிபர் மற்றும் தலா ஓர் ஆசிரியர், பழைய மாணவர் சங்க உறுப்பினர், பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர் சகிதம் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (வ-8)



சௌபாக்கியத்தைப்போட்டி இன்று முற்பகல் 10.30 மணியளவில் பட்டுக் குடும்பங்களுக்கு பசு மாடுகள் வழங்கப்பட்டன. ஸ்ரீ. மகேஸ்வரி மருதப்பிள்ளையார் ஆலயத்திற்கும் ஒரு பசு மாடு வழங்கப்பட்டது. நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட படை யணிகட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க கலந்து கொண்டார். வரவேற்புரையை 511 ஆவது படையணியின் கட்டளை அதிகாரி கேணல் சமரசிங்க ஆற்றினார்.
படைகளின் உயர் அதிகாரிகள் உடுவில் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் ஆகியோரும் கலந்து கொண்டார்கள். (ஓ 86)

## எமில் நகர் அரச காணிகளில் குடியிருப்பவர்களை வெளியேறுவதற்கு ஒரு வார காலக்கெடு

### சிங்களக் குடியேற்றத்துக்கு ஏற்பாடா?

மன்னார், மே 25
மன்னார் எமில் நகர்ப் பகுதியில் அரச காணிகளில் வசிப்பவர் களை உடனடியாக வெளியேறுமாறு மன்னார்பிரதேச செயலர்டிதயாணந்த எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.
மன்னார் எமில் நகர் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள அரசகாணிகளைஅடாத்தாகப் பிடித்து அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக எமிழ் நகர் கிராம சேவை யாளரினால் கடந்த மாதம் 17 ஆம் திகதி மன்னார் பிரதேச செயலரிடம் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.
இந்த நிலையில் குறித்த அரச காணிகளில் குடியிருப்பவர்கள் அமைத்துள்ள தற்காலிகக் குடிசைகள் மற்றும் சுற்று வேலிகளை அகற்றுவதுடன் அங்கிருந்து வெளியேறுமாறும்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
இதற்கான கடிதம் உரிய தரப்பினருக்கு தனித்தனியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஒரு வார கால அவகாச மும் வழங்கப்பட்டுள்ளது. இதனை மீறித் தொடர்ந்தும் காணி களில் இருப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் படும் என மன்னார் பிரதேச செயலர் டி.தயானந்த தெரிவித்துள்ளார்.
இதேவேளை மன்னார் பிரதேச செயலர் பிரிவில் 600 சிங்களக் குடும்பங்களை குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்அடிப்படையிலேயே எமில் நகர்ப் பகுதியில் அரச காணிகளில் நீண்ட காலமாக வாழ்ந்து வரும் மக்களை வெளியேற்றி விட்டு அந்தக் காணிகளில் குடியேற்று வதற்கு முன்னேற்பாடுகள் நடந்து வருகின்றன என்றும் சிறுபான்மை இனத்தவர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். (க-12)

## 12 ஜோதிலிங்க தரிசனமும் மகா யக்ஜ குண்டமும்

முல்லைத்தீவு, மே 25
வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் பொங்கல் சிறப்பு நிகழ்வாக பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தின் ஏற்பாட்டில் 12 ஜோதிலிங்க தரிசன நிகழ்வு நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் மகா யக்ஜ குண்டம் இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமை யும் காலை 8 மணியில் இருந்து இரவு 8 மணி வரை நடைபெறும். 27 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணியில் இருந்து மறுநாள் காலை 8 மணிவரை நடைபெறும். இந்த நிகழ்வில் அடியவர்கள் தமது வாழ்க்கையைச் சீர்குலைக்கும் தீய பழக்கங்கள், பல வீனங்கள், தீராத மன வேதனைகள் என்பவற்றை அர்ப்பணிக்க வேண்டும். (ந)

**விற்பனைக்கு**
15x... தொடர் இலக்கமுடைய Toyota Charina கார் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு.
தொ.பே: 077 314 4704
(36845)(6.11)

**நாய்கள் விற்பனைக்கு**
ஒரு வயது நிறைந்த ஜேர்மன் செப்பேட் ஆண், பெண் நாயும் குட்டிகளும் விற்பனைக்குண்டு.
26.05.2013 அன்று பார்க்கலாம்
தொ.பே: 077 553 8492
(கோண்டாவில்)
(36841)(6.11)

**சிறுநீரகம் தேவை**
புதுக்குடியிருப்பை சேர்ந்த மனோகரன் லூர்த்தம்மா என்பவருக்கு O- குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை. சிறுநீரக மாற்றுச் சிகிச்சை க்கும் உதவி செய்யும் படி கேட்கின்றோம்.
தொ.பே: 077 674 8792
Commercial Bank
810 803 9851
(36835)(6.11)

## மரண அறிவித்தல்

### ஞானப்பிரகாசம் மரியப்பிள்ளை (கண்மணி)



மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் முருகன் வீதி, உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் மரியப்பிள்ளை நேற்று (24.05.2013) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்ற ஞானப்பிரகாசத்தின் அன்பு மனைவியும், சபாறஞ்சிதம், இராசமலர், சௌந்தரராஜா, வசந்தா, சாந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும், விஜயலக்ஸ்மி, பேரம்பலம், ரூபகுமாரி, செல்வநாயகம், அவுராம்பிள்ளை ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.
அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (25.05.2013) சனிக்கிழமை உரும்பிராயிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 3.00 மணிக்கு புனித நீக்கிலார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு மிருசுவில் சேமக் காலையில் நல்லடக்கம் இடம்பெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முருகன் வீதி,
உரும்பிராய் கிழக்கு,உரும்பிராய். (36842)(6.11)

தகவல்:
சாந்தி (மகள்)

**BROWNS FOOD CORNER**
Mail: mcbrowns@mail.com
No. 131A, Brown Road, Jaffna.

**உடன் வேலைவாய்ப்பு**
புதிதாக அமைக்கப்பட்ட பிறவுண்ஸ் பூட் கோணருக்கு (Browns Food Corner) வேலைஆள்கள் தேவை.



1. CASHIER (FEMALE/MALE)
2. KITCHEN COOK (அனுபவமுள்ளவர்கள் MALE)
3. KITCHEN HELPER (சமையல் உதவியாளர்)
4. STEWARD (FEMALE/MALE)

தகுதியானவர்கள் சுயவிவரக்கோவையுடன் 31.05.2013 ஆம் திகதிக்கு முன்னர் காலை 9-12 மணிக்குள் நேரில் வருகை தரவும். தெரிவு செய்யப்படுபவர்களுக்கு ஒரு கிழமை பயிற்சி அளிக்கப்படும்.

"MANAGER"
131A, Brown Road, Jaffna.
Telephone: 071 8741212
(36839)(10.6)

## விண்ணப்பிக்கலாம்

இலங்கை நூலக சங்கத்தினால் நடத்தப்படும் நூலக தகவல் விஞ்ஞான கற்கை நெறி தரம்- 3 இற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
நூலக தகவல் விஞ்ஞான கற்கைநெறி தரம்-2 ஐப் பூர்த்தி செய்தவர்கள் எதிர் வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக் கலாம். (ந)

**துன்பம் தீர அருள் வாக்கு**
குழந்தைப்பேறு இல்லாதவர்கள், திருமணத்தடை, தோஷம் உள்ளவர்கள், வெளிநாடு செல்லத்தடை, தொழிலில் முன்னேற்றமின்மை, கல்வியில் முன் னேற்றமின்மை, தீராதநோய் தீர அருள்வாக்குக் கூறப்படும். வெள்ளவத்தை பெர்ணாந்து வீதியில் உள்ள துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வமான ஞானகணேஸ்வரி அம்மன் அவர்கள் 27,28,29 - 05.2013 வரை யாழ்ப்பாணத்தில் அருள் வாக்கு கூற உள்ளார்.

தொடர்பு: ஞானவைரவர் ஆலயம்,
கலாசாலை வீதி,
2 ஆவது ஒழுங்கை,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.
077 8012 226.

பூசை நேரம்: முற்பகல் 10.30 மணி
மாலை 4மணி
- அம்மா
(36840) (45.6)

Rural Development Foundation

**கிராம அபிவிருத்தி நிறுவனம்**
**கேள்விப் பத்திர அறிவித்தல் குழாய்க்கிணறு அமைத்தல்**

RDF நிறுவனத்தினால் UNHCR அமைப்பின் நிதி அனுசரணையுடன் வவுனியா மாவட்டத்தில் உள்ள 04 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட கிராமங்களில் குழாய்க்கிணறுகள் அமைப்பதற்காக குழாய்கிணறு அமைத்தல் செயற்பாட்டில் அனுபவம் உள்ள ஒப்பந்தகாரர்களிடம் இருந்து கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள விவரங்களுக்கமைவான வேலைகளுக்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கேள்விப்படிவங்களை கண்டி வீதி, தேக்கவத்தை, வவுனியா எனும் முகவரியில் அமைந்துள்ள கிராம அபிவிருத்தி நிறுவன (RDF) மாவட்டக் காரியாலயத்தில் 2013 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆம் திகதி தொடக்கம் ஜுன் மாதம் 6ஆம் திகதிவரை வார நாள்களில் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 05 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்களை குறித்த அலுவலகத்தில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் ஜுன் மாதம் 7 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன்னர் இடல் வேண்டும்.

| இல. | வேலை விவரம் | அலகு | கிராமம்/ பிரதேசசெயலாளர் பிரிவு | ஒப்பந்தகாலம் | கேள்வி செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|
| 01 | குழாய்கிணறு அமைத்தல் (இந்தியன்மார்க் - III) | 04 | ஆர்சிபுரம் - வவுனியா<br>சேனைப்புலவு - வவுனியா வடக்கு<br>இராமயன் குளம் - செட்டிகுளம் | 30 நாள்கள் | 60 நாள்கள் |

கேள்விப் பத்திரம் கோருபவர் ஒருவருக்கு ஆவணங்களின் இருபிரதிகள் மாத்திரம் விநியோகிக்கபடும். மேலதிகவிடயங்களை மாவட்ட முகாமையாளரிடம் 0242222962 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் தொடர்பு கொண்டு பெற்றுகொள்ளலாம்.

கேள்விப் பத்திரம் பெறுபவர்களினால் சமர்ப்பிக்கப்படும் கேள்விபத்திரத் தகவல்கள் நிறுவனத்தினால் பரிசீலிக்கப்படும். இனம்காணப்பட்ட தெரிவுநடைமுறைசார்ந்த ஒப்பீட்டு அளவிலான பொறுப்பு, கேள்விபத்திரகுழுவின் தற்துணிபு அதிகாரங்களைச் சார்ந்து இருக்கும்

தாமதமாககிடைக்கும் கேள்விகள் முழுமை பெறாத பத்திரங்கள் மற்றும் தொலைநகல் மூலமான சமர்ப்பணங்கள் ஏற்றுகொள்ளப்படமாட்டது.
கேள்விபத்திரங்கள் 2013 ஜூன் 07, ஆம்திகதி முற்பகல் 10.30 மணிக்கு கீழ்குறிப்பிடபட்ட முகவரில் இயங்கும் RDF அலுவலகத்தில் திறக்கபடும்.

தலைவர்,
நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர்,
கிராம அபிவிருத்தி நிறுவனம் (RDF), கண்டிவீதி, தேக்கவத்தை, வவுனியா.
(35200) (45.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றச்செயல்கள் 88 பேருக்கு தண்டம்

யாழ்ப்பாணம்,மே 25

சங்கானை மதுவரித்திணைக்களத்துககு உட்பட்ட பகுதிகளில் கடந்த 4 மாத காலப்பகுதிக்குள் சட்டவிரோதமாக அரச சாராயம் விற்பனை மற்றும் 21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்த 88 பேருக்கு 2 லட்சத்து 18 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டதாக சங்கானை மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி கிருபாகரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மதுவரித் திணைக்களத்தின் சட்டக் கோவைகளுக்கு அப்பால் சட்டவிரோதமாக அரச சாராயத்தை வீடுகளில் வைத்து விற்பனை செய்தவர்களும், 21 வயதுக்குட்பட்டவர்களுக்கு வர்த்தக நிலையங்களில் வைத்து சிகரெட் விற்பனை செய்தவர்களும், வீடுகளில் வைத்து கள் விற்பனை செய்தவர்களும் மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களால் இனங்காணப்பட்டு அவர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அதன்போது அவர்களுக்கு 2 லட்சத்து 18 ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

கடந்த ஜனவரி மாதத்தில் 6 பேருக்கு 65 ஆயிரத்து 500 ரூபாவும், பெப்ரவரி மாதத்தில் 10 பேருக்கு 44 ஆயிரத்து 500 ரூபாவும், மார்ச் மாதத்தில் 51 பேருக்கு 13 ஆயிரத்து 500 ரூபாவும், ஏப்ரல் மாதத்தில் 21 பேருக்கு 95 ஆயிரம் ரூபாவும் தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

அத்துடன் இந்த மாதம் இதுவரை 8 பேருக்கு 9 ஆயிரத்து 500 ரூபாவும் தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

இவ்வாறு இனங்காணப்பட்டவர்கள் காரைநகர், நிற்சாமம், அராலி போன்ற இடங்களைச் சேர்ந்தவர்கள். பொதுமக்களால் வழங்கப்பட்ட தகவல்கள் அடிப்படையில் இவ்வாறான செயல்கள் மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களால் இனங்காணப்பட்டனர்.- என்றார். (வ-14)

# வற்றாப்பளை அம்மனை அண்மிக்கும் கதிர்காம பாதயாத்திரைக் குழுவினர்

வடமராட்சி,மே 25

கதிர்காம பாதயாத்திரைக் குழுவினர் புதுக்குடியிருப்பைத் தாண்டி முல்லைத்தீவு வழியாக வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோயிலை நோக்கி தற்போது நகர்ந்து கொண்டிருக்கின்றனர்.

காரைதீவு ஸ்ரீ நந்தவன சித்திவிநாயகர் கோயில் தர்மகர்த்தாவான வேல்சாமி என அழைக்கப்படும் ச.மகேஸ்வரன் தலைமையிலான 42 பக்தர்கள் கொண்ட குழுவினர் கடந்த 16 ஆம் திகதி தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோயிலில் இருந்து கதிர்காமத்தை நோக்கி பாதயாத்திரையை ஆரம்பித்திருந்தனர்.

இந்தக் குழுவினர் அச்சுவேலி, வாதரவத்தை, மட்டுவில், கொடிகாமம், பளை, உமையாள்புரம், பரந்தன், முரசுமோட்டை, தர்மபுரம், விசுவமடு, வள்ளிபுனம் ஊடாக நேற்று வெள்ளிக்கிழமை இரவு புதுக்குடியிருப்பு முருகன் கோயிலை அடைந்து தங்கியிருந்தனர். இன்று சனிக்கிழமை காலை புதுக்குடியிருப்பில் இருந்து புறப்பட்டு கற்சிலைமடு, ஒட்டுசுட்டான், கூடான் முறிப்பு, முல்லைத்தீவு ஊடாக நாளை மறுதினம் திங்கட்கிழமை வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோயிலைச் சென்றடைவர்.

வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோயில் பொங்கல் உற்சவத்தை இந்தக் குழுவினர் தரிசித்த பின்னர் தொடர்ந்து பாதயாத்திரை மேற்கொண்டு எதிர்வரும் ஜூன் மாதம் திருகோணமலையை அடைவர்.

அங்கிருந்து கதிர்காமத்தை நோக்கிச் செல்லும் பாதயாத்திரைக் குழுவினர் ஜூலை 8 ஆம் திகதி கதிர்காமத்துக்குப் போய்ச்சேருவர்.

பாதயாத்திரை சென்று கொண்டிருக்கும் வழிகளில் மக்களின் பேராதரவு கிடைத்து வருவதாக பாதயாத்திரைக் குழுத் தலைவரான ச.மகேஸ்வரன் உதயனுக்குத் தெரிவித்தார். (வ-8)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1985 பூச நட்சத்திரம், பட்டதாரி ஆசிரியருக்கு ஆசிரிய மணமகள் தேவை.
தொடர்பு: 077 666 7037
manapanthal@hotmail.Com.

## அலுவலக உதவியாளர் தேவை (ஆண்)

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல உயர் கல்வி நிறுவனம் ஒன்றுக்கு அலுவலக உதவியாளர் ஒருவர் தேவைப்படுகிறார்.
தொடர்பு: CAPSTONE
154A/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 0727, 021 720 0777 (37404) (10,6)

## வாங்குகள் (Benches) விற்பனைக்கு

உயர்கல்வி நிறுவனம் ஒன்றில் பாவித்த, சிறந்த நிலையில் உள்ள வாங்குகள் (Benches) விற்பனைக்கு
6 அடி - 30
7 அடி - 18
தொடர்பு: CAPSTONE
154A/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 0727, 021 720 0777 (37404) (10,6)

## Management Assistant (Female) Wanted

A reputed Institute for professional studies is looking for a smart Management Assistant.

**Requirements:**

* A degree from any university in any stream
* Fluency in English and Tamil
* Age 24-30

Walk-in-Interview on Sunday 26.05.2013 at the following Address:




**CAPSTONE**
154 A/1, Navalar Road, Jaffna.
Call : 021 222 0727, 021 720 0777 (37402) (10,6)

## பதவி வெற்றிடம்

* யாழ். நகரில் இயங்கிவரும் பிரபல காகிதாதி நிறுவனத்துக்கும் கடை ஒன்றிற்கும் 10 - பதவி வெற்றிடங்கள் உள்ளன.
* நன்கு படித்த ஒரு நிறுவனத்தை நடத்தக்கூடிய ஆளுமை உள்ளவர்கள் (ஆண்/ பெண்) இருபாலாரும் வேண்டப்படுகின்றனர். திறமை அடிப்படையில் உயர்ந்த ஊதியம் வழங்கப்படும்.
* 25.05.2013 முதல் 01.06.2013 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கட்டாயமாக நேரில் வரவும்
தொடர்பு: 077 776 9231
(6.45)

# மரண அறிவித்தல்



## இராமலிங்கம் கனகரத்தினம்

### (R.K , பிரபல வர்த்தகர்)

மாதகலைப் பிறப்பிடமாகவும், தொட்டிலடி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் கனகரத்தினம் (23.05.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்-சின்னக்குட்டி தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு-மாரிமுத்து தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை, நாகம்மா, செல்லம்மா, செல்லத்துரை, சின்னராசா, ஜீவரத்தினம் மற்றும் பொன்னையா, ஆறுமுகம், கந்தையா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஞானாம்பிகை, புஸ்பவல்லி (Canada), காலஞ்சென்ற சற்குணநாதன் (Canada) மற்றும் சரஸ்வதிதேவி, ஞானேஸ்வரி (Canada), புஸ்பவதி ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராசகுலசிங்கம் (வைத்திலிங்கம் அன் சன்-சங்கானை), சண்முகராசா (Canada), புவனேஸ்வரி (Australiya), காலஞ்சென்ற ஜெயரத்தினம் மற்றும் சிறீதரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், மகேஷன், ஜெயந்தி, தேவகி (மாலைதீவு), சுஜாத்தா (Canada), மதிவதனா (Canada), சர்மிளா (Canada), ஜெயவதனன் (Canada), ஜெயகீதா (Canada), ஜெயதீபன் (Canada), ஜீவனா (Australiya), சசிலேகா (Australiya), நவநீதா (Australiya), கிசாங்கரன் (Australiya) ஆகியோரின் பேரனும், பானுகரன், உமாகரன், திவ்யா, ஆதவன் (Canada), ஆரபி (Canada), அஸ்விகா (Canada), அஷானா (Canada), மகிஷாளினி, யஸ்மிதா, சங்கவி (மாலைதீவு), தனிஷா (Australiya), சகேஸ் (Australiya) ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (24.05.2013) வெள்ளிக்கிழமை பி.ப 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விளாவெளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்,**
**இராசகுலசிங்கம், சிறீதரன், சண்முகராசா.**

**தொட்டிலடி, சங்கானை.**
**021 791 2336**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிக்குவார்களா சென்னை வீரர்கள்?




சூதாட்ட விவகாரத்தில் ஒரு மூத்த வீரர் உட்பட மொத்தம் சென்னை அணியின் மூன்று வீரர்கள் சிக்கவுள்ளனர் என்றும் விரைவில் அவர்கள் கைதாகலாம் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆறாவது பிரீமியர் கிரிக்கெட் தொடரில் மூன்று போட்டிகளில் ஆட்டநிர்ணயம் செய்த ராஜஸ்தான் அணி வீரர்கள் ஸ்ரீசாந்த், சண்டிலா, அங்கித் சவான் ஆகியோர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளனர். அதன் பின் இவ்விவகாரத்தில் தினமும் ஒரு புதுத்தகவல் வெளியாகி வருகிறது.

இதுவரை மொத்தம் 21க்கும் மேற்பட்டோர் டில்லி பொலிஸாரிடம் சிக்கியுள்ளனர். இதனிடையே, ஆட்ட நிர்ணயம் குறித்து தனியாக விசாரித்து வரும் மும்பை பொலிஸ் மல்யுத்த வீரர், நடிகர் தாராசிங்கின் மகன் நடிகர் வின்டூ ரந்த்வாவைக் கைது செய்துள்ளனர்.

தற்போது அவர் கொடுத்த தகவலின் படி சென்னை அணியின் தலைமைச் செயலதிகாரி குருநாத் மெய்யப்பன் விசாரணைக்குட்படுத்தபடவுள்ளார்.

இந்தநிலையில் ஆட்டநிர்ணயத்துடன் தொடர்புடைய மூன்று சென்னை அணி வீரர்கள் குறித்த தகவல்களை வின்டூ பொலிஸாரிடம் வழங்கியுள்ளார் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து மும்பை பொலிஸ் துணை ஆணையாளர் ஹிமான்சு ராய் கூறுகையில்,

''சூதாட்டத்தில் ஈடுபட்டதாக மூன்று சென்னை வீரர்களின் பெயரை, வின்டூ எங்களிடம் தெரிவித்தது உண்மைதான். இதில் ஒரு முன்னணி வீரரும் உள்ளார். எனவே அதன் நம்பகத்தன்மை குறித்து தீவிரமாக விசாரித்து வருகிறோம். அது யார் யார் என்பது குறித்து இப்போதைக்கு தெரிவிக்க முடியாது.''- என்றார். (ற)

# பாகிஸ்தான் நடுவர் அதிரடியாக நீக்கம்

## சூதாட்டக் குற்றச்சாட்டே காரணம்



இங்கிலாந்தில் நடைபெறவுள்ள சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் இருந்து நடுவர் அசத் ரௌப் நீக்கப்பட்டுள்ளார். இந்த அறிவித்தலை சர்வதேசக் கிரிக்கெட் சபை விடுத்துள்ளது.

இந்தியாவில் தற்போது இடம்பெற்றுவரும் இந்தியன் பிரீமியர் லீக் தொடரில் அசத் ரௌப் சூதாட்டக்காரர்களோடு தொடர்புகளைக் கொண்டிருக்கலாம் என்று வெளியாகியிருந்த ஊடகத் தகவல்களைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அசத் ரௌப்கின் நடவடிக்கைகள் தொடர்பாக மும்பைப் பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர். அதன் பின்னணியிலேயே சர்வதேசக் கிரிக்கெட் சபை இந்த முடிவை எடுத்துள்ளது.

சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளது நலனைக் கருத்திற் கொண்டும், அசத் ரௌப் இன் நலனைக் கருத்திற் கொண்டும் இந்த முடிவு எடுக்கப்பட்டது என்று சர்வதேசக் கிரிக்கெட் சபை விடுத்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானைச் சேர்ந்தவரான அசத் ரௌப் மீது, ஏற்கனவே இந்தியாவைச் சேர்ந்த நடிகையான லீனா கபூரை ஏமாற்றியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

# சூதாட்ட விவகாரம் இறப்புக்குச் சமமானது

## ராஜஸ்தான் அணித்தலைவர் டிராவிட்

சூதாட்டத்தால் எங்கள் அணி இக்கட்டான நிலையில் உள்ளது, இது இறப்பிற்கு சமமானதாகும் என்று தெரிவித்துள்ளார் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் தலைவர் ராகுல் டிராவிட்.

சூதாட்டம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே டிராவிட் இவ்வாறு தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

''சூதாட்ட விவகாரம் மிகப்பெரிய பின்னடைவை எங்கள் அணிக்கு ஏற்படுத்தி உள்ளது. இது போன்ற அனுபவத்தை நான் ஒரு போதும் சந்தித்தது இல்லை. சில வகையில் இந்த சம்பவம் இறப்பு போன்ற இழப்பாகும். சூதாட்டத்தால் கோபம், சோகம், ஏமாற்றம் ஆகியவற்றை ஒன்றுசேர அனுபவித்தோம்.

கடந்த 2 ஆட்டங்களில் மிகுந்த குழப்பத்துடன் இருந்தோம். வீரர்கள் ஒருவருக்கொருவரும், பயிற்சியாளர்களுடனும் திறந்த மனதுடன் பேசி உணர்ச்சிகளை பகிர்ந்து கொண்டோம். தற்போது அணி வீரர்கள் ஓரளவு சகஜ நிலைக்குத் திரும்பியுள்ளார்கள்'' என்று தெரிவித்தார் ராகுல். (ற)

# தங்கக் காலணி விருதைப் பெற்றார் ராபின் வான் பேர்ஸி

இங்கிலாந்து பிரீமியர் லீக் கால்பந்து தொடரின் இவ்வருடத்திற்கான தங்க சப்பாத்து விருதை மான்செஸ்டர் யுனைடெட் அணியின் ராபின் வான் பேர்ஸி பெற்றுள்ளார்.


இது இவர் பெற்றுக்கொள்ளும் இரண்டாவது விருதாகும்.

கடந்த வருடத்தில் ஆர்சனல் சார்பாகப் போட்டிகளில் பங்குபற்றிய ராபின் வான் பேர்ஸி 38 போட்டிகளில் 30 கோல்களைப் பெற்று இந்த விருதை வென்றிருந்தார்.

இம்முறை மான்செஸ்டர் யுனைடெட் சார்பாக 38 போட்டிகளில் அவர் 26 கோல்களைப் பெற்றிருந்தார்.

அவர் இம்முறை லிவர்பூல் அணியின் லூயிஸ் சுவராஷ் இன் 23 கோல்கள், டொட்டன்ஹாம் ஹொட்ஸ்பர்ஸ் அணியின் கரத் பேலின் 21 கோல்களை முந்திக் கொண்டு அதிக கோல்களைப் பெற்றிருந்தார்.

இம்முறை இங்கிலாந்து பிரீமியர் லீக் சாம்பியன் பட்டத்தையும் ராபின் வான் பேர்ஸியில் மான்செஸ்டர் யுனைடெட் அணியே வெற்றி கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)




## கெவின் ஓ பிரையன் அதிரடி

# அயர்லாந்து வென்றும் சமநிலை




அயர்லாந்துக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நடைபெற்ற ஒருநாள் ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

அயர்லாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 2 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் பங்கேற்கின்றது.

டப்ளினில் இடம்பெற்ற முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

பாகிஸ்தான் அணி 13.3 பந்துப்பரிமாற்றங்களில் ஓர் இலக்கை இழந்து 41 ஓட்டங்களைப் பெற்றிருந்த போதும், 22.4 பந்துப் பரிமாற்றங்களில் ஓர் இலக்கு இழப்புக்கு 87 ஓட்டங்களைப் பெற்றிருந்த போதும், 30.4 120 ஓட்டங்களைப் பெற்றிருந்த போதும் மழை குறுக்கிட்டது. மூன்றாவது குறுக்கீட்டின் பின்னர் போட்டி 47 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட ஆட்டமாக மாற்றப்பட்டது.

பாகிஸ்தான் அணி 47 பந்துப்பரிமாற்றங்களின் முடிவில் 5 இலக்குகளை இழந்து 266 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் [illegible] 113 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 122 ஓட்டங்களையும், அசத் சபீக் 89 பந்துகளில் 84 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அயர்லாந்து அணி சார்பாக அலெக்ஸ் [illegible] கெவின் ஓ பிரையன் [illegible] தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

டக் வேர்த் லூயிஸ் முறையின் அடிப்படையில் அயர்லாந்து அணியின் வெற்றி இலக்காக 47 பந்துப் பரிமாற்றங்களில் 276 ஓட்டங்கள் என நிர்ணயிக்கப்பட்டது.

276 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி, 47 பந்துப்பரிமாற்றங்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 275 ஓட்டங்களைப் பெற்றுச் சமநிலை முடிவைப் பெற்றது.

இறுதி ஓவரை சயீட் அஜ்மல் வீச, 3 பந்துகளில் 13 ஓட்டங்கள் தேவைப்பட்டன. 4ஆவது பந்து 6 ஓட்டங்களுக்கும், அடுத்த பந்து 2 ஓட்டங்களுக்கும் செல்ல, இறுதிப் பந்தில் 5 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி, 4 ஓட்டங்கள் பெற்றால் சமநிலை என்ற நிலையில் கெவின் ஓ பிரையன் 4 ஓட்டங்களைப் பெற்றார்.

துடுப்பாட்டத்தில் அயர்லாந்து அணி சார்பாக போல் ஸ்ரேர்லிங் 107 பந்துகளில் 103 ஓட்டங்களையும், கெவின் ஓ பிரையன் 47 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 84 ஓட்டங்களையும், எட் ஜொய்ஸ் 59 பந்துகளில் 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக மொஹமட் ஹபீஸ், ஜுனைட் கான் இருவரும் தலா 2 இலக்குகளையும், மொஹமட் இர்பான் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக கெவின் ஓ பிரையன் தெரிவானார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைவாணி வி.க. கிரிக்கெட் சுற்றுத் தொடர்

## காந்தியூர் நியூஸ்ராரை வீழ்த்தி கொட்டடி இளங்கதிர் சம்பியன்

யாழ்ப்பாணம், மே 23
கோண்டாவில் கலைவாணி விளையாட்டுக் கழகமும், கலைவாணி சனசமூக நிலயமும் இணைந்து நடத்திய கிரிக்கெட் சுற்றுத் தொடரில் கொட்டடி இளங்கதிர் விளையாட்டுக் கழகம் 8 இலக்குகளால் வெற்றி பெற்றுச் சம்பியனானது.
கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சுன்னாகம் காந்தியூர் நியூஸ்ரார் விளையாட்டுக் கழகமும், கொட்டடி இளங்கதிர் விளையாட்டுக் கழகமும் மோதின.
முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸ்ரார் அணி 11.2 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 51 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.
52 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கொட்டடி இளங்கதிர் அணி 9 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.
ஆட்டநாயகனாக இஷாமும், தொடர் ஆட்டநாயகனாக அதே அணியைச் சேர்ந்த ஜெயமயூரனும் தெரிவு செய்யப்பட்டனர்.
இந்தப் போட்டியில் வெற்றி அணிகளுக்கான வெற்றிக் கிண்ணங்களை நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பொ.சந்திரநாதன் வழங்கிக் கௌரவித்தார். (ற-400-16)



வவுனியா மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில், கிடாச்சூரி கருவேப்பங்காடு அ.த.க. பாடசாலை அணி 17 வயதுப் பிரிவில் சம்பியனாகத் தெரிவாகியது. (ற-422)

### மாட்டு வண்டி சவாரி நாளை

யாழ்ப்பாணம், மே 25
பொன்னாலை விவசாயிகள் நடத்தும் மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி நாளை பி.ப. 2 மணிக்கு பொன்னாலை மான்பாய்ந்த தரவையில் நடைபெறவுள்ளது.
ஏ, பி, சி, டி என நான்கு பிரிவுகளில் இந்தப் போட்டி நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.(த)

### இன்றைய ஆட்டம்

மாங்குளம், மே 25
குஞ்சர்கடை கொலின்ஸ் வி.கழத்தால் நடத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுத் தொடரில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம்:
பி.ப. 4 மணி
ஊறெழு றோயல் வி.க. எதிர் மானிப்பாய் ரெட்றேஞ்சர் வி.க. (ற-422)

★★★

யாழ்ப்பாணம் மே24
ஈ.எஸ். பேரம்பலம் நிறுவனத்தின் அனுசரணையுடன் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடந்தும் 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுத் தொடரில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம்:
காலை 8.30 மணி (யாழ். இந்துக்கல்லூரி மைதானம்)
சென்றல்லைட் வி.க. எதிர் ஓல்கோல்ட் வி.க.
மதியம்1.30 மணி
ஜொலிஸ்ரார் வி.க. எதிர் திருநெல்வேலி கி.க. (ற-23)

ஜொலிஸ்ரார் வெற்றிக்கிண்ணத் தொடர்

## ஸ்ரான்லி வி.கவிடம் வீழ்ந்தது நியூஸ்ரார்

**இலகுவான இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய நியூஸ்ரார் அணிக்கு வசீகரனின் பந்து வீச்சுப் பெரும் தடையாக இருந்தது.**

யாழ்ப்பாணம், மே 25
வசிகரனின் சிறப்பான பந்து வீச்சின் உதவியுடன் நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணியைவீழ்த்தியதுஸ்ரான்லி விளையாட்டுக்கழக அணி.
ஈ.எஸ்.பி. பேரம்பலம் நிறுவனத்தின் அனுசரணையுடன் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ண 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுத் தொடர் நடைபெற்று வருகின்றது.
நேற்று வெள்ளிக்கிமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஸ்ரான்லி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி விளையாட்டுக் கழக அணி 22.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.
லெனின் 31 ஓட்டங்களையும், கஜதீபன் 17 ஓட்டங்களையும், இனோசன் 9 ஓட்டங்களையும், றஜீ 8 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் நியூ ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி சார்பில் பந்து வீசி 15 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், மோகனதீபன் 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 27 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், சயந்தன் 3 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 24 ஓட்டங்க ளைக் கொடுத்து ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
128 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நியூ ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தினருக்கு, ஸ்ரான்லி அணி வீரர் வசீகரனின் பந்து வீச்சு சவாலாக விளங்கியது. இலக்குகள் சீரான இடைவெளிகளில் விழ, சகல இலக்குகளையும் இழத்து 125 ஓட்டங்களை மட்டுமே நியூஸ்ரார் அணி பெற்றது.
கஜேந்திரன் 31 ஓட்டங்களையும், றொசன் 32 ஓட்டங்களையும், மோகனகுமார் 20 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர்.
பந்துவீச்சில் ஸ்ரான்லி விளையாட்டுக் கழக அணி சார்பில் வாகீசன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 34 ஓட்டங்களைக் கொடுத்து 5 இலக்குகளையும், இனோசன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 2 இலக்குகளையும், கஜதீபன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 8 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் வீழ்த்தினர். (ற-23)



வசீகரன்

நக்கீரன் வி.க. உதைபந்தாட்டத் தொடர்

## இறுதியில் மோதுகின்றன பொமர்ஸ், டைமன்ஸ்

யாழ்ப்பாணம், மே 25
பருத்தித்துறை உதைப்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் வடக்கு நக்கீரன் விளையாட்டுக்கழகம் நடத்திய உதைப்பந்தாட்ட சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழக அணியும், வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணியும் மோதவுள்ளன.
தொடரின் முதலாவது அரையிறுதியாட்டத்தில் வதிரி பொமர்ஸ் அணியை எதிர்த்து அல்வாய் மனோகரா அணி களமிறங்கியது. அதில் வதிரி பொமர்ஸ் அணி 4:0 என்ற ரீதியில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணியும், வதிரி டைமன்ஸ் அணியும் மோதின. அதில் டைமன்ஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
சுற்றுத் தொடரின் இறுதியாட்டம் எதிர்வரும் ஜூன் மாதம் 2 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ற-23)

## வீராங்கனைகள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், மே 25
இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தால் நடத்தப்பட்ட கனிஷ்ட பிரிவு தடகளப் போட்டிகளில் வவுனியாமாவட்ட மெய்வன்மை சங்கத்தின் சார்பில் பங்குற்றி பதக்கம் பெற்ற வீராங்கனைகள் இன்று கௌரவிக்கப்படவுள்ளனர்.
வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள கௌரவிப்பு நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ள வீராங்கனைகளின் விவரம்:



ஆர்.தர்சிகா
20 வ.பி. - சம்மட்டி எறிதல் தங்கப்பதக்கம், தட்டெறிதல் வெள்ளிப் பதக்கம், குண்டு எறிதல் வெண்கலப்பதக்கம்



கே.கனகேஸ்வரி
16 வ.பி. - 300 மீ. வேகநடை தங்கப்பதக்கம்



கே.கோகிலவாணி
20 வ.பி. - 10,000 மீ. ஓட்டம் வெண்கலப் பதக்கம்



வீ.மேனகா
16 வ.பி. - 3000 மீ. வேகநடை வெண்கலப் பதக்கம்



கே.லேகாஜினி
23 வ.பி. - 400 மீ. ஓட்டம் வெள்ளிப் பதக்கம்

வீ.டி.ஜெயரட்ணம் வெற்றிக் கிண்ண கிரிக்கெட் தொடர்

## 7 இலக்குகளால் ஓல்கோல்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், மே 25
யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் நடத்தும் வீ.டி. ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணத்துக்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிகெட் சுற்றுத் தொடரில் ஓல்ட் கோல்ஸ் விளையாட்டுக் கழக அணி 7 இலக்குகளால் வெற்றிபெற்றுக் காலிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது.
கடந்தவாரம் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ஓல்ட்கோல்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அரியாலை சென்றல் விளையாட்டுக் கழக அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை சென்றல் விளையாட்டுக் கழக அணி 30.1 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 148 ஓட்டங்களைப் பெற்றது.
அதில் நிரோஸன் 15 ஓட்டங்களையும், துவாரகன் ஆட்டம் இழக்காமல் 23 ஓட்டங்களையும், சிந்துஜன் 31 ஓட்டங்களையும், வினோதன் 33 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.
பந்து வீச்சில் ஓல்ட்கோல்ஸ் விளையாட்டுக் கழக அணி சார்பில்தீலிபன் 3 இலக்குகளையும் நிரோஸன் 2 இலக்குளையும், கஜேந்திரன் 4 இலக்குகளையும் வீழ்த்தினர்.
149 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஓல்ட்கோல்ஸ் விளையாட்டுக்கழக அணி 25.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.
சிறிகுகன் 65 ஓட்டங்களையும், தீலிபன் 16 ஓட்டங்களையும், நிரோஸன் ஆட்டமிழக்காமல் 48 ஓட்டங்களையும் தமது அணி சாார்பாக பெற்றனர்.
பந்துவீச்சில் அரியாலை சென்றல் விளையாட்டுக் கழக அணி சார்பில் துவாரகன் 2 இலக்குகளையும், சிந்துஜன் ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ற-23)

## சிறார்களின் விளையாட்டு விழா இன்று

யாழ்ப்பாணம், மே 25
'லிட்டில் சூட்டிஸ் மோன்டசிறி' சிறார்களின் விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பழைய பூங்காவில் இடம் பெறவுள்ளது .
விளையாட்டு விழாவிற்கு பிரதம விருத்தினரக யாழ். பல்கலைக்கழகத்தின் உடற்கல்வி பிரிவின் போதனாசிரியை செல்வி ராதை அருளம்பலமும், சிறப்பு விருத்தினராக யாழ். கல்வி வலய ஆரம்ப கல்விக்கான சேவைக்கால ஆலோசகர் திருமதி கோகிலா தேவராஜாவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் பாடசாலைகளை கண்காணிக்க பொறிமுறை

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,மே 25
78 தனியார் பாடசாலைகளின் செயற்பாடுகள் மீதான கண்காணிப்பை அதிகரிப்பதற்கான பொறிமுறையை அரசு விரைவில் அறிமுகம் செய்யும் என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இவ்வாறான பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்காக அரசு ஒரு பில்லியன் ரூபா வரை செலவழிக்கின்றது. அதனைவிட அதிகளவில் இலவச புத்தகங்களையும் வழங்குகின்றது.



எனினும் அவர்களை கண்காணிப்பதற்கான ஏற்பாடுகள் எதுவும் இல்லை என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தப் பாடசாலைகளில் ஒரு தவணைக் கட்டணமாக 30 ஆயிரம் ரூபா முதல் 40 ஆயிரம் ரூபா வரையும் அறவிறப்படுகின்றது என்று அவர் தெரிவித்தார்.

இவ்வாறான பாடசாலைகளில் 1,25,000 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். நாங்கள் ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்கின்றோம்; இலவச புத்தகங்களையும் கொடுக்கின்றோம்.

எனினும் பெற்றோர் அளவுக்கு அதிகமான கட்டணத்தை செலுத்த வேண்டியுள்ளது; அவை தொடர்பில் யாரும் பேசுவதில்லை; எதிர்க்கட்சியினர் அரச பாடசாலைகளை மட்டும் விமர்சிக்கின்றனர் என்று அவர் சுட்டிக் காட்டினார்.

இந்தப் பாடசாலைகள் குறித்து அமைச்சர் தினேஷ் குணவர்தன தலைமையிலான குழு அறிக்கையொன்றை தயாரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)



'நாம் வளர்ப்போம் நாட்டைக் காப்போம்' திட்டத்தின் கீழ் பத்தரமுல்லை, கிம்புலாவல பகுதியில் தேசிய விளைவு மாதிரி நாற்று மேடையில் நாற்று நடும் நிகழ்வில் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ கலந்துகொண்டு நாற்று நட்டு வைத்தார்.

# 20 லட்சம் நவீன 'ஸ்மார்ட் கார்ட்' அனுமதிப்பத்திரங்கள் விநியோகம்

கொழும்பு,மே 25
மூன்றாண்டு காலத்துள் 20 லட்சம் நவீன 'ஸ்மார்ட் கார்ட்' சாரதி அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன என்று மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் எஸ்.எச். ஹரிச்சந்திர தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
பழைய முறைமையின் கீழ் விநியோகிக்கப்பட்டுள்ள 38 லட்சம் சாரதி அனுமதிப் பத்திரங்களுக்குப் பதிலாகவே இந்த நவீன 'ஸ்மார்ட் கார்ட்' அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. அதற்கமை அடுத்து வரும் இரண்டாண்டுகளில் மேலும் 16 லட்சம் நவீன 'ஸ்மார்ட் கார்ட்' சாரதி அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்படவுள்ளன.



இந்த 'ஸ்மார்ட் கார்ட்' சாரதி அனுமதிப் பத்திரங்களில் சாரதியின் தனிப்பட்ட விவரங்கள் இரத்த மாதிரி போன்றே கல்வித் தகைமைகளும் உள்ளடக்கப்படுவதோடு அபிவிருத்திப் புள்ளிகள் குறிப்பிடப்படுவதற்கான பகுதியொன்றும் ஒதுக்கப்பட்டுள்ளது.

'ஸ்மார்ட் கார்ட்' சாரதி அனுமதிப்பத்திரம் ஒன்று விநியோகிக்கப்படுவதற்கு ஆயிரத்து 750 ரூபா முதல் 2 ஆயிரத்து 250 ரூபா வரையிலான கட்டணம் அறவிடப்படுகிறது.

'ஒன்லைன்' முறைமையின் கீழும் இந்தச் சாரதி அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.- என்றார்.

'ஸ்மார்ட் கார்ட்' சாரதி அனுமதிப்பத்திர விநியோகம் கடந்த 2009 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(ச-22)

# விவசாய அனுபவம் மாலைதீவுடன் பகிர்வு

கொழும்பு,மே 25
இலங்கை கொண்டுள்ள விவசாய அனுபவத்தை மாலைதீவுடன் பகிர்ந்துகொள்ள விவசாயத்துறை அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதற்கமைய மரக்கறி வகைகள், பழவகைகள் செய்கை



பண்ணப்படும் போது தேவைப்படும் தொழில் நுட்ப ஆலோசனைகள்,வீட்டுத் தோட்டச் செய்கை, பூந்தோட்டப் பயிர்ச்செய்கை உள்ளிட்ட நகர்புற விவசாயம் சம்பந்தமாக இலங்கை பெற்றுள்ள அனுபவங்கள் மாலைதீவுடன் பகிர்ந்து கொள்ளப்படும் என்று விவசாய அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார். (ச-22)

# கூட்டமைப்பு வெற்றி பெற்றால் மோசமான விளைவு ஏற்படும்

## அரசுக்கு பாதுகாப்புச் செயலர் எச்சரிக்கை

கொழும்பு,மே 25
வடக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றால், மோசமான விளைவுகள் ஏற்படும் என்று இலங்கை அரசை எச்சரித்துள்ளார் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ.

வடக்கு மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னர், மாகாணங்களின் காணி, பொலிஸ் அதிகாரங்களை பறிக்கும் வகையில், 13 ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாமல் செய்யும் திட்டம் எதுவும் அரசுக்கு இல்லை என்று அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்திருந்தார்.

இதுகுறித்து கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவித்தபோதே கோத்தபாய ராஜபக்ஷ இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பாதுகாப்புச் செயலர் என்ற வகையில், மாகாணசபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது மோசமான தாக்கங்களை ஏற்படுத்தும் என்று அரசை எச்சரிப்பது எனது பொறுப்பு.

இன்னமும் பிரிவினைவாத நிகழ்ச்சி நிரல் தொடர்கின்ற சூழலில் அவர்களின் கைகளில் பொலிஸ் அதிகாரங்கள் கிடைப்பது தேசிய பாதுகாப்புக்கு கடுமையான அச்சுறுத்தலாக அமையும்.

அனைத்துலக, உள்நாட்டு அழுத்தங்களுக்கு அடிபணிந்து போகாமல் அரசு 13 ஆவது திருத்தம் குறித்து கவனமாகப் பரிசீலிக்க வேண்டும்.

வடக்கு மாகாணசபை நிர்வாகம் ஈழத் திட்டத்தை தொடரக் கூடும். வடக்கு மாகாணசபைக்குத் தேர்தலை நடத்த வேண்டிய தேவை உள்ளது. ஆனால் விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு நாம் கடுமையான விலை கொடுத்துள்ள நிலையில், இது இன்னொரு போர்ச் சூழலை ஏற்படுத்துவதற்கான எமது முட்டாள்தனமான செயலாக அமையும்.

எனது விருப்பத்தை அரசின் மீது திணிக்க முடியாது. ஆனால், 13 ஆவது திருத்தத்தின் குறைபாடுகள் தொடர்பாக அவர்களுக்கு எடுத்துக் கூறுவேன்.

அரசு உடனடியாக 13 ஆவது திருத்தம் குறித்து பரந்தளவிலான விவாதங்களை நடத்த வேண்டும்.

இந்த விவகாரம் தொடர்பாக பகிரங்க விவாதம் நடத்தப்பட வேண்டும். வடக்கு மாகாணத்துக்கு காணி, பொலிஸ் அதி



காரங்களை வழங்குவது பாதுகாப்புக்கு பிரதான சவாலாக அமையக் கூடும்.

அரசு மேற்கொள்ளக் கூடிய தீவிரவாத எதிர்ப்பு விசாரணைகளில், வடக்கில் உருவாகக் கூடிய முரண்பட்ட நிர்வாகம் ஒன்று தலையிடக் கூடும்.

விடுதலைப் புலிகள் இந்திய - இலங்கை உடன்பாட்டை ஏற்றுக் கொண்டிருந்தார்களேயானால் மிகச் சுலபமாக ஈழத்தை அடைந்திருக்க முடியும்.

தனியான நிர்வாகத்தை கோருவதற்கு வசதியான 13 ஆவது திருத்தத்தை அவர்கள் அப்போது சரிவரப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டனர்.- என்றார். (ச)

### போர் வெற்றி விழாவில் படகு கவிழ்ந்தமை குறித்து

# கடற்படைத் தளபதியிடம் விளக்கம் கேட்கிறார் கோத்தா

கொழும்பு,மே 25
காலி முகத்திடலில் கடந்த 18 ஆம் திகதி நடைபெற்ற போர் வெற்றி விழா அணி வகுப்பின் போது, இலங்கை கடற்படைப் படகு ஒன்று கடலில் மூழ்கிய சம்பவம் தொடர்பாக இலங்கை கடற்படைத் தளபதியிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது.

இலங்கை கடற்படையைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக, பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவால் விளக் கம் கோரப்பட்டுள்ளது என்று ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

பாதுகாப்புச்செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, இலங்கை கடற்படைத் தளபதியிடம் விளக்கம் கோரியுள்ளார்.

வெற்றி கொண்டாட்டங்களின் போது கடற்படையைச் சேர்ந்த ஒருவரின் உயிரிழப்பு, கடற்படைக்கு ஒரு கரும்புள்ளியாக அமைந்துள்ளது என்று பாதுகாப்புச் செயலர் தெரிவித்தார். (ச)



# உயிரினங்களை பாதுகாக்க புதிய சட்டம்

கொழும்பு,மே 25
இலங்கைக்கு உரித்தான தாவரங்கள் மற்றும் உயிரினங்களை கடத்தல்காரர்களிடமிருந்து பாதுகாப்பதற்கு புதிய சட்டங்களை அறிமுகப்படுத்த வனஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதற்கமைய புதிய சட்டங்களை வகுக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அமைச்சர் விஜித் விஜயமுனி டி சொய்சா குறிப்பிட்டார்.

இலங்கைக்கே உரித்தான உயிரினங்கள் மற்றும் தாவரங்களை வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்வதற்கு முயற்சித்த பலர் அண்மைக்காலமாக கைது செய்யப்பட்டனர். ஒரு சிலர் வனஜீவராசிகள் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புடனும் இத்தகைய சட்ட விரோத நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தமை தெரிய வந்துள்ளது என்று அவர் கூறினார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசாரணையில் பொய்யான தகவல் கல்வி அதிகாரிகளிடம் விளக்கம்

## மனித உரிமைகள் ஆணைக்குழு கோரியது

யாழ்ப்பாணம்,மே 25

அதிபர் நேர்முகத் தேர்வு தொடர்பான மனித உரிமைகள் ஆணைக் குழுவின் விசாரணையில் பொய்யான தகவல்களை வழங்கிய வலயக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கு எதிராக விளக்கம் கோரியுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப் பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

அத்துடன் குறித்த விடயம் தொடர்பில் விசாரணைகளை நடத்துமாறு வடமாகாணப் பிரதம செயலாளருக்கும், கல்வி அமைச்சின் செயலாளருக்கும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி மட்டுவில் தெற்கு அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் 7 வருடங்களாகக் கடமை நிறைவேற்று அதிபராகக் கடமையாற்றிய வி.சுந்தரலிங்கம் தான் தென்மராட்சி கல்வி வலயத்தால் அதிபர் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படாமல் பழிவாங்கப்படுவதாகத் தெரிவித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்தியக் கிளையில் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் முறைப்பாடு செய்திருந்தார்.

இதன் பின்னர் இடம்பெற்ற விசாரணையின் போது, தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரினால் குறித்த நபரின் பெயர் நேர்முகத் தேர்வுக்கு கல்வி அமைச்சுக்கு அனுப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்து.

இது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் கல்வி அமைச்சில் ஆராய்ந்தபோது தென்மராட்சி கல்வி வலயத்தினால் 2011ஆம் ஆண்டு 16 பேரின் பெயர்ப்பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது. இதில் வி.சுந்தரலிங்கத்தின் பெயர் இடம்பெறவில்லை.

இதனையடுத்து மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணையில் பொய்யான தகவல்களை வழங்கிய தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கு எதிராக ஏன் சட்ட நடவடிக்கை எடுக்கக்கூடாது எனக் கோரி விளக்கம் அனுப்பப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த அதிபர் மீது இடம்பெற்ற பழிவாங்கல் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்த பிரதம செயலாளர், கல்வி அமைச்சின் செயலாளருக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. (த-5)





வெசாக் பண்டிகையை ஒட்டி இராணுவத்தினர் யாழ்.பொது நூலகத்துக்கு முன்பாக அலங்கார தோரணங்களைக் கட்டியும், பந்தல்கள் அமைத்தும் அலங்காரம் செய்துள்ளனர். வடமாகாண ஆளுநர், யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி ஆகியோர் இந்நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர். (4)

# ஆள்களைக் கடத்திய 4 தமிழர்கள் டொமினிக்கன் குடியரசில் கைது

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னாய்வுத் திணைக்களத்தின் பேச்சாளர் மக்சிமோ முனோஸ் தெரிவித்துள்ளார்.

இந்தக் குழுவின் தலைவராகச் செயற்பட்டவர் கனேடியக் குடியுரிமை பெற்றவரான 42 வயதுடைய கருணாநிதி நல்லதம்பி என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் டொமினிக்கன் குடியரசின் வடக்குப் பகுதியில் உள்ள கனேடிய, ஐரோப்பிய சுற்றுலாப் பயணிகள் மத்தியில் பிரபலமான கரையோர நகரான சொசுவலாவில் வசித்து வந்தவராவார்.

நல்லதம்பி கனடாவில் கடவுச் சீட்டுகளைப் பெறுவதற்குப் பொறுப்பாக இருந்ததுடன் அதில் மாற்றங்களைச் செய்து டொமினிக்கன் குடியரசுக்கு வரும் குடியேற்றவாசிகளுக்கு வழங்கியுள்ளார்.

பெரும்பாலான குடியேற்றவாசிகள் குற்றப் பின்னணியைக் கொண்டவர்கள் என்றும் இவர்கள் அமெரிக்கா அல்லது கனடா செல்வதற்கு முன்னர் இரண்டு மாதங்கள் வரை நல்லதம்பியின் வீட்டில் தங்குவதற்கு இடமளிக்கப்பட்டதாகவும் டொமினிக்கன் குடியரசு தேசிய புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் பிடெல் கல்காங்கோ தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட ஏனைய மூன்று சந்தேகநபர்களும், கோகுலன் செல்வராசா இலங்கைக் கடவுச்சீட்டைக் கொண்டவர் என்றும், டேவிட் கிறிஸ்ரி மற்றும் சிறிராம் கண்ணன் ஆகிய இருவரும் கனடாவின் போலிக் கடவுச் சீட்டை வைத்திருந்ததாகவும் அதிகாரிகள் கூறியுள்ளனர். (த)

# 21 இலங்கையர்கள் கேரளாவில் கைது

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளப்பட்டுள்ளது. 7 ஆண்கள், 6 பெண்கள் மற்றும் 8 சிறுவர் கள் நியூ கொச்சின் பகுதி ஹோட்டல் ஒன்றில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் சென்னையிலிருந்து சென்றுள்ளனர். சுபாஷ் எனப்படும் முகவர் இவர்கள் ஒவ்வொருவரிடமிருந்து தலா ஒரு லட்சம் ரூபா பணத்தை நேற்றுமுன்தினம் மாலை பெற்றுக் கொண் டார் எனத் தெரியவந்துள்ளது.

தமிழகத்திலுள்ள நான்கு முகாம்களைச் சேர்ந்த அகதிகளே இவ் வாறு பிடிபட்டுள்ளனர். இவர்கள் மீன்பிடி படகு மூலம் ஆஸ்திரேலியா செல்ல முற்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் நேற்றுச் சென்னைக்கு அழைத்துச் செல்லப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். (த)

# வெசாக் தினத்தில் பிக்கு தீக்குளிப்பு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

போவத்தை இந்திரசார தேரர் என்பவரே பெற்றோல் ஊற்றி தனக்குத்தானே தீ மூட்டிக் கொண்டுள்ளார். இந்த சம்பவத்தால் தலதா மாளிகைக்கு முன்னால் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

வழிபாடுகளுக்கு வந்திருந்தவர்கள், கடும் எரிகாயங்களுக்கு உள்ளாகியிருந்த பிக்குவை உடன் கண்டி வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்றனர். எனினும், அவரின் உடல் நிலை மோசமாக இருந்ததால் மேலதிகசிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் கண்டிபொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் பிக்குவின் நிலை மிக மோசமாகவுள்ளது என வைத்தியசாலை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

# '13' ஒழிப்புக்கு தேரர் எதிர்ப்பு ஹெல உறுமயவுக்குள் பிளவு

கொழும்பு, மே 25

அரசமைப்பிலிருந்து 13 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்தி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி அரசின் பங்காளியான ஜாதிக ஹெல உறுமய கொண்டு வரவுள்ள தனிநபர் பிரேரணைக்கு எதிராக அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான வண. எல்லாவல மேதானந்த தேரர் போர்க்கொடிதூக்கியுள்ளார்.

நாட்டுக்கு சமாதானத்தைப் பெற்றுத் தந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக முன்னெடுக்கப் படும் எந்தவொரு நடவடிக்கைக்கும் தான் ஆதரவளிக்கப்போவதில்லை என்றும் அவர் திட்டவட்டமாக இடித்துரைத்துள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு '13' இற்கு அப்பால் சென்று அரசியல் தீர்வைக்காண்பதற்குத் தயார் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ள நிலையில், அதற்கு எதிரான வகையில் முன்னெடுக்கப் படும் '13' ஒழிப்புச் செயற்பாடுகளை கோடிகாட்டியே எல்லாவல தேரர் மேற்படிக் கருத்தைவெளியிட்டுள்ளார்.

அத்துடன், 13 விவகாரம் தொடர்பில் தமது கட்சி கொண்டுவரவுள்ள பிரேரணை குறித்து தனக்கு எதுவுமே தெரியாது என்று, '13' விவகாரம் சம்பந்தமாக 'உதயன்' வினவிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் அவர் குறிப்பிட்டார்.

இதன்படி, 13 விடயத்தில் தற்போது ஜாதிகஹெலஉறுமயவுக்குள் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது என்பதை ஊகிக்கக் கூடியதாகவுள்ளது.

குறிப்பாக ஜூன் மாதம் முதல்வார நாடாளுமன்ற அமர்வின்போது ஹெல உறுமயவினால் சமர்ப்பிக்கப்படவுள்ள '13'ஒழிப்புப்பிரேரணை விடயத்தில் அக்கட்சியின் எம்.பியான எல்லாவெல மேதானந்த தேரர் எதிர்ப்பை வெளியிடும் முகமாக நடுநிலை வகிப்பார் என்றும் அறியமுடிகின்றது.

அதேவேளை, இந்தப் பிரேரணை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் அதனைத் தோற்கடிப்பதற்கு சகல நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும் என அரசின் முக்கிய பங்காளிக் கட்சிகள் அறிவித்துள்ளன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈ.பி.டி.பி., மலையக மக்கள் முன்னணி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், இடதுசாரிகள் கட்சிகள் ஆகியனவே 13 இற்கு ஆதரவான நிலைப்பாட்டை அரசுக்குள் கொண்டுள்ளன. அமைச்சர் விமல் வீரவன்ஸவின் கட்சியான தேசிய சுதந்திர முன்னணி இதுவிடயத்தில் எதிர்ப்போக்கை கடைப்பிடித்து வருகின்றமை தெரிந்ததே.

இதற்கிடையில், நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டின்போது, 13 விடயம் சம்பந்தமாக அரசின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்திய அமைச்சரவைப் பதில் பேச்சாளரான அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா, தற்போதைய சூழ்நிலையில் 13 இல் மாற்றம் கொண்டுவரப்படாது என்றும், இதன் பிரகாரமே வடமாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என்றும் அறிவித்தார்.

# தம் புரண்டது 'ஹைஏஸ்' கொடிகாமத்தில் பெண் சாவு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மகேந்திரம் (வயது - 50), இவரது மகனும் சாரதியுமான மகேந்திரம் ஜெயந்தன் (வயது 24 மகளான சுஜித் ஜனனி (வயது - 27), அவரது கணவரான சுஜித் (வயது -30), இவரது பிள்ளையான சுஜித் கஜனின் (வயது - 2) சத்தியசீலன் துவாரகன் (வயது-23) ஆகிய 6 பேர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். விபத்துக்கான காரணம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-9)


Vinoth Curtains
யாழ். மண்ணில் அறிமுகமாகிறது
கேட்டின்ஸ் துறையில் நிபுணத்துவம் பெற்ற எம்மால்
கேட்டின்ஸ், மெத்தைவிரிப்பு, றெயிலிங், போல்ஸ்,
குசன் கவர், வேர்ட்டிக்கல் லைன்ஸ், வெனிசன் பிறிங்,
புளோர் காபற் வேலைகள் செய்து கொடுக்கப்படுகிறது.
தொடர்பு மைக்கல்
0774906323,
0777797532
இல-50/1,நாவலர் வீதி,
(மனோகரா தியேட்டர் அருகில்)
யாழ்ப்பாணம்.
(23933)(9.14)

கார் விற்பனைக்கு





வைத்தியர் பாவனையில் உள்ள. சகல வசதிகளும் கொண்ட புத்தம் புதிய Proton Persona 2011 கார் விற்பனைக்கு உண்டு. 14,000km.
விலை Rs.3,450,000 தொடர்பு: 0777286100.

சர்வதேச புலவர் திருமண சேவை
(1962லிருந்து சேவையில்)
உங்கள் திருமணங்களை
உங்கள் எண்ணப்படி
நிறைவேற்றிட இன்றே நாடுங்கள்.
உங்கள் வசதிக்காக எமது புதிய
அலுவலகம் சித்தன்கேணியிலும்
திறக்கப்பட்டுள்ளதை மகிழ்வுடன்
(36638) அறியத்தருகின்றோம்.
பிள்ளையார் கோயில் தெற்கு வீதி,
சித்தன்கேணி.
021 490 2843
0779323108
238, அரசடி வீதி, கந்தர்மடம்.

பதவி வெற்றிடம்
வரவேற்பாளர் : (ஆண் பெண்) அமைய அடிப்படை
வயது : 01.05.2013 அன்று 22 வயதுக்கு மேல் 50 வயதுக்குக் கீழ்.
கல்வித்தகைமை: க.பொ.த. உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி.
முக்கியமாக ஆங்கிலத்தில் கடிதங்கள் எழுதக்கூடிய வல்லமை கட்டாயத் தகுதியாகும்.
★ சிங்களம் ஓரளவு அறிந்திருத்தல் வேண்டும்
★ வதிவிடம்: யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் பிரதேசத்தில் ஆகக் குறைந்தது ஒரு வருடமாக வசிப்பவர்கள் மாத்திரம் நேர்முகத்தேர்வுக்கு தோற்றலாம்.
★ 3 வருட சேவை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுதல் வேண்டும்.
★ வெள்ளிக்கிழமை ஓய்வு நாளாகும். கடமை நேரம் காலை 8.30 முதல் பி.ப 5.30 வரை. மதிய உணவு ஒருமணி நேர ஓய்வளிக்கப்படும்.
★ (வயது, வசிக்கும் பிரதேசம், கல்வித்தகைமை என்பன நுணுக்கமாக பார்க்கப்படும் என்பதால் ஏனையோர் வீணான சிரமங்களைத்தவிர்க்கவும்)
நேர்முகத் தேர்வு: 26.05.2013 ஞாயிறு காலை 10 மணி
பொதுமுகாமையாளர்,
திசைகாட்டி பிறைவேற் லிமிட்,
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
(36844) (10,6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.05.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.